
Follow us:

வாரவெளியீடு
# தமிழன்
THAMILAN WEEKLY
තමිලන් සතිඅන්තය
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 59- பிலவ வருடம், ஆடி மாதம் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (08.08.2021) ஹிஜ்ரி - 1442, துல்ஹஜ் பிறை - 28 0115886187 பக்கங்கள் 20 + 8 விலை ரூ.40

'வெடி'மணியம்



இலங்கைத்தீவை "கொரோனா" கொஞ்சம் கொஞ்சமாய் தின்னும் போது;

சுகாதாரத்துறையினரும், வைத்தியர்களும் தலையில அடிச்சு சொன்னார்கள்.

"கைமீறிப் போனால் இந்தியா போல் நடுரோட்டில் நிண்டு அழவேண்டிய நிலை வரும். கவனம்" என்று ஆயிரம் தடவைகள் சொன்னார்கள்.

கேட்கவேயில்லை!

வைத்தியசாலைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதன் கொள்ளளவைத் தாண்டிவிட்டது என்றார்கள்.

அப்பவும் கேக்கவேயில்லை!

இன்னும் சில நாட்களில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் [ICU] ஒட்சிசன் தட்டுப்பாடு ஏற்படும் என்றார்கள்.

அப்பவும் கேக்கவேயில்லை!

இப்ப;

ஆசுப்பத்திரிகள் கொரோனா நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன.

ஆடு, மாடுகள் போல் பாதையோரங்களில் நிலத்தில் வெறும் தரையில் படுத்திருந்து கதறுகிறார்கள்.

மூச்சுத்திணறல் வந்தால் உடனடியாக அதிதீவிர சிகிச்சையில் ஒட்சிசன் ஏற்றமுடியாத நிலை காணப்படுகிறது.

நோயாளர்களுக்காக ஒட்சிசன் கேட்டு பொறுப்பான அதிகாரிகளிடம் வைத்தியர்கள் கெஞ்சுகிறார்கள். 03

நக்கல் நமசிவாயம்



நாட்டை நல்லா திறந்துவிட்டுப்போட்டு பிறகு ஆசிரியர்களால தான் கொரோனா பரவியதெண்டு சொன்னாலும் சொல்லுவாங்கள்...




# நாடு எந்நேரமும் முடக்கப்படலாம்!

## கொரோனா நோயாளர்களில் 1.5 வீதமானோர் உயிரிழப்பு

02

# கொரோனா உயிரிழப்புகள் எண்ணிக்கை அதிகரிக்கலாம்!

## இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா

*யோ. தர்மராஜ்*

அடுத்த இரு வாரங்களில் நாளாந்தம் பதிவாகும் கொரோனா நோயாளர்கள் மற்றும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்தார்.

தற்போதைய நிலைமை தொடர்பில் மிக அவதானத்துடனும், பொறுப்புடனும் பொதுமக்கள் செயற்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரம் வீடுகளிலிருந்து வெளியேறுமாறும், பொருத்தமான முகக்கவசங்களை... 02

# அதிபர் - ஆசிரியர் சங்கங்களின் ஆர்ப்பாட்டப் பேரணி கைவிடப்பட்டது

02

# நாடெங்கும் வேகமாக பரவும் டெல்ட்டா திரிபு

## தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை 26 வீதத்தாலும் மரணங்கள் 20 வீதத்தாலும் அதிகரிப்பு

*நா. தினுஷா*

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை 26 வீதத்தாலும், மரணங்களின் எண்ணிக்கை 20 வீதத்தாலும் அதிகரித்துள்ளதாக சுகாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் கொரோனா தொற்றுக்குள்ளாகும் நால்வரில்... 02

## ஊருக்குத்தான் உபதேசம்....



அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே கடந்த 6 ஆம் திகதி இரத்மலானையில் கைதுசெய்யப்பட்டபோது பொலிஸ் அதிகாரியொருவர் முகக்கவசம் அணியாமல் இருந்தார்.
சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கூறும் பொலிஸாரே அதனை மீறுவது ஊருக்குத்தான் உபதேசம், உனக்கில்லை என்பதாக இருப்பதாக சமூக ஊடகங்களில் விமர்சனங்கள் செய்யப்பட்டன.

# ரெலோ தலைவரை புலிகளே கொன்றனர்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

*சிவகுமார் திவியா*

எமது ரெலோ அமைப்பின் தலைவர் சிறி சபாரத்தினத்தை விடுதலைப் புலிகளே கொன்றார்கள். வடுக்கள் மனதில் இருந்தாலும் கூட தேசத்தின் விடுதலைக்காக இணைந்து பணியாற்றினோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று (07) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகவியலாளர் ஒருவர், ரெலோ அமைப்பின் தலைவரை... 02





மக்கள் வங்கியின் விசேட வைப்புக் கணக்கு (SDA)

| நாணயம் | USD | GBP | EUR | AUD | CAD | SGD | JPY | HKD |
|---|---|---|---|---|---|---|---|---|
| முதிர்ச்சியின்போது 6 மாத காலத்திற்கு வட்டி | 4.25% | 3.50% | 3.00% | 3.50% | 3.15% | 2.30% | 1.01% | 1.50% |
| முதிர்ச்சியின்போது 12 மாத காலத்திற்கு வட்டி | 6.75% | 4.75% | 4.25% | 4.75% | 4.25% | 3.50% | 2.01% | 3.00% |

| நாணயம் | NZD | CHF | SEK | DKK | NOK | CNY | LKR |
|---|---|---|---|---|---|---|---|
| முதிர்ச்சியின்போது 6 மாத காலத்திற்கு வட்டி | 4.00% | 1.75% | 1.25% | 1.01% | 1.25% | 3.25% | 6.00% |
| முதிர்ச்சியின்போது 12 மாத காலத்திற்கு வட்டி | 5.10% | 3.00% | 2.30% | 2.01% | 2.50% | 4.50% | 7.25% |

2022 ஏப்ரல் 7 ஆம் திகதி வரையில் அனுப்பி வைக்கப்படும் பணத்தை வைப்பில் இடுவதற்கு கணக்குகளை ஆரம்பிக்கலாம்.

உங்கள் வசதிக்கேற்றவாறு பரந்த அளவிலான விரிவான வலையமைப்பையும் விரிவான டிஜிட்டல் அணுகு முறையையும் மேற்கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து தொடர்பு கொள்ளவும்:
நதீஷா : +94 70 175 0294
ரேணுகா: +94 71 666 3111
nadeeshadt@peoplesbank.lk

அரச வங்கியின் பாதுகாப்பு

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE
PEOPLE'S BANK
The Bank of the People



நீங்கள் பாதுகாப்பாக வீட்டிலிருந்தவாறு பயிலுங்கள், வேலை செய்யுங்கள்.

SLT eSiphala, SLT Lynked, Office 365, MS Teams, Zoom மற்றும் mLearning இற்கு SLT-MOBITEL மொபைல் இடமிருந்து கிடைக்கும் சிறந்த டேட்டா பிளான் உங்கள் கரங்களுக்கு.

25GB பக்கேஜ் ரூ.150/- +வரி

50GB பக்கேஜ் ரூ.590/- +வரி

100GB பக்கேஜ் ரூ.990/- +வரி

பக்கேஜ்ஜை Activate செய்வதற்கு #170# அழையுங்கள். அல்லது Selfcare App இற்கு log ஆகுங்கள்.

ஏனைய டேட்டா தேவைகளை Data Quota அங்கீகரிக்கும் என்பதுடன் அதற்காக Selfcare App இற்கு log ஆகுங்கள்.

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

www.sltmobitel.lk

SLTMOBITEL

# சிறுவர்கள் தொடர்பான 500 ஆபாசப் படங்களை இணையத்தில் பதிவேற்றிய நபர் கைது

சிறுவர்கள் தொடர்பான ஆபாசப் படங்களை இணையத்தளத்தில் பதிவேற்றிய நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

25 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். சிறுவர்கள் தொடர்பான 500 ஆபாசப் படங்கள் மற்றும் காணொளிகளை இணையத்தளத்தில் பதிவேற்றிய குற்றச்சாட்டில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# 11 மாவட்டங்களில் 26 நகரங்களில் டெல்ட்டா திரிபு - 124 பேர் பாதிப்பு

டெல்ட்டா திரிபுடைய கொரோனா நோயாளர்கள் 11 மாவட்டங்களின் 26 நகரங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி நாட்டில் டெல்ட்டா திரிபுடையோரின் எண்ணிக்கை 124 ஆக உயர்ந்துள்ளது என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

மிகக் குறைந்த எண்ணிக்கையிலான டெல்ட்டா நோயாளர்கள் மீது மேற்கொண்ட பரிசோதனையிலேயே நோய்த்தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டிலிருக்கும் டெல்ட்டா நோயாளர்களின் அதிகபட்ச தரவு இதுவல்ல என்றும், டெல்ட்டா நோய்த்தொற்றுள்ளவர்களின் எண்ணிக்கை மிக அதிகம் இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்திலிருந்து பெரும்பாலான டெல்ட்டா நோய்த் தொற்றுக்குள்ளானோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ராகம, கடவத்த, கொழும்பு, அங்கொடை, கொட்டிகாவத்தை, பியகம, நுகேகொடை, பொரலஸ்கமுவ, கல்கிஸை, மஹரகம, பிலியந்தலை, பாணந்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கண்டி, அம்பாறை, குருநாகல், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் டெல்ட்டா கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இரு விசேட நாடாளுமன்ற நாட்கள் அறிவிப்பு


கொவிட் பரவல் காரணமாக பதிலளிக்க முடியாத கேள்விகளுக்குப் பதிலளிக்க அரசுக்கு வாய்ப்பை வழங்கவென நாடாளுமன்றத்தை இரு நாட்கள் விசேடமாகக் கூட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழுவிலும் இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி செப்டெம்பர் 6ஆம் திகதியும், செப்டெம்பர் 27ஆம் திகதியுமாக இரு விசேட நாட்களில் நாடாளுமன்றம் கூடவுள்ளது.

இது குறித்த முன்மொழிவு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவினால் நாடாளுமன்ற விவகாரக் குழுவில் முன்வைக்கப்பட்டது.

# மறைந்த ஸம் ஜெம் ரிபாய் ஹாஜியார் வாரி வழங்கிய வள்ளல்; அனுதாபச் செய்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்



இலங்கையின் பிரபல இரத்தினக்கல் மற்றும் நகை வர்த்தக நிறுவனமான ஸம் ஜெம் உரிமையாளரும், கொடை வள்ளலுமான மறைந்த ரிபாய் ஹாஜியார், சமுதாயத்தின் கல்வி வளர்ச்சியில் காட்டிய கரிசனையானது, அன்னாரின் ஏனைய நற்பணிகள் அனைத்தையும் விட மேலோங்கி நிற்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

ஸம் ஜெம் ரிபாய் ஹாஜியாரின் மறைவையிட்டு அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இரத்தினக்கல் வணிகத்திற்குப் பெயர் பெற்ற பேருவளை மண்ணின் மைந்தனான மர்ஹூம் ரிபாய் ஹாஜியார் நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக உள்நாட்டிலும், உலக நாடுகள் பலவற்றிலும் மிகவும் வெற்றிகரமாக மாணிக்கல் வர்த்தக நடவடிக்கைகளில் தடம் பதித்தவர் மட்டுமல்ல, அவர் தரச் சிறப்பிற்கான சர்வதேச சான்றிதழ்களைப் பெற்றுத் திகழ்ந்ததோடு, உயர் விருதுகளையும் வென்றவர்.

வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் உன்னதமான பங்களிப்பை செய்துள்ள அவர், நற்பணிகளுக்கு உதவிகள் கோரப்படும் போதெல்லாம் பிரசித்தப்படுத்திக் கொள்ளாமல் தாராளமாகவும், ஏராளமாகவும் வாரி வழங்குபவராகவே இருந்திருக்கிறார் என்பதை பலரும் சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

ஆழமான இறை நம்பிக்கையுட, ஆடம்பரமில்லாமல் சாதாரண வாழ்க்கை நடத்திய ஒரு பெருந்தகையாகவே நான் மர்ஹூம் ரிபாய் ஹாஜியாரைக் காண்கின்றேன்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாருக்கும், அவருக்கு முன்னரே இவ்வுலக வாழ்வை நீத்த அன்னாரின் துணைவியாருக்கும் ஜன்னத்துல் பிர்தௌஸ் அஃலா என்ற மேலான சுவன வாழ்வை அருள்வானாக எனப் பிரார்த்திப்பதோடு, அவரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது புதல்வர் - புதல்வியருக்கும், மருமக்களுக்கும், உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அந்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## அதிபர்...

அதிபர் - ஆசிரியர் சங்கங்களினால் முன்னெடுக்கப்பட்டு வந்த ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று (07) கைவிடப்பட்டது.

கண்டியில் ஆரம்பித்து கொழும்பு நோக்கி வந்த பேரணி கொவிட் - 19 பரவல் நிலை காரணமாகவே பஸ்யால பகுதியில் வைத்து கைவிடப்பட்டுள்ளது.

## நாடெங்கும்...

ஒருவருக்கு டெல்ட்டா திரிபு காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

டெல்ட்டா திரிபு மிக வேகமாகப் பரவிவருகின்றமை ஆபத்தானதாகுமென ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு மற்றும் மரபணு ஆய்வுப்பிரிவின் தலைவர், கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

நாட்டில் டெல்ட்டா தொற்றின் பரவல் குறித்து தொடர்ந்தும் விசேட பரிசோதனைகள் இடம்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ரெலோ...


கொன்றது யார் என்பதை வெளிப்படுத்த முடியுமா என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன என்று கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் ஏற்கனவே பகிரங்கமாகவே சொல்லி வந்திருக்கின்றோம். அது ஒரு சகோதரப் படுகொலை. விடுதலைப் புலிகள்தான் எமது ரெலோ இயக்கத்தின் தலைவர் சிறி சபாரத்தினத்தைக் கொலை செய்தார்கள். இது உலகறிந்த உண்மை. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனுக்கு புதிதாக சொல்ல வேண்டிய தேவை ஒன்றுமில்லை.

நாங்கள் ஏற்கனவே அதனை சொல்லியிருக்கின்றோம். விடுதலைப் புலிகள் இருக்கின்றபோது கூட நாங்கள் அதனை வெளிப்படையாக சொல்லியிருக்கின்றோம். உண்மையை நாம் மறக்க முடியாது. இதனை நாம் வெட்டவெளிச்சமாக சொல்லிக் கொள்கின்றோம். அப்படியிருந்தும், வடுக்கள் எமது மனங்களில் இருந்தாலும் கூட, இந்த தேசத்தின் விடுதலைக்காக நாங்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து பணியாற்றியும் இருந்தோம் எனத் தெரிவித்தார்.

# மாத்தளை கார்த்திகேசுவின் மறைவுக்கு தமிழ்க் கதைஞர் வட்டம் ஆழ்ந்த இரங்கல்



நாடறிந்த ஆளுமைமிக்க கலைஞரான மாத்தளை கார்த்திகேசு காலமானார் என்ற செய்தி கேட்டு தமிழ்க் கதைஞர் வட்டம் துயரடைவதாக அன்னாரது குடும்பத்தாருக்கும், அவரது இலக்கிய வட்டத்துக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது.

தமிழ்க் கதைஞர் வட்டம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த பத்து வருடங்களாக தகவம் இலக்கிய அமைப்பின் தலைவராக இயங்கிவந்த அவர் நாடறிந்த மூத்த கலைஞரும், மலையகத்தின் கலை இலக்கியத்துறைக்குப் பெரும் பங்களிப்பு நல்கியவருமாவார்.

மாத்தளை கார்த்திகேசு என்று தன்னை அடையாளப் படுத்திக் கொண்டு கலை இலக்கியத்துறைக்குப் பெரும் பங்காற்றிய அவரது இழப்பு இலக்கியத்துறைக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

நாடகம், சினிமா எனப் பல்துறை ஆற்றல்மிக்க கலைஞரான அவர் எழுத்தாளராகவும், தேர்ந்த இலக்கியநேசராகவும் திகழ்ந்த பெருமைக்குரியவராவார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் எனவும் இரங்கல் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொவிட் நோயாளர்கள் குறித்து தெரிவிக்க தொலைபேசி எண்கள் அறிமுகம்

வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் கொவிட் நோயாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சுகாதார அமைச்சு புதிய தொலைபேசி எண்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி சம்பந்தப்பட்ட நபர்கள் 1999 அல்லது 0117966366 ஆகிய எண்களை அழைப்பதன் மூலம் தேவையான உதவியைப் பெற முடியும்.

நோயாளர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது நிலைமை மோசமாக இல்லை என்றால் சுகாதார மருத்துவ அதிகாரி மூலம் சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்வது நல்லது என சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் கூறினார்.

# ஆர்ப்பாட்டம் மேற்கொள்வோரை கைதுசெய்வது பேச்சு சுதந்திரத்தை மீறும் நடவடிக்கையாகும்

## சுதந்திர ஊடக இயக்கம் அறிக்கை

பொதுமக்களைப் பாதிக்கும் பொதுப் பிரச்சினைகள் மற்றும் தமது தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் போன்றவர்களை கைதுசெய்யும் நோக்கில் பொலிஸார் மேற்கொள்ளும் சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகளை கண்டிப்பதாக சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் இவ்வகையான நடவடிக்கைகளானவை நாட்டு மக்கள் மத்தியில் பயத்தை உண்டு பண்ணி, பொதுப் பிரச்சினைகள் தொடர்பில் குரல் கொடுக்கும் பொதுமக்களின் எதிர்ப்புக் குரலை நசுக்கும் முயற்சியாகவா இக்கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற கேள்வி நமக்குள் எழுகின்றது.

ஓகஸ்ட் 04 ஆம் திகதி சம்பளப் பிரச்சினை தொடர்பில் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்திற்கு எதிரிலி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு திரும்பிக்கொண்டிருந்த 36 ஆசிரியர்கள் உட்பட 44 பேர் கைது செய்யப்பட்டு துறைமுக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டதுடன், மேலும் அவர்களை பார்வையிட சென்ற எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். கைது செய்யப்பட நபர்கள் ஓகஸ்ட் 05 ஆம் திகதி கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், கைதுசெய்யப்பட்ட நபர்களை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிஸ் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கையை கோட்டை நீதவான் நிராகரித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்

இந்த தொடர் கைது நடவடிக்கைகளின் புதிய நிகழ்வாக, கொத்தலாவல சட்டமூலத்திற்கு எதிராக ஓகஸ்ட் 03 ஆம் திகதி பாராளுமன்ற வீதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே குற்றஞ்சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டார். அவர் ஓகஸ்ட் 5 ஆம் திகதி இரவு சிரச தொலைக்காட்சி அலைவரிசை கலந்துரையாடலில் கலந்து கொண்டு (ஓகஸ்ட் 6 ஆம் திகதி காலை) திரும்பிக்கொண்டிருந்தபோது, சிவில் உடையில் இருந்த இருவர் அவரை கைதுசெய்ய முற்பட்டனர். மாணவரின் தீவிர விசாரணை காரணமாக, சீருடை அணிந்த இன்னுமொரு பொலிஸ் அதிகாரி தலையிட்டு அவரைக் கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

மேலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட சமீர கொஸ்வத்த மற்றும் கோஷிலா ஹன்சமாலி போன்ற மாணவ செயற்பாட்டாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றிய தலைவர் அமில சந்தீப என்பவரும் வலுக்கட்டாயமாக கைதுசெய்யப்பட்டுள்ளார். கொத்தலாவல சட்டமூலத்திற்கு எதிராக குரல்கொடுக்கும் சிலர் பயணித்த பஸ் வண்டிக்குள் சிவில் உடையில் நுழைந்த நபர்கள் அந்த பஸ் வண்டியில் பயணித்த சில தரப்பினரை கைதுசெய்ய முயற்சித்தமை தொடர்பில் விரிவுரையாளர் அமிந்த லக்மல் சமூக ஊடகங்களில் காணொளிப் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

நாடு தற்போது கொவிட் -19 தொற்றுநோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள போதிலும், அதனை காரணம் காட்டி அல்லது பிற காரணங்களுக்காக, மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கோரும் போராட்டங்களை ஒடுக்குதல் மற்றும் அவர்களை வழிநடத்தும் ஆர்வலர்களை கைதுசெய்வதன் ஊடாக பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை மீறி செயற்படுவதானது ஜனநாயகத்தை சவாலுக்குட்படுத்தும் நடவடிக்கையாகவே சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது. அதேபோல் பேச்சு சுதந்திரத்தை மதிப்பது ஒவ்வொரு அரச அதிகாரியினதும் கடமை என்பதை வலியுறுத்தும் அரசியலமைப்பின் விதிகளை இங்கு சுதந்திர ஊடக இயக்கம் பொலிஸாரின் கவனத்திற்கு கொண்டுவருகின்றது.

அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறும் சந்தர்ப்பங்களில் கண்டும் காணாமல் இருக்கும் பொலிஸார் தமது பிரச்சினைகளுக்காக ஆர்ப்பாட்டம் செய்யும் நபர்கள் தொடர்பில் இன்னுமொரு கொள்கையை பின்பற்றுவதானது ஒன்றுக்கொன்று முரணான நடவடிக்கைகளாக காணப்படுவதுடன், இவ்வகையான நடவடிக்கைகள் தொடர்பில் பொதுமக்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இருப்பினும் பிரச்சினைகளுக்குத் தீர்வு தனிமைப்படுத்தல் விதிகள் என்ற போர்வையில் பேச்சு சுதந்திரத்தை நசுக்குவது அல்ல மற்றும் சட்டத்தை மீறி செயற்படுவதும் அல்ல என்பதையும் கூறிக்கொள்வதுடன் மேலும் பொதுமக்களை பயமுறுத்தும் அனைத்து விதமான அடக்குமுறைகளும் நாட்டிற்கு சிறந்ததல்ல என்பதையும் சுதந்திர ஊடக இயக்கம் இங்கு வலியுறுத்துகின்றது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## நாடு...

***நமது விசேட செய்தியாளர்***

நாட்டில் கொரோனா மற்றும் டெல்ட்டா வைரஸ் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையில் 1.5 வீதமானோர் உயிரிழப்பதாக அரசு அறிவித்திருக்கிறது.

இதனால் நாட்டை சில வாரங்களுக்கு முடக்குவதற்கு அரசு தீவிர ஆலோசனைகளை நடத்தி வருகிறது. நேற்று முன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடந்த விசேட கூட்டத்தில் நாட்டின் நிலைமை குறித்து ஆராயப்பட்டபோதிலும், நாட்டை உடனடியாக முடக்க வேண்டிய அவசியமில்லையென தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், கொரோனா தினசரி உயிரிழப்பு எண்ணிக்கை நூறைத் தாண்டியுள்ளதால் உடனடியாக பொதுமுடக்கம் ஒன்றுக்கு செல்வதே சிறந்ததென அரச உயர்மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து எந்நேரத்திலும் நாட்டை முடக்குவதற்கான அறிவிப்பு வெளிவரலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, டெல்ட்டா திரிபு பரவும் நிலையில், மக்கள் சீக்கிரமாக தடுப்பூசியைப் பெறுமாறும், அத்தியாவசிய தேவைகளின்றி வெளியில் நடமாட வேண்டாம் எனவும் சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டே சுகாதார அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

நாட்டில் 1.5 சதவீதமான கொரோனா நோயாளர்கள் உயிரிழப்பதாகவும், அதிகளவானோர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அனைவரும் முதலில் கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளவும். உலகளவில் பெரும்பாலும் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்களே உயிரிழந்து வருகின்றனர். அத்தியாவசிய காரணங்களின்றி வீட்டை விட்டு வெளியேற வேண்டாம், சன நெரிசலுள்ள திருமண, மரண மற்றும் வேறு நிகழ்வுகளில் பங்கேற்பதை முழுமையாக தவிர்க்கவும். பொது இடங்களுக்கு செல்லும்போது முகக்கவசங்களைக் கட்டாயமாக அணியவும்.ட

அறைகள், விடுதிகள், மின்தூக்கி, வாகனம் போன்றவற்றில் நெரிசலாகப் பயணிப்பதை தவிர்க்கவும். அவ்வப்போது சவர்க்காரம் இட்டு கைகளைக் கழுவவும். தனிமனித இடைவெளியாக 2 மீற்றர் தூரத்தை பின்பற்றவும். தொற்றாநோய்கள் இருப்பவர்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் - எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா...

அணிந்து செல்லுமாறும் அவர் வலியுறுத்தினார்.

அனைத்து வகையான முகக்கவசங்களும் இக்காலத்திற்கு பொருந்தாது என வைத்தியர்களும் விசேட நிபுணர்களும் கூறுகின்றனர். கொவிட் நோயாளர்களில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதுடன், மிக வேகமாகப் பரவக்கூடிய பிறழ்வு நாட்டிலுள்ளது என்பதை பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டும். எனவே பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்கவேண்டும். உலக நாடுகள் கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக எடுத்திருக்கும் நடவடிக்கைகளை கொவிட் ஒழிப்பு தேசிய செயலணி என்ற வகையில் முன்னெடுத்துள்ளோம். எனினும், பொதுமக்கள் சுய ஒழுக்கத்துடனும், பாதுகாப்புடனும் செயற்பட்டால் மாத்திரமே நாட்டின் தற்போதைய நிலைமையை மாற்ற முடியும்

முழுமையாக தடுப்பூசியை செலுத்திக்கொண்டவர்கள் அதற்கான அட்டையை தம் வசம் வைத்திருப்பதை கட்டாயமாக்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அனைவரையும் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம். தடுப்பூசியை செலுத்திக்கொள்ளவில்லை என்றால் சிற்சில இடங்களுக்குச் செல்வதற்கு உங்களுக்கு அனுமதி மறுக்கப்படலாம். நாட்டில் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டதன் பின்னர், சில இடங்களுக்குச் செல்லும்போது தடுப்பூசி அட்டைகளைப் பரிசீலிப்பதற்கான சந்தர்ப்பம் எதிர்காலத்தில் உருவாகக்கூடும். செப்டெம்பர் மாதத்தின் இரண்டாம் வாரத்திற்குள் நாட்டில் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை நிறைவு செய்ய முடியும் என எதிர்பார்க்கின்றோம் - என ஷவேந்திர சில்வா மேலும் கூறினார்.

## வெடிமணியம் தொடர்ச்சி...

இருந்தால் தானே கொடுப்பதற்கு!

மணித்தியாலத்துக்கு நான்கு கொரோனா மரணங்கள் என்ற நிலையில் இருக்கிறது இண்டையான் நிலை.

அடுத்தடுத்த வாரங்களில் இது இன்னும் அதிகமாகலாம்.

இதையெல்லாம் சொல்லி சனத்தை பயப்புடுத்துறன் எண்டு நினைப்பியள்.

சொல்வழி கேக்காத எங்கட சில சனமும், குறுக்கால போன ஆளும் அரசும் கொரோனாவை ஏதோ விளையாட்டாக நினைச்சு சிம்பிளா திரிஞ்சவை.

ஊசி போட்டால் கொரோனா குறைஞ்சிடும் எண்ட தப்புக்கணக்கை போட்டார்கள்.

போட்டால் குறையும் தான்.

ஆனால், ஊசி போட்டவர்களும் "கொரோனா காவிகளாக" இருக்க வாய்ப்பிருக்கு!

பயணத்தடை எண்ட அரசாங்கத்தின் கட்டுப்பாட்டை ஆரும் சரியாக பின்பற்றவும் இல்லை. கண்காணிக்கவும் இல்லை.

தெற்கிலிருந்து வடக்குக்கு தாராளமாக பலர் வந்துபோனார்கள்.

அண்மையில் ஒரு நாள் எழுமாற்றாக வீதியில் மறிச்சு செய்யப்பட்ட கொரோனா பரிசோதனையில் தெற்கில் இருந்து வடக்குக்கு வந்தவர்களில் சுமார் 30 பேருக்கு கொரோனா.

பயணத்தடைகளையும் மீறி ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்துக்குப் பயணம் செய்தவர்கள் மீது நியாயமான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவேயில்லை.

வடக்கில் கொரோனா சுகாதார விதிகளை மீறி திருமண, மரண, திருவிழா நிகழ்வுகளை செய்தவர்கள் மீது பெரும்பாலும் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேயில்லை.

குற்றங்களை செய்தவர்கள் நீதிமன்றம் செல்லாது பணபலத்தால் தப்பித்துக்கொண்டார்கள்.

அன்றாடம் கூலிவேலை செய்து தங்கள் குடும்பத்தை பராமரிக்கும் இலட்சக்கணக்கான குடும்பங்களின் பொருளாதார நிலை சீரழிஞ்சுபோய் கிடக்கிறது.

ஒரு நேர உணவுக்குக் கூட வழியில்லாமல் பட்டினியோடு சில குடும்பங்கள் துன்பத்தோடு வாழ்கிறார்கள்.

இப்பிடியே போனால்;

வடக்கில் வெகுவிரைவில் பட்டினிச்சாவுகள் கூட நிகழலாம்.

குற்றச்செயல்கள் மிக வேகமாக அதிகரிக்கும்.

உதாரணத்துக்கு அண்மைக்காலமாக மீண்டும் கேரள கஞ்சா கடத்தல், மண் கடத்தல், வாள்வெட்டு, திருட்டுக் குற்றங்கள் அதிகரித்து இருக்கின்றன.

பள்ளிக்கூடங்கள் பூட்டிக்கிடக்கு. ஆசிரியர்கள் வீதிகளில் நின்று போராடுகிறார்கள். பிள்ளைகள் வீட்டில சும்மா இருக்குதுகள்.

இப்படியே இந்த நிலை தொடர்ந்தால் சிறுவர்கள் மீதான குடும்ப வன்முறையோ அல்லது பாலியல் துஷ்பிரயோகங்களோ அதிகரிக்கும்.

பள்ளிக்கூடப் பிள்ளைகள் இணையத்தில் படிக்கிறம் எண்ட நிலையில் கண்காணிப்பின்றி இருக்கிறார்கள். சிறுவர் மீதான இணையவழி பாலியல் குற்றங்கள் சிறிலங்காவில் இந்த வருடம் பல மடங்கு அதிகரித்துவிட்டதாக தன்னார்வ நிறுவனங்கள் எச்சரித்தள்ளன.

நாட்டை நாளை கட்டியெழுப்பப் போகும் இளம்தலைமுறையினர் பாதைமாறி படுகுழியில் வீழ்ந்துவிடாமல் தடுக்கவேண்டிய கடமை இந்நாட்டின் ஆளும் அரசின் தலையாய கடமைகளில் ஒன்று. அதை இந்த ஆளும் அரசு சரியாக செய்யவில்லை என்பதே யதார்த்தம்.

நாட்டில் சட்டங்கள் மிகக் கடுமையாக்கப்பட வேண்டும்.

எப்ப செய்யப்போகினம் எண்டுதான் தெரியவில்லை.

நிலைமை கைமீறிப்போய் தலைக்கு மேலால தண்ணி போனாப் பிறகு ஒண்டுமே செய்யேலாது.

ஒண்டு சனம் திருந்தவேணும். அல்லது அரசாங்கம் திருந்தவேணும்.

இதில ஏதாவது ஒண்டு நடந்தால்தான் நாடு உருப்படும்.

★★★

மலையக மக்களின் மேல் திடீரெண்டு கரிசனை வந்து ஆளாளுக்கு நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள்.

இத்தனை ஆண்டுகளாக பல "ஹிஷாலினிகள்" சாகடிக்கப்பட்டார்கள்.

அவர்கள் காலியில் "புஞ்சிபண்டா" வீட்டிலும், வெள்ளவத்தையில் "சுப்பிரமணியம் " வீட்டிலும் பதினைஞ்சு வயசில வீட்டு வேலை செய்தவர்கள் தான்.

ஆனால், அப்போதெல்லாம் இந்த மரணங்களும், பாலியல் வன்கொடுமைகளும் ஆளும் அரசுகளின் சட்டத்தின் கண்களுக்கு தெரியாமலேயே இருந்தது.

ஒரு காலத்தில் சிறிலங்கா சுற்றுலாப் பயணிகளை கவரும் விளம்பரங்களில் "சிறுவர்கள்" இருந்தார்கள் என்பதே கசப்பான உண்மை.

சிறிலங்காவில் பல ஆயிரம் சிறுவர் பாலியல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்பதை ஆதாரத்தோடு ஒரு காலத்தில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வெளிக்கொணர்ந்தன.

இன்றுவரை அதனைத் தடுப்பதற்கான எந்தவிதமான கடுமையான சட்டங்களும் நடைமுறையில் இல்லை.

மலையகத்தில் நிகழ்ந்த இந்த ஹிஷாலினியின் மரணம் பலரின் மனச்சாட்சிகளைத் திறக்கவைத்திருக்கிறது. பலரின் போலி முகத்திரைகளைக் கிழித்து எறிந்திருக்கிறது.

சின்ன வயசில் ஹிஷாலினியை வேலைக்கு அனுப்பிய அவளுடைய பெற்றோர்கள் போலிருக்கும் பலருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

மலையக சிறுவர்களை ஏமாற்றி பணத்துக்காக வேலைக்கு விற்கும் புரோக்கர்கள் சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும்.

மலையக சிறுவர்களை வேலைக்கு வைத்திருப்போர் இனங்காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.

இனிமேல் இதுபோல் மலையக சிறுவர்கள் அல்ல, நாட்டின் ஏனைய பகுதிகளைச் சார்ந்த சிறுவர் தொழிலாளர்களும் கண்டுபிடிக்கப்பட்டு காப்பாற்றப்பட வேண்டும்.

இவைதான் உண்மையில் ஹிஷாலினி என்ற அந்த அபலைச் சிறுமியின் சாவுக்கான உண்மையான பரிகாரமாக இருக்கும்.

வாய் கிழிய கத்தும் மலையக அரசியல்வாதிகளிடம் ஒரு வேண்டுகோள்!

மலையகத்தில் உடனடியாக "வேலைவாய்ப்புப் பணியகம்" நிறுவப்பட வேண்டும். அரசு அதை நேரடியாகக் கண்காணிக்கவேண்டும்.

தன்னிச்சையாகச் செயற்படும் "புரோக்கர்கள்" இனங்காணப்பட்டு உடனடியாக அவர்களின் செயற்பாடு நிறுத்தப்படவேண்டும்.

மலையகத்திலுள்ள இளம் தலைமுறையினர் வெளிமாவட்டங்களுக்கோ அல்லது உள்ளூரிலோ வேலைக்கு போகும் போது;

புதிதாக அமைக்கப்படவிருக்கும் "வேலைவாய்ப்புப் பணியகத்தில்" கட்டாயம் பதிந்திருக்கவேண்டும்.

அவர்களின் வயது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அவர்களுக்கான தனியான அடையாள அட்டையொன்று கொடுக்கப்பட வேண்டும்.

அவர்கள் வேலைசெய்யும் இடம் நிச்சயமாக இந்தப் பணியகத்தில் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

மலையக வேலைவாய்ப்புப் பணியகத்தின் அதிகாரிகள் எழுந்தமானமாக வேலை இடங்களுக்குப்போய்;

நேரடியாக இந்த மலையகத் தொழிலாளர்களின் நிலைகளை நேரடியாகக் கண்காணித்து;

தவறுகள் இருந்தால் அதற்கான பதில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதற்கு முதலில்;

மலையக மக்களுக்கான "விழிப்புணர்வை" ஏற்படுத்தப்போவது யார்?

அதற்காக ஆரையும் வெளிமாவட்டங்களிலிருந்து எதிர்பார்ப்பதை தவிர;

மலையகத்தைச்சேர்ந்த பலர் அரசியல்வாதிகளாகவும் ஊடகவியலாளர்களாகவும்;

அரச உத்தியோகத்தர்களாகவும்; பல்கலைக்கழக மாணவர்களாகவும்; சட்டத்தரணிகளாகவும்; வைத்தியர்களாகவும் இருக்கிறார்கள்.

இவர்கள் மனது வைத்தால் நிச்சயம் மலையகத்தில் ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தமுடியும்.

மலையக மக்களிடம் "சிறுவர்களை வேலைக்கு அனுப்பாதீர்கள். அனுப்பினால் சட்டத்தின் முன் தண்டிக்கப்படுவீர்கள்" என்ற விழிப்புணர்வு மிக மிக அவசியமானதும் அவசரமானதுமாகும்.

ஹிஷாலினியின் மரணத்துக்குக் காரணமானவர்களை கொற இழுவையாக இழுத்து வந்து நீதியின் முன் நிறுத்துவது எவ்வளவு அவசியமோ அதைவிட மிக அவசியமானது விழிப்புணர்வும், பாதுகாப்பு ஏற்பாடுகளும்!

சும்மா கத்திக் கொண்டிருக்காமல் களத்திலிறங்கி இதை யார் செய்கிறார்களோ, அவர்களே ஹிஷாலினியின் மரணத்தைக் கேள்வி கேட்கத் தகுதியானவர்கள்.

அவ்வளவுதான் சொல்லமுடியும்.

இதுக்கு மிஞ்சி இந்த சின்னப்பிள்ளையின் சாவில் அரசியல் செய்யும் ஈனத்தனமான செயலை எந்த அரசியல்வாதிகளும் செய்யக்கூடாது.

இந்தளவு காலமும் நீங்கள் செய்த அரசியல் சீத்துவம் இப்போது நடுச்சந்தியில் நின்று பல்லிளிக்கிறது.

இனியாவது வாக்களித்த அந்த சனத்துக்கு ஒரு சதமாவது உண்மையாக இருக்க முயற்சியுங்கள்!

# மூன்று மாதங்களாக வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் யாழில் கைது

யாழ்ப்பாணத்தில் கடந்த 3 மாத காலமாக வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் செய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பிரதேசத்தில் கோப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவரின் தொலைபேசி, 50 ஆயிரம் ரூபா பணம், கைப்பை உட்பட மேலும் பல ஆவணங்களை திருடிச் சென்றமை, யாழ்ப்பாணத்தில் பத்திரிகை நிறுவனத்தில் கடமையாற்றும் ஒருவரின் கைத்தொலைபேசியைத் திருடிச் சென்றமை, சுண்ணாகம் பகுதியில் ஆசிரியர் ஒருவரின் கைப்பை, இரண்டு தொலைபேசிகள் மற்றும் முப்பதாயிரம் ரூபா பணம் ஆகியற்றைக் கொள்ளையடித்தமை மற்றும் மானிப்பாயில் நபர் ஒருவரின் கைப்பையைத் திருடிய சம்பவம் ஆகியவற்றுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கொள்ளையிடப்பட்ட பணம் மற்றும் கைப்பை உட்பட ஏனைய ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அவர்கள் போதைப்பொருள் பாவனையாளர்கள் என்பதாலும், தமக்குக் குடிப்பதற்கு பணம் தேவை என்பதாலும் வழிபறியில் ஈடுபட்டதாக ஆரம்பகட்ட விசாரணையில் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யபட்ட இருவரும் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஏனைய இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறும் பட்சத்தில் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரைத் தொடர்பு கொள்வதன் மூலம் தமக்குரிய பொருட்களை மீட்க முடியும் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# 'ரத்மலான அஞ்சு'வின் உதவியாளர்கள் கைது

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'ரத்மலான அஞ்சு'வின் உதவியாளர்கள் 2 பேர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த சந்தேகநபர்கள் நேற்று கல்கிஸை – இரத்மலானை பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 30 கிராம் ஹெரோயினும், 104 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 4 கிலோகிராம் கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈட்டியதாகக் கருதப்படும் 53,000 ரூபா பணமும், மூன்று கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

# இரு வாரங்களுக்காவது நாட்டை முடக்குமாறு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

தற்போதைய கொரோனா நிலைமையைக் கருத்திற்கொண்டு, வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு குறைந்தது இரு வாரங்களுக்கேனும் நாட்டை முடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த சங்கத்தின் தலைவர் ருக்ஷான் பெல்லன இத்தகவலைத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான பெரும்பாலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தவறியமையே தற்போதைய ஆபத்தான நிலைமைக்குக் காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆரம்பத்திலிருந்தே கொரோனா தொடர்பில் பல்வேறு எச்சரிக்கை அறிவிப்புகளை தமது சங்கம் வெளியிட்டு வந்ததாகவும், ஆனால், அரசாங்கம் அதனைப் புறக்கணித்தாகவும் அவர் தெரிவித்தார். நாட்டை முடக்குவதால் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்றாலும், குறைந்தது 2 வாரங்களுக்காவது நாட்டை முடக்க வேண்டும். இல்லையென்றால் 2 வாரங்களில் அரசாங்கத்திற்கு ஏற்படும் பொருளாதார பாதிப்பை விட இரு மடங்கான பாதிப்புகள் ஏற்படுமெனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் ருக்ஷான் பெல்லன எச்சரித்துள்ளார்.



தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 012 67 34 42.
தொலைபேசி : 015 200 900/ 015 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

# அரசு இனியும் தாமதிக்கக் கூடாது

கொரோனா நெருக்கடி நிலை மீண்டும் நாட்டில் தலை தூக்கியுள்ள நிலையில் அரச ஊழியர்களைப் பணிக்கு அழைப்பது மற்றும் அரச சேவைகளைத் தடையின்றி வழங்குவது தொடர்பான புதிய சுற்றறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

கொவிட்-19 பரவல் அதிகரித்துள்ளமை தொடர்பில் சுகாதார அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் களினாலும் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை பரிசீலித்து குறித்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அரச நிறுவனங்களுக்கு ஊழியர்களை அழைப்பதில் குறித்த சுற்றுநிருபத்தைப் பின்பற்றுமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அரசு நிறுவனங்களின் ஊழியர்களும் வாரத்தில் குறைந்தபட்சம் 3 நாட்களாவது பணிக்கு சமுகமளிக்கும் வகையில் குழுக்களாக அமைத்து, அக்குழுக்கள் நிறுவனத்தின் சேவைகளை தொடர்ச்சியாக வழங்கும் வகையில் சேவைக்கு அழைக்கப்பட வேண்டும்.

அத்துடன் இவ்வாறு ஊழியர்களை அழைக்கும் போது கர்ப்பிணித் தாய்மார் மற்றும் ஒரு வயதுக்குட்பட்ட கைக்குழந்தைகள் உள்ள தாய்மாரை அழைக்காமலிருக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அழைக்கப்படும் ஊழியர்கள் உரிய தினத்தில் பணிக்கு சமுகமளிக்காத நிலையில் மாத்திரம் அவர்களது அவர்களது சொந்த விடுமுறையிலிருந்து குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேவைக்கு அழைக்கப்படாத தினங்களிலும் ஊழியர்கள் இணைய முறை மூலம் தங்களது பணிகளை செய்ய கடமைப்பட்டுள்ளார்கள் என்பதோடு, நிறுவனத் தலைவரின் ஆலோசனைக்கமைய செயற்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நோய் அறிகுறிகள் காணப்படுகின்ற அல்லது அவ்வாறு அனுமானிக்கின்ற மற்றும் ஏனைய விசேட காரணங்களின் அடிப்படையில் பணிக்கு அழைக்க முடியாது என நியாயமான காரணங்களை வழங்குகின்ற ஊழியர்களை சேவைக்கு அழைப்பது அல்லது மாற்று அலுவலக சேவைகளை வழங்குதல், வீட்டிற்கு அருகிலுள்ள பணியிடங்களில் வேலை செய்ய அனுமதித்தல் போன்ற உரிய ஊழியரின் நலனைப் பேணும் வகையில் நெகிழ்வான முடிவுகளை எடுக்கும் பொறுப்பு நிறுவனங்களின் அல்லது பிரிவுகளின் தலைவர்களின் பொறுப்பாகும்.

ஏற்கனவே அரச சேவையிலுள்ள பலர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.கொரோனா வால் நீண்டகாலம் அரச சேவையும் ஸ்தம்பிதமடைந்துள்ளது. புதிய சுற்றறிக்கையைப் பின்பற்றி அரச பணியாளர்கள் சேவைகளுக்கு சமுகமளித்தாலும் அரச சேவை மேலும் ஸ்தம்பிதமடையும் நிலைமையே இருக்கிறது.

மறுபுறம் கொழும்பு மாவட்டத்தில் நாளாந்தம் அதிகரித்து வரும் கொவிட் தொற்று காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தற்போதைய நிலையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மட்டும் 600 கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேபோன்று லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்து வருகிறது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் கொவிட் நோயாளிகளில் நாளாந்தம் 12 முதல் 15 பேர் வரை உயிரிழந்து வருகின்றனர். இவற்றுக்கப்பால் கொவிட் மரணங்கள் சடுதியாக அதிகரித்து வரும் நிலையில், மருத்துவமனைகளின் பிரேத அறைகளில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. தகனம் செய்யும் நடவடிக்கைகள் தகனசாலைகளில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இவ்வாறு சரீரங்கள் அதிகளவில் வைத்தியசாலைகளில் தேங்கியுள்ளன.கொவிட் மரணங்கள் தவிர்ந்த, ஏனைய காரணிகளில் மரணமானவர்களின் உடல்களும் தகனம் செய்யப்படுவதால், இந்த நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் கொரோனா தொற்றுக்குள்ளாகி 98 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனா தினசரி மரணங்கள் நூறைத் தாண்டுமென சுகாதாரத்துறை நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் 54 ஆண்களும், 44 பெண்களும் உயிரிழந்துள்ள அதேசமயம், வீடுகளிலிருக்கும் பலர் உயிரிழக்கும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் உயிரிழந்தோரில் 30 வயதிற்கு குறைவான ஒருவரும், 30 வயது தொடக்கம் 60 வயதிற்கு இடைப்பட்ட 27 பேரும் அடங்குவதோடு, ஏனைய 70 பேரும் 60 வயதிற்கும் மேற்பட்டவர்கள். இதற்கமைய, நாட்டில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

நாளாந்தம் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுமாயின், போதுமான சுகாதார ஊழியர்கள் இல்லாத இடங்களில் மாற்று திட்டங்களை அமுல்படுத்த எதிர்பார்ப்பதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அதற்கமைய, முப்படையினர் மற்றும் தனியார் துறையினரை சேர்ந்தவர்களை சிகிச்சைகளுக்காக உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்திருக்கிறார்.

தற்போதைய கொரோனா நிலைமையை கருத்தில் கொண்டு, வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு குறைந்தது 2 வாரங்களுக்கேனும் நாட்டை முடக்குவதே நல்லது.வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான பெரும்பாலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தவறியமையே தற்போதைய ஆபத்தான நிலைமைக்கு காரணம்.

ஆரம்பங்களில் இருந்தே கொரோனா தொடர்பில் பல்வேறு எச்சரிக்கைகளை சுகாதாரத்துறையினர் விடுத்தபோதிலும், அரசாங்கம் அதனைப் புறக்கணித்து இப்போது தடுமாறிக்கொண்டிருக்கிறது. நாட்டை முடக்குவதால் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்றாலும், குறைந்தது 2 வாரங்களுக்காவது நாட்டை முடக்க வேண்டும். இல்லையென்றால் 2 வாரங்களில் அரசாங்கத்திற்கு ஏற்படும் பொருளாதார பாதிப்பை விட இரு மடங்காக பாதிப்புகள் ஏற்படும்.

அரசு இனியும் தாமதிக்காமல் குறைந்தபட்சம் கொரோனா, டெல்ட்டா வைரஸ் பரவலைத் தடுத்து நிறுத்தவாவது நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். அரசின் உயர்மட்ட தலைவர்கள், அமைச்சர்கள், எம்.பி.க்கள் வீண் வாய்ப்பேச்சை விடுத்து சுகாதாரத்துறையினரின் கருத்துகளை செவிமடுத்து செயற்படவேண்டும்.





# மோடிக்கு எதிராக அரசியலில் கால் பதிக்கும் பிரசாந்த் கிஷோர்


இந்தியப் பிரதமர் மோடிக்கு சவால் விடும் அரசியல் தலைவர்கள் எவரும் இந்திய அரசியலில் இல்லை என்பதால், பாரதீய ஜனதாக் கட்சியின் பலம் கூடிக்கொண்டே போகிறது. காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ் போன்ற கட்சிகளிலிருந்த செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகள் பாரதீய ஜனதாவில் சேர்ந்துள்ளனர்

காங்கிரஸ், பாரதீய ஜனதா, கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் ஆகிய கட்சிகளுக்கு இந்தியாவின் சகல மாநிலங்களிலும் கிளைகள் உள்ளன. ஆனால், பாரதீய ஜனதக் கட்சிக்குள்ள செல்வாக்கு ஏனைய கட்சிகளுக்கு இல்லை.

ராகுல் காந்திக்குப் பின்னர் காங்கிரஸில் செல்வாக்கும், ஆளுமையும் மிக்க தலைவர் உருவாகவில்லை. சோனியா காந்தி காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தபோது, மன்மோகன் சிங் ஆலோசனை வழங்கினார். ராகுல் காந்தி தலைவரான பின்னர் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கு சரியத்தொடங்கியது. அந்தச் சரிவு அக்கட்சியை அதல பாதாளத்தில் வீழ்த்தியுள்ளது.

வாஜ்பாயின் தலைமை, பாரதீய ஜனதாக் கட்சியை ஆட்சி பீடத்தில் ஏற்றியது. மூத்த தலைவர் அத்வானி அவருக்குத் துணையாக இருந்தார். வாஜ்பாய்க்குப் பின்னர் கட்சியை அத்வானி வழிநடத்துவார் என்ற எதிர்பார்ப்பு இருந்தபோது, குஜராத்திலிருந்து புறப்பட்ட மோடி, பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவரானார். மோடிக்குப் பக்கபலமாக அமித்ஷா செயற்படுகிறார். செல்வாக்கு மிக்க தலைவர்களான மம்தா பானர்ஜி, சரத் பவார் போன்றவர்கள் காங்கிரஸுடன் இணைந்து செயற்படாமையினால் பாரதீய ஜனதாக் கட்சியை வீழ்த்த முடியவில்லை. இந்திய நாடாளுமன்றத் தேர்தலின்போது எதிர்க்கட்சிகள் ஒன்றிணையாததால் பாரதீய ஜனதாக் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது.

இந்திய எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் வேலையை தேர்தல் வியூக வல்லுநர் பிரசாந்த் கிஷோர் கையிலெடுத்துள்ளார்.தேர்தல் காலங்களில் பல கட்சிகளுக்கு ஆலோசகராக செயற்பட்டதால் இந்திய அரசியல் தலைவர்களுடன் அவருக்கு நெருங்கிய தொடர்புள்ளது. இந்தியப் பிரதமராக மோடி பதவி ஏற்றதிலும் பிரசாந்த் கிஷோருக்கு பங்குள்ளது. 2014 ஆம் ஆண்டு பாரதீய ஜனதாக்



கட்சியின் தொழில்முறை தேர்தல் ஆலோசகராகக் கடமையாற்றினார்.

பீகாரில் உள்ள போஜ்புரி பேசும் பகுதியைச் சேர்ந்த 44 வயதான பிரசாந்த் கிஷோர், தனது தொழில்சார் சேவைகளை, நரேந்திர மோடி, நிதீஷ் குமார், மம்தா பானர்ஜி, பஞ்சாபில் கப்டன் அமரீந்தர் சிங், ஆந்திராவில் ஜெகன்மோகன் ரெட்டி, தமிழ்நாட்டில் மு.க.ஸ்டாலின் ஆகியோருக்கு இதுவரை அளித்துள்ளார்.பிரசாந்த் கிஷோரின் ஆலோசனையால் அந்தத் தலைவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றார்கள். பிரசாந்த் கிஷோரின் ஆலோசனையை காங்கிரஸ் கட்சி முழுமையாகக் கேளாமையால் உத்தரப்பிரதேசத்தில் தோல்வியைச் சந்தித்தது.

கடந்த மே மாதம் 2 ஆம் திகதி ஒரு தொலைக்காட்சி நேர்காணலில், தான் தொழில்முறை அரசியல் ஆலோசகராக இருக்கப்போவதில்லை என்று கூறி அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார் பிரசாந்த் கிஷோர். அவர் அரசியலுக்கு வரக்கூடும் என்ற ஊகங்கள் அதன் பிறகு வலுப்பெற்றன. அவர் அரசியலில் இருக்கிறாரா, இல்லையா என்ற சந்தேகம் எப்போதுமே உள்ளது. பிரசாந்த் கிஷோர் அரசியல் ஆலோசகரா அல்லது அரசியல்வாதியா என்பது குறித்து எப்போதுமே தெளிவு இருந்ததில்லை.

மம்தா பார்னஜி, சரத்பவார், சோனியாகாந்தி, ராகுல் காந்தி போன்ற தலைவர்களை பிரசாந்த் கிஷோர் சந்தித்ததால், மோடிக்கு எதிராக அவர் வியூகம் அமைக்கக்கூடும் என்ற சந்தேகம் அரசியல் விமர்சகர்களிடம் எழுந்தது. 2024 ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் நரேந்திர மோடிக்கு எதிராக, எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்க அவர் தயாராகி வருவதாக செய்திகள் வெளியாகின. சரத் பவார் மற்றும் காங்கிரஸ் தலைவர்களுடனான அவரது சந்திப்புகளால் ஊகங்கள் செய்தியாக உருவெடுத்துள்ளன.

2019 ஆம் ஆண்டு நடந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ்தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியும், ஏனைய அரசியல் கட்சிகளும், பா.ஜ.க.வை அகற்ற வேண்டும் என ஒருமித்து குரல் எழுப்பின. ஆனால், எதிர்க்கட்சிகள் ஒற்றுமையாகச் செயற்படாமையினால் பாரதீய ஜனதாக கட்சியை அகற்ற முடியவில்லை. ராகுல் காந்தி பிரதமர் வேட்பாளர் என்று ஸ்டாலின் மட்டுமே கூறியிருந்தார். ஏனைய தலைவர்கள் கள்ள மௌனம் சாதித்தனர். எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் பிரதமராகும் ஆசை உள்ளது. ஆகையால், அவர்களுக்கிடையிலான ஒற்றுமை தொலை தூரத்தில் உள்ளது.

பிரசாந்த் கிஷோர் ஒரு தேர்தலில் வலதுசாரிக் கட்சியின் பக்கம் இருந்தார். மற்றொரு தேர்தலில் அவர் மற்றொரு சித்தாந்தத்தின் பக்கம் இருந்தார். ஒருமுறை அவர் தமிழ்க் கட்சியின் பக்கம் இருந்தார். மற்றொரு முறை அவர் ஒரு தெலுங்கு கட்சியுடன் கூட்டாக இருந்தார். யாராலும் புரிந்துகொள்ள முடியாதவராக இருக்கிறார் பிரசாந்த் கிஷோர்.

2011ஆம் ஆண்டு பிரசாந்த் கிஷோர் அரசியல் ஆலோசனை நிறுவனமான ஐபேக்கை ஆரம்பித்தார். இந்த ஐபேக் நிறுவனம் ஒன்பது தேர்தல்களில் அரசியல் கட்சிகளுக்கு ஆலோசனை வழங்கியது. பிரசாந்த் கிஷோர் எந்தக் கட்சிக்கு ஆதரவாக இருந்தாரோ அவை 8 தேர்தல்களில் வெற்றி பெற்றன. 2012ஆம் ஆண்டு குஜராத் மாநில சட்டசபைத் தேர்தலின்போது பா.ஜ.க.வுக்கு வியூகங்களை வகுத்துக் கொடுத்தார் பிரசாந்த் கிஷோர். நான்காவது முறையாக பிரதமர் நரேந்திர மோடி குஜராத் முதலமைச்சராகப் பொறுப்புக்கு வந்தார். அவரது பணியால் கவரப்பெற்ற நரேந்திர மோடி, 2014 ஆம் ஆண்டு தேசிய அளவில் பா.ஜ.க.வுக்கு வியூகம் அமைக்கும் பொறுப்பை அவருக்கு வழங்கினார்.

அந்தத் தேர்தலில் இந்திரா காந்திக்குப் பிறகு தனிப்பெரும்பான்மையுடன் நரேந்திர மோடி மத்தியில் ஆட்சி பீடம் ஏறினார். பிரசாந்த் கிஷோர் சார்ந்திருந்த பா.ஜ.க. இச்சாதனையைப் படைத்தது. நரேந்திர மோடி முதன்முறையாகப் பிரதமராகப் பதவியேற்றார்.

பிரசாந்த் கிஷோருக்கு கட்சி வேறுபாடுகள் எதுவும் கிடையாது. 2017ஆம் ஆண்டு உத்தரப்பிரதேசம், பஞ்சாப் மாநில பொதுத் தேர்தல்களில் காங்கிரஸுக்கு ஆலோசனை வழங்கினார். 2019 ஆம் ஆண்டு ஆந்திராவில் ஜெகன்மோகன் ரெட்டி, 2020 ஆம் ஆண்டு டெல்லியில் ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால், 2021 ஆம் ஆண்டு மேற்கு வங்க மாநில சட்டசபை தேர்தலுக்காக திரிணாமுல் காங்கிரஸ் கட்சி, 2021 ஆம் ஆண்டு தமிழகத்தில் ஸ்டாலின் என ஆலோசனைகளை வழங்கினார்.

பிரசாந்த் கிஷோர் உடன் நடத்தப்பட்ட ஆலோசனைகள் குறித்து சமீபத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர்களுடன் ராகுல்காந்தி ஆலோசனை நடத்தியிருந்தார். அப்போது பிரசாந்த் கிஷோர் காங்கிரஸில் இணைவதற்கு விரும்புவதாக ராகுல் காந்தி கூறியதாகத் தகவல் வெளியாகியிருந்தது.

பிரசாந்த் கிஷோரின் சேவை தங்களுக்கு தேவை என்பதில் காங்கிரஸ் உறுதியாக இருக்கிறது. எனவே, அவரை கட்சியில் சேர்த்துக் கொள்ள வாய்ப்பிருப்பதாக தெரிகிறது. இந்த நிலையில்தான் பிரசாந்த் கிஷோர் பஞ்சாப் மாநில முதல்வரின் முதன்மை ஆலோசகர் பதவியை ராஜினாமா செய்துள்ளமை முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. இதை பாரதீய ஜனதா கட்சி உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. இதனால் ஏதாவது பாதிப்புஏற்படுமா என பாரதீய ஜனதா கட்சி ஆய்வு செய்கிறது.

பஞ்சாபில் அமரீந்தர் சிங் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி நடைபெறுகிறது. அம்மாநில சட்டசபைக்கு அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளது. 2017 தேர்தலில் அமரீந்தர் சிங்கிற்காக பிரசாந்த் கிஷோரின் அணி பணியாற்றியது. வரும் தேர்தலிலும் முதல்வர் வேட்பாளராக கப்டன் அமரீந்தர் சிங் போட்டியிட உள்ளார். கடந்த மார்ச் மாதம் பிரசாந்த் கிஷோரை தனது முதன்மை ஆலோசகராக அமரீந்தர் சிங் நியமித்திருந்தார்

இந்நிலையில் பஞ்சாப் முதல்வருக்கு தனது இராஜினாமா கடிதத்தை அனுப்பியுள்ளார் பிரசாந்த் கிஷோர். அதில் “பொது வாழ்க்கையில் இருந்து தற்காலிக இடைவெளி எடுக்கும் எனது முடிவால் உங்கள் முதன்மை ஆலோசகர் பொறுப்பை என்னால் ஏற்க இயலவில்லை.

எனது எதிர்கால நடவடிக்கை குறித்து நான் இன்னும் முடிவு செய்யாததால், இந்த பொறுப்பிலிருந்து என்னை தயவுசெய்து விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்பொறுப்புக்கு என்னை கருத்தில் கொண்டதற்கு நன்றி” என கூறியுள்ளார்.

பிரசாந்த் கிஷோர், காங்கிரஸ் கட்சியில் இணைந்து ஏனைய கட்சிகளை ஒன்றிணைப்பாரா அல்லது எந்தக் கட்சியிலும் சேராமல் வெளியே இருந்து எதிர்க்கட்சிகளை ஓரணியில் சேர்ப்பாரா என்று தெரியவில்லை.

**ரமணி**

# சாவகச்சேரியில் தடுப்பூசியேற்றும் பணி சில மணிநேரங்கள் இடைநிறுத்தம்



(சாவகச்சேரி செய்தியாளர்)


பொதுமக்களின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட தடுப்பூசி செலுத்தும் பணிகள் சில மணி நேரங்கள் தடைப்பட்டன.

ஒவ்வாமை உடையவர்கள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அனுமதி பெற்று சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தடுப்பூசி பெற்று வருகின்றனர். இந் நிலையில், தடுப்பூசி பெற வந்த பொதுமக்கள் சமூக இடைவெளி ஏதுமின்றி முண்டியடித்ததால் வைத்தியசாலை நிர்வாகம் சில மணி நேரங்களுக்கு தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை நிறுத்தி வைத்திருந்தது.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு சிகிச்சை பெற வந்த நோயாளர்கள்பலர் கடந்த தினங்களில் தொற்றுக்குள் ளானவர்களாக அடையாளம் காணப்பட்ட நிலையில், தடுப்பூசி பெற வந்தவர்களின் பொறுப்பற்ற செயற்பாடு பலரையும் கவலையடையச் செய்துள்ளது.

# 30 வயதிற்கு மேற்பட்டோர் தடுப்பூசியைப் பெறவும்!

## இராணுவத் தளபதி யாழில் தெரிவிப்பு



யாழ்ப்பாணத்தில் 30 வயதிற்கு மேற்பட்டோர் அனைவரும் தடுப்பூசியைப்பெற்றுக் கொள்ள வேண்டுமென இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

வடகிழக்கு பகுதிகளில் இராணுவத்தினரால் பல்வேறுபட்ட சமூக நலன்சார் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன் ஒரு அங்கமாகவே இன்றைய தினம் (நேற்று) அண்மையில் விடுதலை செய்யப்பட்ட 15 முன்னாள் போராளிகளுக்கு உதவித் தொகையாக ஒரு இலட்சம் ரூபா நிதியை வழங்கிவைத்துள்ளோம். இதேபோல் ஏற்கனவே பல்வேறு திட்டங்களை நாம் முன்னெடுத்துள்ளோம் . இராணுவமானது யுத்தம் புரிவதற்கு மட்டுமல்ல. இவ்வாறான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றது.

தற்போது நாடு பூராகவும் கொரோனா தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுகின்றது

யாழ். மாவட்டத்தில் நேற்றும் அதிகளவான வர்கள் தொற்றுக்குள்ளானவர்களாக இனங்காணப் பட்டுள்ளார்கள். எனினும், தற்போது தொடர்ச்சியாக எமக்குப் பிற நாடுகளிலிருந்து தடுப்பூசிகள் பெறப்பட்டு மக்களுக்கு ஏற்றப்பட்டு வருகின்றன.

அதேபோல் யாழ்ப்பாண மாவட்டத்திலும் இந்த தடுப்பூசி வழங்கல் திட்டம் திறமையாக செயற்படுத்தப்படுகின்றது. எனவே, யாழ்ப்பாண மாவட்டத்தில் 60 வயதிற்கு மேற்பட்டோர் கட்டாயமாக இந்த தடுப்பூசியினைப் போடுங்கள் ஏனெனில், உங்களது உயிரைப் பாதுகாப்பதற்கு இது ஒரு முக்கியமான விடயமாகவும், அதே போல் யாழ்ப்பாணத்திலுள்ள 30 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் இந்த தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில், இந்த நோய்க்கு தடுப்பூசியை பெற்றுக் கொள்வதன் மூலமே இறப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும். இலங்கை மட்டுமல்ல. உலகளாவிய ரீதியில் தடுப்பூசி ஒன்றுதான் இந்த நோய்க்கு மருந்தாகக் காணப்படுகின்றது.

அதேபோல் நேற்று முன்தினம் எமது கொரோனா ஒழிப்பு செயலணியானது கூடி சில தீர்மானங்கள் எடுத்தோம். அவை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். எனினும், பொதுமக்கள் குறித்த தீர்மானங்களுக்கு ஏற்ப செயற்பட வேண்டும்.

அவ்வாறு செயற்படுவதன் மூலமே இந்த நோய்த் தொற்றிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

# கார்த்திகேசுவின் மறைவுக்கு மாத்தளை சோமு அனுதாபம்



மாத்தளையில் தமிழுக்கும், தமிழருக்கும் வழிகாட்டியாக இருந்த பன்முக ஆளுமைகொண்ட மாத்தளை கார்த்திகேசுவின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும் என எழுத்தாளர் மாத்தளை சோமு தெரிவித்துள்ளார். அவர் தனது அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கையில்,

மாத்தளை தமிழர்களின் கல்வியிலும், இலக்கிய வளர்ச்சியிலும், முத்துமாரியம்மன் ஆலய முன்னேற்றத்திலும், தமிழ்மொழி பரவலிலும் அவரின் பங்களிப்பு அளவிட முடியாதது.

60களில் மாத்தளையில் நடத்திய திருக்குறள் மாநாடு திருப்பம் தந்த மாநாடு. அம்மாநாட்டில் நடந்த கதையரங்கம் மறக்க முடியாதது.

கணீரென்ற குரல், தொடங்கியதை சாதிக்க வேண்டும் என்ற உணர்வு என்பனவற்றுக்கு சொந்தக்காரர் கார்த்திகேசு. ஆண்டுதோறும் அம்பாள் தேரில் ஒரு தொண்டனாக ஒருநாள் இரவும், ஒருநாள் பகலும் நின்று நடந்து வரும் அவர் எல்லா சமயங்களையும் அரவணைத்தவர். இஸ்லாமிய, கிறிஸ்தவ நண்பர்களின் ஆதரவோடு பறைமுழங்கி கொழும்பில் நாடகம் போட்டவர்.

''அவள் ஒரு ஜீவநதி'' என்ற திரைப்படத்தைத் தயாரித்தவர். இன்று மாத்தளைத் தமிழர்களின் ஜீவநதியாக இதயங்களில் அமர்ந்து விட்டார்.அவருடைய குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தாலும், இனி ஒரு கார்த்திகேசு இல்லையே என்ற கவலை எனக்குள் நீள்கிறது என்று அவுஸ்திரேலியாவில் வாழும் எழுத்தாளர் மாத்தளை சோமு தனது அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.



திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொதுச் சுகாதார மருத்துவ தாதிகள் ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (06) நடைபெற்றது. (படங்கள்: திருகோணமலை செய்தியாளர்)

# சிறந்த சேவையாற்றி விடைபெற்ற இராணுவ அதிகாரிக்கு அக்கரைப்பற்று பள்ளிவாசல்கள் சம்மேளனம் கௌரவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

கொரோனா காலம் முதல் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அக்கரைப்பற்றில் சிறப்பாகத் தொழிற்பட்ட அக்கரைப்பற்று 241 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி ஜனக விமலரத்னவுக்கு சேவை நலன் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று ஜும்ஆ பள்ளிவாசலில் சம்மேளனத்தின் தலைவர் எஸ்.எம். சபீஸ் தலைமையில் அக்கரைப்பற்றில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனமும், அக்கரைப்பற்று ஜம்மியத்துல் உலமா சபையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் கடந்த காலங்களில் அக்கரைப்பற்று பிராந்திய மக்களுக்கு 241 ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி ஜனக விமலரத்ன செய்த சேவைகள் நினைவு கூரப்பட்டு நன்றி நவிலல் இடம்பெற்றதுடன், பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் சம்மேளனத்தின் செயலாளர் அஷ்ஷேக் ஏ.எம்.ரஃமத்துல்லாஹ், பொருளாளர் ஏ.எல்.தௌபீக், உலமாக்கள், பாதுகாப்புப் படையினர், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# சுகாதார வழிமுறைகளை கட்டாயம் பின்பற்றுங்கள்

## திருகோணமலை அரசாங்க அதிபர் வேண்டுகோள்



நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் கொவிட் வைரஸ் பரவல் நிலையில், மக்கள் சுகாதாரத்துறையினரால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை கட்டாயம் பின்பற்றி நடந்து கொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள நேற்று முன்தினம் (6) தெரிவித்தார்.

முகக் கவசம் அணிதல், கைகளை கழுவுதல், சமூக இடைவெளியை பேணல், ஒன்றுகூடல்களைத் தவிர்த்தல், அவசியமற்ற பயணங்களிலிருந்து தவிர்த்தல் ஆகிய விடயங்களில் கூடிய கவனம் செலுத்துமாறும் அவர் மக்களை வேண்டிக் கொண்டார்.

மேலும், திருகோணமலை மாவட்டத்தின் கொரோனா ஒழிப்பு செயற்பாடுகளை எவ்வித பாதகமும் இல்லாமல் மேற்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. ஒவ்வொரு கருமத்தை ஆற்றுகின்ற சந்தர்ப்பத்திலும் மக்கள் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களை பின்பற்றி செயற்பட்டால் வைரஸை கட்டுப்படுத்த ஏதுவாக அமையும். மக்கள் அனைவரும் இச்சவாலான காலப்பகுதியை வைரஸை ஒழிக்கும் வகையில் மிகப் பொறுப்புடன் நடந்து கொள்வது காலத்தின் தேவையாகும் என்று தெரிவித்தார்.

# அதிபர் – ஆசிரியர்களின் நியாயமான போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்குவதை நிறுத்துக!

## ரெலோவின் நிர்வாகச் செயலாளர் நித்தி மாஸ்டர் வேண்டுகோள்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

அதிபர், ஆசிரியர்களின் நியாயமான போராட்டத்தை அரசாங்கம் இரும்புக்கரம் கொண்டு அடக்க முயற்சிப்பதாகவும், அதனை நிறுத்த வேண்டுமெனவும் ரெலோவின் நிர்வாகச் செயலாளர் நித்தி மாஸ்டர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆசிரியர்கள் சமுதாயத்தில் மிகவும் முக்கியமான வகிபங்கைக் கொண்டிருப்பவர்கள். தனியாக ஊதியத்தை மட்டும் கருதாமல் சொந்த பந்தம் அல்லாத இன, மதம் பாராத சகல பிள்ளைகளையும் தங்கள் மாணவச் செல்வங்களாக நினைத்து கல்வியைப் போதிப்பவர்கள். எனவே, அவர்களின் சம்பள முரண்பாட்டிற்கான போராட்டம் நியாயமானது. இது ஒரு ஜனநாயக ரீதியான நியாயமான போராட்டம். காலங்காலமாக ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள், ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாக வாக்குறுதிகளை மட்டும் வழங்கி விட்டு அதனை நிறைவேற்றாது கைவிடும் நிலையே தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நாடு பூராகவும் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள், அதிபர்களின் போராட்டங்கள் மிகவும் வலுப்பெற்று இருக்கும் நிலையில், ஆசிரியர்களைக் கைது செய்ததன் மூலம் இந்த அரசாங்கமானது தனது இரும்புக்கரங்களைக் கொண்டு இப்போராட்டத்தை அடக்க முற்பட்டிருப்பதானது மிகவும் கண்டிக்கத்தக்கது. இந்த ஆசிரியர்களை உடனடியாக விடுவிக்க சகல அரசியல் கட்சிகளும் கட்சி பேதங்களை மறந்து குரல் கொடுக்க வேண்டும்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் அரச உயர் அதிகாரிகளிடம் தங்களுக்கு நற்பெயர்களை ஏற்படுத்திக் கொள்ளவும், எதிர்காலத்தில் பின்கதவால் சென்று முறையற்ற விதத்தில் பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ளவும் பல அதிபர்கள் முற்படுவது இப்போராட்டத்தைக் காட்டிக்கொடுப்பதற்கு ஒப்பானதாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.






சிறிய அளவிலான
தலைசிறந்த படைப்புகள்
உங்கள் இல்லத்திற்கு

லங்காடைல்ஸ் வழங்கும் மொஸைக்ஸ்.
அறுகோண, எண்கோண, தட்டை,
டயமன்ட்பெக் மற்றும் லன்டேர்ன்
வடிவங்களில் மெற் மற்றும் குளொஸ்
ஒப்பனைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்.

LANKATILES
கலைநயமான வாழ்க்கை

வாடிக்கையாளர் சேவை: 011 7 622 822
மின்னஞ்சல்: info@lankatiles.com
www.lankatiles.com
சகல லங்காடைல்ஸ் காட்சியறைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

# பேராபத்தில் நாடு!

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பொ்னாண்டோபுள்ளே தமிழன் வார இதழுக்கு விசேட செவ்வி

***டெல்ட்டா திரிபின் பரவல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. டெல்ட்டா தொற்றின் பரவலானது கொழும்பில் மாத்திரம் 75 சதவீதமாகக் காணப்படுகின்றது. மறுபுறம் புதிய கொரோனா நோயாளர்கள், மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்போது அதனை அபாய நிலையாகவே கருதவேண்டுமென ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தமிழன் வார இதழுக்கு தெரிவித்தார்.***

***அவருடனான உரையாடலின் முழுவிபரம் வருமாறு,***



**கேள்வி:** நாட்டில் மீண்டும் கொரோனா தொற்று மிக வீரியத்துடன் பரவலடைவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்த நிலைமையை தடுப்பூசி வழங்குவதனூடாக மாத்திரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியுமென கருதுகிறீர்களா?

பதில்: கொரோனா பரவலின் தன்மை சற்று மாறுபட்டுள்ளது. தற்போதுள்ள நிலைமையை தடுப்பூசி வேலைத்திட்டத்தினூடாக மாத்திரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது கடினமான விடயமாகும். ஆனால், தடுப்பூசி வழங்குவதனூடாக கொரோனாவினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த முடியும் என்பதுடன், சிக்கல்நிலையையும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

இருந்தபோதிலும், தற்போது நாட்டில் பரவும் டெல்ட்டா தொற்றை தடுப்பூசிகளினால் மாத்திரம் சமாளிக்க முடியாது. தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள், பெற்றுக்கொள்ளாதவர்கள் என்ற வேறுபாடின்றி சகலருக்கும் ஒரே வீரியத்தில் டெல்ட்டா திரிபு தாக்கத்தை ஏற்படுத்துவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஆனால், தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களுக்கு டெல்ட்டா தொற்றின் தாக்கம் ஏற்படும்போது, அவர்களின் உடம்பில் அந்த வைரஸின் செயற்பாடு வலுவிழந்து அவை விரைவில் அழிவடைந்து விடுகின்றன. அதற்குக் காரணம் தடுப்பூசியை பெற்றுக்கொள்பவர்களுக்கு நோயெதிர்ப்பு சக்தி அதிகரிப்பதாகும். இதுவே தடுப்பூசி பெற்றுக்கொள்பவர்களுக்குக் கிடைக்கும் பெரும் நன்மையாகும்.

தடுப்பூசி ஏற்றுவது எவ்வளவு அவசியமோ அதேபோன்று முகக்கவசம் அணிதல், ஒரு மீற்றர் தூரம் இடைவெளியைப் பேணுதல், அதிக சன நெரிசலுடைய இடங்களுக்கு அவசியமின்றி பயணித்தல் போன்ற சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும்.

குறிப்பாக, டெல்ட்டா திரிபின் புதிய தன்மை தொடர்பிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய, குளிரூட்டப்பட்ட மூடிய அறைகளில் நபரொருவருக்கு நோய் நிலை ஏற்பட்டால், அவரிடமிருந்து வெளியாகும் கிருமிகள் 16 மணித்தியாலயத்துக்கு உயிருடன் இருக்க முடியுமென அவுஸ்திரேலியாவின் தொற்று நோய் தொடர்பான நிபுணர் ஒருவர் அடையாளம் கண்டுள்ளார். அதனால், முடிந்தளவு மக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் இடங்களுக்கு செல்லாமல் இருத்தல், வெளியில் செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றினால் எமக்குத் தொற்று ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

**கேள்வி :** குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்குவது தொடர்பில் ஏதாவது தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதா?

பதில்: உலக நாடுகளில் குழந்தைகளுக்குத் தடுப்பூசி வழங்கப்படுவதில்லை. அமெரிக்கா போன்ற நாடுகளில் 12 வயதுக்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசி வழங்கப்படுகின்றது. ஆனால், எமது நாட்டில் இதுவரையில் சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை.

தற்போது 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கே தடுப்பூசி வழங்கப்படுகின்றது. 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் நிறைவடைந்ததும், 18 வயதிலிருந்து 30 வயது வரையிலானவர்களுக்கு தடுப்பூசி வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

தடுப்பூசி வழங்குவது தொடர்பான குழு இதுகுறித்த தீர்மானங்களை எடுக்கும். அந்தக் குழுவின் தீர்மானங்களுக்கமைய சிறுவயதினருக்கும் தடுப்பூசி வழங்கக் கூடியதாக இருக்கும். அநேகமாக, அதிகளவில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களே கொரோனாவினால் மரணிக்கிறார்கள். வயது குறைவடைய குறைவடைய மரண வீதமும் குறைவடையும்.

சிறுவர்கள் கொரோனாவால் உயிரிழப்பார்களேயானால் புற்றுநோய், சிறுநீரக நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களே இவ்வாறு மரணிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மாறாக, சிறுவர்களுக்குத் தொற்று பரவலடைவதற்கான சிக்கல் நிலை இருக்கின்றதே தவிர உயிரிழப்புகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாகும்.

**கேள்வி:** கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வைத்தியசாலைகள் நிரம்பும் அளவுக்கு அபாயமான நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா?

பதில்: நோயாளர்கள் அதிகரித்துள்ளார்கள். ஏற்கனவே வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் விரைவாக தொற்றுக்குள்ளாகிறார்கள். இவ்வாறு நோய் நிலைமை அதிகரிக்கும்போது மக்கள் வைத்தியசாலைகளுக்கு விரைந்து செல்லும் நிலை உருவாகிறது.

அதனால், கொரோனா தொற்றினால் பாதிக்கப்படுபவர்களை இடைநிலை சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பவும், தொற்றினால் பாதிக்கப்பட்டு அவதியுறுபவர்களை வைத்தியசாலைகளுக்கு அனுப்பவும், 60 வயதுக்குக் குறைந்த வேறு எந்த நோயினாலும் பாதிக்கப்படாமல் தொற்றுக்குள்ளானவர்களை வீடுகளில் வைத்து சிகிச்சை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, வீட்டில் வைத்து சிகிச்சை வழங்குவதற்கான வசதிகள் இல்லாதவர்களை இடைநிலை சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை வழங்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சுகாதார அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

**கேள்வி:** சில மாதங்களுக்கு முன்னர் ஜூன் மற்றும் ஜூலை மாதமாகும்போது கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து நோயாளர்களின் மரணங்களும் அதிகரிக்குமென வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். வைத்தியர்கள் கூறியது இன்று உண்மையாகியுள்ளதல்லவா?

பதில்: ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் புது வருட கொத்தணிகள் உருவாகியபோது உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் மரணங்கள் அதிகரிக்குமென எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், அதன் பின்னர் நோயாளர்களின் எண்ணிக்கையும், மரணங்களின் எண்ணிக்கையும் குறைவடைந்திருந்தன.

இந்நிலையில், டெல்ட்டா திரிபின் காரணமாகவே மீண்டும் நோயாளர்களின் எண்ணிக்கையும், மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றன.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் டெல்ட்டா திரிபு அடையாளம் காணப்பட்டதையடுத்து கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 75 சதவீதம் டெல்ட்டா திரிபின் பரவல் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, மிகவும் வேகமாக இந்த டெல்ட்டா தொற்று பரவலடைகின்றது. பரவலடையும் வேகமும், வைரஸின் வீரியமும் அதிகரிக்கும்போது நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது.

அவ்வாறு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தவுடன் அவர்களுக்கு ஒட்சிசன் தேவை ஏற்படுகின்றது. ஓட்சிசன் தேவைப்பாடும், நிமோனியா நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றன. அத்துடன், மரணிக்கும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றது.

இந்த நிலைமை நீடிக்குமாயின் எதிர்வரும் நாட்களில் கொரோனா தொற்றுக்குள்ளான நோயாளர்கள் மேலும் அதிகளவானவர்கள் உயிரிழப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

**கேள்வி:** டெல்ட்டா தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்பட்ட ஆரம்ப காலப்பகுதியிலேயே வைத்திய நிபுணர்கள் கூறியதைப் போன்று நாட்டை முடக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தால் தற்போதைய நிலையிலிருந்து நாட்டைப் பாதுகாத்திருக்கலாம் அல்லவா?

பதில்: நாட்டை முடக்குவதால் டெல்ட்டா திரிபின் பரவலை எம்மால் தடுக்க முடியாது. இந்தத் திரிபு நபரொருவரிடத்திலிருந்து நபரொருவருக்கு பரவலடையும் நிலையே காணப்படுகின்றது. ஆகவே, மக்களின் நடவடிக்கைகளுக்கமையவே தொற்று பரவலடையும் தன்மையும் மாறுபடுகின்றது. நாட்டை முடக்கத்திலிருந்து விடுவித்ததும், மக்கள் நிலைமையை அறியாமல் நடமாட ஆரம்பித்ததால் தொற்று நிலைமை மீண்டும் பரவலடைய ஆரம்பித்துவிட்டது.

இந்நிலைமையை மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டுமாயின் கடுமையான சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவதுடன், தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**கேள்வி :** தற்போதைய நிலைமையில் நாட்டை முடக்கும் தீர்மானம் எதுவும் அரசாங்கத்திடம் இருக்கின்றதா?

பதில்: இப்போதைய சூழ்நிலையில் அவ்வாறானவொரு தீர்மானம் இல்லை.

**கேள்வி:** மேல் மற்றும் தென்மாகாணத்திலுள்ள சில வைத்தியசாலைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து, நோயாளர்களுக்குத் தேவையான கட்டில்கள் இல்லாத அவசர நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

பதில்: கொழும்பு, களுபோவிலை, ராகம போன்ற பிரதான வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு தேவையான கட்டில்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒட்டுமொத்த கொரோனா நோயாளர்களும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

**கேள்வி :** எமது நாடு மிகவும் அபாய நிலையை சந்தித்துள்ளது அல்லவா?

பதல்: இவ்வாறு கொரோனா நோயாளர்களும், மரணங்களும் அதிகரிக்கும்போது அதனை அபாய நிலையாகவே கருதவேண்டும்.

**கேள்வி:** நாட்டில் நோயாளர்களுக்குத் தேவையான அளவு கட்டில்கள் இருப்பில் இருக்கின்றனவா?

பதில்: தற்போதைக்கு தேவையான அளவு கட்டில்கள் இருக்கின்றன. இருந்த போதிலும், அவை வரையறுக்கப்பட்ட அளவிலானவையாகும். கட்டில்களை அதிகரிக்க முடியும். புதிய கட்டடங்களை நிர்மாணிக்க முடியும். ஆனால், புதிதாக மனித வளத்தை உருவாக்க முடியாது. புதிதாக வைத்தியர்கள், நிபுணர்கள், தாதியர், சிற்றூழியர்கள் என சுகாதாரத்துறை அதிகாரிகளை எம்மால் அழைத்துவர முடியாது.

எனவே, நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே மிகவும் சிறந்ததாக அமையும். தொற்று உடம்பில் நுழையாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது ஒவ்வொரு தனிநபரதும் பொறுப்பாகும். இன்னும் தடுப்பூசி பெற்றுக்கொள்ளவில்லை என்றால், அருகிலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரிகளிடம் சென்று தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டியதே மிகவும் சிறந்ததாகும்.

**கேள்வி:** அவ்வாறு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள மக்கள் சம்பந்தப்பட்ட இடங்களை நாடும்போது தடுப்பூசிகள் முடிவடைந்து விடும் நிலைமையும் காணப்படுகின்றதே?

பதில்: அவை சாதாரணப் பிரச்சினைகளே. முழு நாட்டிலும் அவ்வாறான பிரச்சினை இல்லை. ஒரு சில இடங்களிலே இந்த சிக்கல் நிலைமை காணப்படுகின்றது. ஆனால், மில்லியன் கணக்கான மக்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு செல்லும்போது ஒரு சில சந்தர்ப்பங்களில் அரிசி இல்லாமல் போகும் சந்தர்ப்பங்களும் இருக்கின்றன.

அவ்வாறு தடுப்பூசிகள் நிறைவடையுமாக இருந்தால், அடுத்தகட்ட தடுப்பூசிகள் கொண்டுவரப்பட்டவுடன் ஏனையவர்களுக்கும் தடுப்பூசிகள் வழங்கப்படும். குறைகள் இல்லாத நாடு இல்லை.

**கேள்வி:** சுகாதாரத்துறை செய்ய வேண்டிய விடயங்களை இராணுவத்தினரால் முன்னெடுக்க முடியாதென்றும், கொவிட் - 19 கட்டுப்பாட்டுச் செயலணி தோல்வியடைந்துள்ளதாகவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் அறிவித்திருந்தார். இது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில்: அது முன்னாள் பிரதமரின் நிலைப்பாடாக இருக்கலாம். ஆனால், சுகாதாரப் பிரிவினரால் மாத்திரம் இந்த நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாது. சுகாதாரத்துறையினருக்கு முப்படையினர் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

அதேபோன்று, கிராம மட்டத்திலுள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்பும் எமக்கு அவசியம். அதனால், கொரோனா கட்டுப்பாட்டுக்காக இராணுவத்தினரிடமிருந்து கிடைக்க வேண்டிய சகல உதவிகளும் எமக்குக் கிடைக்கின்றன.

**கேள்வி:** அவ்வாறானால், இந்த நிலைமைக்கு பொறுப்புக் கூற வேண்டியது யார்?

பதில்: இதற்கு யாரும் பொறுப்புக் கூற முடியாது. உலகம் முழுவதுமுள்ள ஏனைய நாடுகளைப் போன்று கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. அதனால், இது யாருடைய தவறும் இல்லை. எவருக்கும் பொறுப்புக் கூற முடியாது.

**கேள்வி:** நாட்டில் தற்போது டெல்ட்டா எவ்வாறான நிலைமையில் இருக்கிறது?

பதில்: தற்போதுள்ள நோய் அறிகுறிகள் மற்றும் பரவலடையும் வீதத்துக்கமைய டெல்ட்டா திரிபின் தாக்கம் அதிகரித்து வருகின்றது என்றே கூற வேண்டும். கொழும்பில் மாத்திரம் 75 சதவீதம் டெல்ட்டா தொற்றின் தாக்கம் இருக்கிறது. இலங்கையில் மாத்திரமல்ல, அநேகமான நாடுகளின் பிரதான வைரஸாக டெல்ட்டா திரிபு காணப்படுகின்றது.

**கேள்வி:** நாளாந்தம் இனங்காணப்படும் டெல்ட்டா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை முழுமையாக வெளியிடப்படுகின்றதா? அதில் ஏதேனும் குறைப்பாடு இருக்கின்றதா?

பதில்: நாளாந்தம் அது தொடர்பான தகவல்கள் வெளியிடப்படுகின்றன. இருந்தபோதிலும், தற்போதுள்ளதை விட அதிளவான, இனங்காணப்படாத நோயாளர்கள் சமூகத்தில் இருக்க முடியும்.

**கேள்வி:** இந்த டெல்ட்டா திரிபு தொடர்பான ஆய்வுகளை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மாத்திரமே முன்னெடுக்கின்றது. இந்த பல்கலைக்கழகத்தில் மாத்திரம் பரிசோதனைகளை முன்னெடுப்பதால் குறைபாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கிறது அல்லவா?

பதில்: எந்தத் திரிபானாலும் சிகிச்சை முறை, கட்டுப்படுத்தல் முறை, தடுப்பூசி வழங்குதல் என சகல விடயங்களும் ஒன்றாகவே இருக்கப் போகின்றன. அதனால், என்ன வைரஸ் என்பதை ஒவ்வொரு நோயாளரிடமும் அடையாளம் காண வேண்டிய அவசியம் இல்லை. அந்த வைரஸ் நாட்டில் இருக்கிறதா என்பதையே அறிந்துகொள்ள வேண்டும். பரவலடையும் வேகத்துக்கமைய அதன் தன்மை வைத்தியர்களுக்குத் தெரியும். அதற்கமைய சிகிச்சைகள் வழங்கப்படும்.

அதனால், ஒவ்வொரு ஆய்வுகூடங்களிலும் வைரஸ் பரிசோதனை திறனை அதிகரிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அவ்வாறு செய்ய வேண்டுமாயின் அதற்கான வசதிகளுக்கு பெருமளவு நிதி செலவிட வேண்டியேற்படும். ஆகவே எழுமாறான பரிசோதனைக்கான ஆய்வுகூட வசதி போதுமானதாகும்.

**கேள்வி:** இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைகளுக்கமைய டெல்ட்டா தொற்றுடன் எத்தனை நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்?

பதில்: ஆய்வுக்கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளுக்கமைய 100 பேர் வரையில் டெல்ட்டா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தாலும், பரவலடையும் வீதத்துக்கமைய நிலைமை வைத்தியர்களுக்குத் தெரியும். அதனால், நோயாளர்கள் தற்போது அதிகரித்து வருவதற்கான காரணம் டெல்ட்டா என்பதும் வைத்தியர்களுக்கு தெரியும்.

ஆய்வுகூடத்தில் இனங்காணப்பட்ட டெல்ட்டா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 167 என்பதற்காக அதில் எந்தப் பயனுமில்லை. நோய் அறிகுறிகளுக்கமைய அதனை வைத்தியர்களால் அடையாளம் காண முடியும்.

**கேள்வி :** கொரோனா கட்டுப்படுத்தல் தொடர்பான குழுக் கூட்டங்களில் கலந்துகொள்கிறீர்களா?

பதில்: ஆம். சகல கூட்டங்களிலும் கலந்து கொள்கிறேன்.

**கேள்வி:** இறுதிக் கூட்டத்தில் கொரோனா கட்டுப்பாடு தொடர்பில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டது?

பதில்: சுகாதாரத் திருத்தங்களில் புதிய திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. அதற்கமைய, 500இற்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றக்கூடிய மண்டபங்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகளில் 150 பேர் வரையில் மாத்திரமே கலந்துகொள்ளுதல் போன்ற மாற்றங்கள் கொண்டுவரப் பட்டுள்ளன.

**கேள்வி:** இதனை எம்மால் நான்காவது அலையாகக் கருதமுடியுமா?

பதில்: அவ்வாறு குறிப்பிட முடியாது. ஆனால், தொற்றுப்பரவல் நிலை மீண்டும் அதிகரித்துள்ளது.

தற்போதுள்ள நிலைமை பாரதூரமான ஆபத்து நிலையாகும். நான்காவது அலையா, ஐந்தாவது அலையா என்று கணக்கெடுப்பதை விட எதிர்காலத்தில் நோயாளர்களதும், மரணங்களினதும் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதே தற்போதுள்ள பாரதூர சிக்கல் நிலைமையாகும்.

**உரையாடல்: நா. தினுஷா**



# நீதித்துறை உயர் பதவியில் நீதியரசர் சசிமகேந்திரன்

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பாலேந்திரன் சசிமகேந்திரன், 05/08/2021ஆம் திகதியன்று தனது சம்பிரதாயபூர்வ உரையை மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆற்றினார். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ள முதற் சந்தர்ப்பம் இதுவாகும். அத்தோடு 22 வருடங்களின் பின்னர் நீதித்துறையில் நீதிபதியாகக் (Carrier Judge) கடமையாற்றிய தமிழர் ஒருவருக்கு மேன்முறையீட்டு நீதியரசராக பதவியுயர்வு கிடைத்த சந்தர்ப்பமும் இதுவே ஆகும்.

திருகோணமலை மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட நீதியரசர் பாலேந்திரன் சசிமகேந்திரன் அவர்கள் மறைந்த மக்கள் வங்கி முகாமையாளர் லக்ஷ்மன் பாலேந்திரன் - ஆசிரியை மகேஸ்வரி பாலேந்திரன் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனாவார். பொறியியலாளர் சுரேந்திரன், ஆசிரியை பாலேஸ்வரி தயாளக்குமார் மற்றும் சர்மிளா தனராஜ் ஆகியோரின் சகோதரராவார். தனது ஆரம்பக்கல்வியை திருகோணமலை மெதடிஸ் கல்லூரியிலும், புனித வளனார் தமிழ்ப் பாடசாலையிலும் இடைநிலைக்கல்வியை குருத்தலாவ சென். தோமஸ் கல்லூரி மற்றும் திருகோணமலை இந்துக்கல்லூரியிலும் பயின்றதுடன், பாடசாலைக் காலங்களில் விவாத அணியின் தலைவராகவும், கூடைப்பந்தாட்ட அணியின் தலைவராகவும் விளங்கினார். திருகோணமலை மாவட்டத்தின் சாரணருக்குரிய முதனிலை சின்னத்தை முதலில் பெற்ற பெருமையும் இவரையே சாரும்.

நீதியரசர் பாலேந்திரன் சசிமகேந்திரன் 1989 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டதுடன், 1991ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டின் சொலிசிற்றராகவும் பதவிப்பிரமாணம் பெற்றார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டமுதுமாணிப் பட்டத்தைப் பெற்றதுடன், சட்டவைத்தியத்தில் டிப்ளோமாவையும் பூர்த்திசெய்துள்ளார். இலங்கை சட்டக்கல்லூரியில் வங்கி மற்றும் காப்புறுதிச் சட்டங்களில் டிப்ளோமா பிற்கற்கை நெறியினைப் பயின்றுள்ளார். சட்டக்கல்லூரியில் பயின்ற காலப்பகுதியில் தமிழ் மன்றத்தின் செயலாளர், கிறிஸ்தவ அமைப்பின் தலைவர் ஆகிய பதவிகளை வகித்ததுடன், ஹொக்கி மற்றும் கூடைப்பந்தாட்ட அணியின் உறுப்பினராகவும் காணப்பட்டார்.

ஐக்கிய இராச்சியத்தில் சொலிசிற்றர் சில்வா அன்ட் கோ சொலிசிற்றர்ஸ் எனும் நிறுவனத்தில் குடிவரவுச் சட்டங்கள் தொடர்பில் இரு ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் பெற்றவராவார். சுந்தரலிங்கம் அன்ட் அஷோசியேட்ஸ் எனும் சட்டநிறுவனத்தில் சில ஆண்டுகள் பணிபுரிந்த பின்னர் 1997ஆம் ஆண்டு சட்ட மா அதிபர் திணைக்களத்தில் பதில் அரச சட்டவாதியாக இணைந்துகொண்டார். 1998ஆம் ஆண்டு சட்டவாதியாக நியமனம் பெற்று 2007ஆம் ஆண்டு சிரேஷ்ட அரச சட்டவாதியாக பதவி உயர்வைப் பெற்றுக்கொண்டார். சட்ட மா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றிய காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குற்றவியல் வழக்குகளில் வழக்குத்தொடுநராகப் பணிபுரிந்தார். குறிப்பாக, போர் உச்சம்பெற்றிருந்த வேளையில் இவர் வழக்குத்தொடுநராக பணியாற்றிய காலப்பகுதியில் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுக்கு மருத்துவ அறிக்கையின் அடிப்படையில் சித்திரவதை இடம்பெற்றிருப்பது உறுதிசெய்யப்பட்டிருப்பின் அச்சந்தேகநபர்களுக்கு பிணை வழங்குவதை அனுமதித்த பெருமையும் நீதியரசர் பாலேந்திரன் சசிமகேந்திரன் அவர்களையே சாரும்.

2010ஆம் ஆண்டு மேல்நீதிமன்ற ஆணையாளராக நீதித்துறையில் தடம்பதித்து இற்றைவரை இவரது சாதனைகள் எண்ணிலடங்காதவை. 2012ஆம் ஆண்டு மேல்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்றார். கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, கொழும்பு, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் முதலிய குற்றவியல் மற்றும் குடியியல் நீதிமன்றங்களில் மேல்நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றியுள்ளார். இவரது நீதித்துறை சாதனைக்கு சிறந்த எடுத்துக்காட்டு முழு நாட்டினையே சோகத்துள்ளாக்கிய சிவலோகநாதன் வித்தியாவின் பாலியல் வன்புணர்வு கொலை வழக்காகும். 2017ஆம் ஆண்டு மூவரடங்கிய நீதாய மேல் நீதிமன்ற விளக்கத்தில் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டதுடன், இவ்வழக்கை துரித கதியில் முடித்து வழக்கின் ஏழு குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். கொழும்பு நீதாய மேல் நீதிமன்றம்-IIஇன் நிரந்தரத் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

பல மேல்நீதிமன்ற வழக்குகளை துரித கதியில் முடிக்கும் வல்லமை பெற்றதால் யாழ்ப்பாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் அதிக வழக்குகள் தேங்கிக்கிடந்த நிலையில் பிரதம நீதியரசர் அவர்களால் நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் எட்டு மாதங்களில் 150இற்கும் மேற்பட்ட வழக்குகளை நிறைவுசெய்துள்ளார். இத்தாலி மற்றும் பல்வேறு சர்வதேச சட்ட மாநாடுகளில் பங்கேற்றதுடன் தனது ஆய்வுகளையும் சமர்ப்பித்துள்ளார். 11 ஆண்டுகள் பல மேல்நீதிமன்றங்களில் கடமையாற்றிய பின்னர் 14.06.2021ஆம் திகதியன்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமனம் பெற்றார்.

நீதியரசர் பாலேந்திரன் சசிமகேந்திரன் அவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆற்றிய சம்பிரதாயபூர்வ உரையில், “நீதிமன்றத்தில் இரு தரப்பினருக்கும் உண்மை தெரியும். நீதிபதியே விளக்கத்தில் உள்ளார்” எனும் இந்திய மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.ஆர்.மித்தாவின் ஒரு வசனத்தை கோடிட்டு காட்டியிருந்தார். ஒரு நீதிபதி நீதியும் நியாயமுமான தீர்ப்புகளை வழங்குவதன் மூலம் நீதித்துறையினதும், சட்டத்துறையினதும், பொதுமக்களினதும் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும்'' - என்றார்.

மேலும், சமத்துவக் கோட்பாடு எனும் ஆழ வேரூன்றிய அடிப்படை உரிமை அரசியலமைப்பில் மட்டுமன்றி, அடிப்படை மனித உரிமையிலும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள சகல பிரஜைகளுக்கும் அத்தகைய சமத்துவமத்தை உறுதிசெய்வது நீதித்துறையின் கடமையாகும். தற்போதைய சூழலில் பாலின சமத்துவம் என்பது முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. மிகவும் சர்ச்சைக்குரிய விடயமான பாலின சமத்துவம் தொடர்பில் சட்டம் எத்தகைய வகிபாகத்தை கொண்டுள்ளது என்பது தொடர்பில் விளக்கியிருந்தார். அவர் யாழ்ப்பாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் கடமையாற்றிய காலப்பகுதியில் தேசவழமை சட்டத்தால் ஆளப்படும் பெண்களுக்கு இழைக்கப்படும் பாரபட்சங்கள் பலவற்றை ஒரு நீதிபதியாக அவதானித்ததாக குறிப்பிட்டார். தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படும் ஒரு பெண் தேசவழமையால் ஆளப்படாத ஆண் ஒருவரை திருமணம் செய்யும்போது அவள் தேசவழமையால் ஆளப்படுவது நிறுத்தப்படும். ஆனால், தேசவழமையால் ஆளப்படாத பெண் தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படும் ஆண் ஒருவரை திருமணம் செய்யும்போது அவள் திருமணம் நிலைத்திருக்கும் காலப்பகுதியில் அவள் தேசவழமைச் சட்டத்தால் ஆளப்படுவாள். ஆகவே, பெண் ஒரு ஆணின் வாழிடத்தைச் சாரும் கோட்பாடு தேசவழமைச் சட்டத்தில் தற்போதும் நிலைத்திருப்பதை அவதானிக்கமுடியும்.



தேசவழமைச் சட்டத்தின் தேடிய தேட்டம் எனும் சொத்துவகை தொடர்பில் ஆராய்கையில் இது கணவன் மற்றும் மனைவி இருவராலும் ‘அடையப்பெற்ற சொத்து’ எனக் குறிப்பிடப்படினும் கணவனின் சம்மதமின்றி மனைவியால் அச்சொத்தினை விற்க முடியாது. திருமணம் வலிதான காலப்பகுதியில் தேடிய தேட்டம் சொத்தின் முகாமையாளராக கணவரே காணப்படுகின்றார். மனைவியின் தனித்ததும் மாற்றியமைக்க முடியாததுமான அங்கீகாரம் பெற்ற நபராக கணவரே விளங்குகிறார். மேலும் யாழ்ப்பாண திருமண உரிமைகள் மற்றும் வழியுரிமைகள் தொடர்பான சட்டம் மனைவி தனது அசையாச் சொத்துகள் தொடர்பில் கணவனின் எழுத்துமூலமான சம்மதத்தினை பெறுவதனைக் கட்டாயமாக்கியுள்ளது. ஆயினும், பிரிவு 8ஆனது பெண் வசிக்கின்ற அல்லது சொத்து அமைந்துள்ள பிரதேசத்திற்குரிய மாவட்ட நீதிமன்றத்திற்கு பிரிவு 6இன் கீழான சம்மதம் வழங்கும் அதிகாரத்தை வழங்குகின்றது. இத்தகைய ஆணாதிக்க மனநிலை ஒரு பெண் சொந்த பகுத்தறிவு ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் தகைமையற்றவள் என்பதை வெளிப்படுத்துகின்றது. ஆகவே, ஒரு பெண்ணின் சட்ட நிலைமை தனது கணவரினால் கட்டுப்பட்டதாகின்றது.

மேலும், பல்லாண்டுகளின் முன்னர் உருவாக்கப்பட்ட சட்டவாக்கங்களை மீளமைக்க வேண்டிய கட்டாயத்தேவை ஏற்பட்டுள்ளது. தற்கால சமூகத்தின் தேவைகளையும், அவசியத்தன்மையையும் நிவர்த்திசெய்யும் வண்ணம் தேசவழமைச் சட்டத்தின் பிரிவுகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். “எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு” எனும் திருக்குறளை மேற்கோள் காட்டி தனது வளர்ச்சிக்கு உறுதுணையாகவிருந்த சகலரையும் நினைவுகூர்ந்தார். தனக்கு ஒழுக்கம் போதித்த மறைந்த தனது தந்தை அமரர் லக்ஷ்மன் பாலேந்திரன், பாட்டி அச்சம்மா அடைக்கலம் சவரிமுத்து ஆகியோரையும் நினைவுபடுத்தினார். தனது வளர்ச்சிக்கு நங்கூரமிட்டு குறிக்கோள்களை அடைய வழிகாட்டிய தாய்க்கும் நன்றி தெரிவித்தார்.

மேலும், தனக்கு உறுதுணையும் ஊக்கமும் அளிக்கும் மனைவி சட்டத்தரணி இந்துமதி மற்றும் மகன் ஷசாங்கன் ஆகியோருக்கும் நன்றி தெரிவித்ததுடன், தனது சகோதரர்கள், உறவினர்கள் மற்றும் சட்டத்துறை, நீதித்துறையில் உறுதுணையாயிருந்தவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

# ஆடி அமாவாசை



ஆடி அமாவாசை தினம் இன்று (ஓகஸ்ட் 8) ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

அன்று முன்னோர்களுக்குத் தர்ப்பணம் கொடுத்து வழிபடுவது வழக்கம். அதிலும் தட்சிணாயன துவக்க காலத்தில் வரும் ஆடி அமாவாசை அன்று முன்னோர்கள் வழிபாடு மிகவும் சிறப்பானதாகும்.

ஆடி அமாவாசை அன்று முன்னோர் வழிபாட்டை காலையிலேயே ஆரம்பித்துவிட வேண்டும். அன்றைய தினம் ஏதேனும் ஒரு தீர்த்தக்கரையில் முன்னோர்களுக்கான அமாவாசை தர்ப்பணம் செய்துவர வேண்டும்.

**ஆடி அமாவாசை விரதம் :**

அமாவாசை தினத்தில் ஆண்கள் விரதமிருந்து தர்ப்பணம் கொடுக்க வேண்டும். அதேசமயம் பெண்கள் கண்டிப்பாக அமாவாசை விரதம் இருக்கக்கூடாது. பெண்கள் அமாவாசை விரதம் இருப்பதில் சில விதிமுறைகள் நிறைந்திருக்கின்றன. அமாவாசை விரதம் அன்று முன்னோர்களுக்கு பிடித்த உணவுகளை மதிய உணவிற்கு சமைத்து அதை மறைந்த முன்னோர்களின் புகைப்படங்களுக்குப் பொட்டு வைத்து பூ வைத்து ஒரு இலையில் சமைத்த உணவுகளைப் படைக்க வேண்டும்.

படங்களுக்கு தீபாராதனை செய்த பின்னர், அவசியம் காகத்திற்கு உணவு வைக்க வேண்டும்.

அதன்பின்னர் இலையில் முன்னோர்களுக்காக படைத்த உணவை, வீட்டிலுள்ள மூத்தவர் சாப்பிட வேண்டும். பின்னர் மற்றவர்களும் சாப்பிடலாம். இதனால் நம் முன்னோர்கள் மகிழ்ந்து அவர்களின் ஆசி நமக்கு பரிபூரணமாகக் கிடைக்கும் என்பது ஐதிகம்.

ஆடி அமாவாசை தர்ப்பணம் பற்றி தெரிந்துகொள்ள வேண்டியவை:

1. வீட்டில் பசியால் வாடும் தனது வயதான பெற்றோர்களுக்கு சாப்பாடு கொடுக்காமல் தெய்வத்திற்கு சர்க்கரைப் பொங்கல் போன்ற பொருட்களை நிவேதனம் செய்வதாலும் ஆடையின்றி பெற்றோர்கள் கஷ்டப்படும்போது தெய்வங்களுக்கு பட்டு வஸ்திரங்களை அணிவிப்பதாலும் எந்த பலனும் கிடைக்காது. பித்ருதோஷம்தான் ஏற்படும்.

2. பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்யவேண்டிய மாதத்தில் தர்ப்பணம் நடைபெறும் நாளுக்கு முன்பாக தர்ப்பணம் செய்பவர் தனது வீட்டில் தினசரி தெய்வங்களுக்கு செய்யும் பூஜையைத் தவிர, வேறு எந்தவொரு விசேடமான பூஜைகளையோ ஹோமத்தையோ செய்யக்கூடாது.

3. தர்ப்பணம் செய்யவேண்டிய மாதத்தில் சிரார்த்தம் செய்யும் முன்பாக தங்கள் வீட்டு மங்கள நிகழ்ச்சிகளை நடத்தக்கூடாது.

4. தர்ப்பணம் செய்யும் நபர் தர்ப்பணம் செய்யும் முன்பாக அந்த மாதத்தில் மற்ற இடங்களில் நடைபெறும் எந்தவொரு பூஜைகளிலும் ஹோமங்களிலும், ஆலய நிகழ்ச்சிகளிலும் தனது பெயர் சொல்லி சங்கல்பம் செய்துகொள்ளக்கூடாது.

5. பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்யவேண்டிய நாளன்று, பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்துமுடிக்கும்வரை, வீட்டில் தெய்வம் சம்பந்தமான பூஜைகளை நிறுத்திவைத்துவிட்டு, பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்து முடிந்த பின்னர் தினசரி செய்யவேண்டிய தெய்வ சம்பந்தமான பூஜைகளைச் செய்யவேண்டும்.

6. சூரியனும், சந்திரனும் ஒன்றாக இணைந்திருக்கும் நாளான அமாவாசையன்று பித்ருக்களுக்கு பசியும் தாகமும் அதிகமாக ஏற்படும் என்று தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன.

7. அமாவாசை திதியை பித்ரு திதி என்று கூறி அன்றைய நாளில் இறந்தவர்களின் பசியையும் தாகத்தையும் போக்க கறுப்பு எள் கலந்த தண்ணீரால் தர்ப்பணம் செய்ய வேண்டும். இதனால் இறந்தவர்களின் பசியும் தாகமும் விலகி ஆசி வழங்குவார்கள்.

8. அமாவாசை திதியன்று ஒவ்வொரு வீட்டு வாசலிலும் அந்தந்த வீட்டு பித்ருக்கள் வந்து நின்றுகொண்டு தங்களுக்குத் தரப்படும் எள் கலந்த தண்ணீரை பெற்றுக் கொள்வதற்காக காத்துக்கொண்டிருக்கிறார் கள் என்று நம்பப்படுகிறது. அன்றைய தினம் வீட்டில் தர்ப்பணம்செய்து அவர்களுக்கு எள் கலந்த தண்ணீரை தரப்படவில்லை என்றால் அவர்கள் ஏமாற்றமடைந்து வருத்தப்பட்டு கோபத்தோடு செல்கிறார்கள் என்றும், ஒருசில பித்ருக்கள் சாபம் கூட தந்துவிட்டுச் செல்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

9. மறைந்த முன்னோர்களுக்கு நாம் செய்யும் சிரார்த்தங்களும், தர்ப்பணங்களும் நமது குடும்பத்தினரின் நன்மைக்காவே செய்யப்படுகிறது. ஆகவே தவறாது சிரார்த்தத்தையும் தர்ப்பணங்களையும் செய்யவேண்டும்.

10. மார்கழி, தை, மாசி, பங்குனி ஆகிய நான்கு மாதங்களிலும் கிருஷ்ணபட்ச அஷ்டமி திதியன்று அஷ்டகை எனப்படும் சிரார்த்தம் செய்யவேண்டும்.

**சிவகுமார் திவியா**



# தங்கம் வாங்கலையோ தங்கம்......



## “விலையைக் கேட்டாலே சும்மா அதிருதில்ல.......”

**ஆம்**. இக்கட்டுரையை நான் எழுதிக் கொண்டிருக்கும் இன்றைய தினத்தில் 8 கிராம் தங்கத்தின் விலை ரூபா 116,464 /= ! மண்ணாசை, பெண்ணாசை , பொன்னாசை மூன்றும்தான் பெரும்பாலான போர்களுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன வரலாற்றில்!

அலாவுதீன் கில்ஜியிலிருந்து, அண்மையில் அக்கரைப்பற்றில் பிடிபட்ட “அட்டியல்” திருடன்வரை அனைவருக்கும் ஒரே நோக்கம்தான் கொள்ளை..! அதிலும் தங்கத்தை..! தற்போது உலகெங்கிலும் அன்றாடம் நடைபெறும் பெரும்பாலான திருட்டு, கொள்ளை, கொலை, கடத்தல் சம்பவங்களின் பின்னணியில் இருப்பது “தங்கம்” தான். வருடாவருடம் மக்கள்தொகையைப் போலவே தங்கத்தின் தேவையும், அதன்மீதான மோகமும், அதன் விலையும் அதிகரித்துக் கொண்டேதான் செல்கிறது. அப்படி என்னதான் இருக்கிறது இந்த மஞ்சள்நிற உலோகத்தில்? இந்த பூமியில் உள்ள எத்தனையோ கனிமங்களுள் தங்கமும் ஒன்று. ஆனால், மற்ற எந்தவொன்றுக்கும் இல்லாத மதிப்பும், பெறுமதியும் அரிதாகக் கிடைக்கக்கூடிய துருப்பிடிக்காத தங்கத்துக்கு மட்டும் உண்டு. தங்கம் ஓர் சர்வதேசப் பொருள். அது செல்லுபடியாகாத தேசமே இல்லை. எல்லா நாடுகளிலும் வாங்குவார்கள் - விற்பார்கள். மக்கள் மட்டுமல்ல, அனைத்து அரசாங்கங்களுமே “தொன்” கணக்கில் டிரில்லியன் பெறுமதியான ஓடும் பணம், தங்கத்தில்தான் சரணடையும். அதுமட்டுமன்றி, தங்கம் மட்டுமே பணவடிவில் எல்லா சரக்குகளின் மீதும் ஆதிக்கம் செலுத்த இயலும் என்பதால், அதன் பின்னால் உலகமே ஓடும் நிலையைத் தவிர்க்க இயலாது.

“எத்தனை பவுன் நகை போடுவாங்க?” என்ற கேள்வியில்தான் தற்போது வரையில் அநேகமான திருமணப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கின்றன. தங்கள் மகளுக்கு “இத்தனை பவுன் நகை போட்டு திருமணம் செய்துவைத்தோம்'' என்பதில்தான் பல பெற்றோர்களுக்கு கௌரவமே. ஒரு குடும்பத்தின் மதிப்பு, அக்குடும்பத் தலைவி அணிந்திருக்கும் நகைகளைப் பொறுத்துதான் அமையும் என்கிற மனோபாவம் நம் தமிழர் கலாசார பார்வையில் தற்போதுவரையில் நீடிக்கிறது என்றால் மறுப்பதற்கில்லை. இதனடிப்படையில் , தங்கம் என்றவுடனேயே நம்மவர் மனக்கண்ணில் ஓடுவது ஆபரணங்கள்தான். கீழைத்தேய தேசங்களை சார்ந்த நமக்கு தங்கம் என்றாலே அதனை ஆபரணங்களாகவும், ஆடம்பரத்துக்கும், அந்தஸ்துக்கும் உரியவொன்றாகவும் பார்த்துப் பழகிப்போனோம். அந்தவகையில், ஏன் நாம் தங்கத்தை முதலீட்டுப் பொருளாக பார்ப்பதில்லை? “தரம்'' இதுதான் தங்கத்தின் குணமா? எப்போதும் தங்கம் இப்படித்தான் விலையேறுமா? இதே விலையேற்றம் இனியும் சாத்தியமா? தங்கத்தில் முதலீடு செய்யலாமா? தங்கம் வாங்குவது முதலீடு என்றாகுமா? தங்கத்தை வாங்கி ஆண்டுக்கணக்கில் கஜானாவில் பூட்டிவைத்திருப்பார்கள்.

மக்கள் தங்கம் வாங்குவது சரி. அரசாங்கங்கள் ஏன் வாங்குகின்றன? தங்கத்தில் முதலீடு என்பது அதன் விலையேற்றத்திற்காக செய்யப்படுவதைவிட, அதன் பாதுகாப்புத் தன்மைக்காகவே செய்யப்படுகிறது. எப்போதெல்லாம் யுத்தங்கள் நிகழ்கின்றனவோ, அப்போதெல்லாம் தங்கத்தினுள் நுழையும் பணம் அதிகரிக்குமாம். அதனால், அதன் விலையும் அதிகரிக்கும். ஏனெனில், எல்லாக் காலங்களிலும், எல்லாப் பிரச்சினைகளின் போதும் எல்லா தேசங்களிலும் தங்கம்தான் பாதுகாப்பு!

யுத்தத்துடன் மட்டுமல்லாது, எல்லா நிச்சயமற்ற தன்மைகளுடனும் தங்கத்துக்குத் தொடர்புண்டு . உலகில் அசாதாரணமான குழப்ப சூழ்நிலைகள் நிலவும்போதெல்லாம் (உதாரணத்திற்கு இயற்கை பேரழிவுகள், தீவிரவாத அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்கள், தற்போதைய கொரோனா தொற்றுக் காலத்தில்கூட வீட்டுப்பெண்களின் நகைகளே பல குடும்பங்களின் அவசரத் தேவைகளையும் அத்தியாவசியத் தேவைகளையும் தீர்த்துக்கொண்டிருக்கின்றது ) தங்கத்தின் தேவை அதிகரிக்கும். ஏனெனில், பாதுகாப்புத் தேடி அப்படியே வாங்கிவைத்தாலும் அதன் சாதக பாத விளைவுகள் என்னென்ன? இவை பற்றி சற்றுப் பார்த்துவிடலாம் ,

“இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு, சிறு துளி பெரு வெள்ளம்'' போன்ற சிறு சிறு சேமிப்பு பற்றிய சிந்தனைகளெல்லாம் பொருளாதார சீர்திருத்தங்களினாலும், பண வீக்கத்தினாலும், தற்போது பெரிதாகி, நேற்றைய சேமிப்பு - இன்றைய முதலீடு - நாளைய வருமானம் என உருமாறிவிட்டது எனலாம். முதலீடுகளுக்கு ஆதாரமே சேமிப்புத்தான். அந்த அடிப்படையில் தற்போது ஏராளமான முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் நம்மிடையே பெருகிவிட்டன. இதில் இலாபகரமான முதலீட்டைக் காட்டிலும், பாதுகாப்புடன்கூடிய அதேசமயம் இலாபமும் தரக்கூடிய முதலீடு அவசியம். பாடுபட்டு சேர்த்த பணத்தை அதிக வருமானத்திற்கு ஆசைப்பட்டு, பாதுகாப்பற்ற இடத்தில் முதலீடு செய்துவிட்டு, பின்னர் முதலுக்கே மோசம் எனப் புலம்புவதில் பிரயோசனமில்லை அல்லவா? தங்கத்தின் இருப்பு என்பது வரம்புக்கு உட்பட்டது. ஆனால், அதன் தேவை ஆபரணங்கள் செய்ய, கைபேசி போன்ற இலத்திரனியல் உபகரணங்கள், தங்கபஸ்பம் போன்ற லேகியம் தயாரிக்க, மருந்துப் பொருட்கள் தயாரிக்க எனப் பயன்படுவதுடன், இந்தியக் கோவில் கலசங்கள் முதல் சேலை ஜரிகை வரை தங்கம் பளிச்சிடுகிறது.

ஆக, தங்கத்தின் தேவை அதிகரித்துக் கொண்டேதான் செல்கிறது. இணையத்தில் கண்ட புள்ளிவிபரத்தின்படி உலகளவில் தங்க உற்பத்தி ஆண்டொன்றுக்கு 2,450 தொன் ஆகும். ஆனால், அதன் தேவை 3,550 தொன் . பற்றாக்குறை 1100 தொன். இந்தப் பற்றாக்குறை இனிவரும் ஆண்டுகளில் அதிகரித்தபடியேதான் இருக்கும். அதுமட்டுமன்றி, தங்கத்தைத் தேடி பூமியின் அடியாழத்துக்கு செல்லச் செல்ல அதற்கான செலவுகளும் அதிகரிக்கும். எனவே, தங்கத்தின் விலை அவ்வப்போது ஏறி இறங்கினாலும் நீண்டகால அடிப்படையில் ஏறுமுகமாகவே இருக்கும் என்பது துறைசார் நிபுணர்களின் கருத்து. கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக ஏறுமுகத்திலேயே இருக்கும் விலைதான், தங்கத்தை உலக மக்களின் நம்பிக்கைக்குரிய முதலீட்டுத் தேர்வாக வைத்திருக்கின்றதெனலாம். பாதுகாப்பு, உத்தரவாதம், நம்பகத்தன்மை போன்ற அம்சங்களால் மக்கள் இதைத் தேர்வு செய்கின்றனர் என்றால் மிகையில்லை. எனவே, ஒரு முதலீடு என்ற கோணத்தில் தங்கத்தை வாங்குவது இலாபகரமானது எனலாம். உடனடியாக பணமாக மாறக்கூடிய அதன் தன்மையினால் தங்கத்தை “liquid assets'' என்கின்றோம்.

தங்கத்தில் முதலீடு செய்வதென்பது பாரம்பரியமிக்க, என்றுமே வற்றாத, அள்ள அள்ளக் குறையாத அமுத சுரபி போன்றதெனில் மிகையில்லை. முதலீடு செய்த மாதிரியும் ஆயிற்று, அலங்காரமாக அணிந்துகொண்ட மாதிரியும் ஆயிற்று என்ற அடிப்படையிலேயே காலங்காலமாக மக்கள் தங்க நகைகளை வாங்கிக் குவித்துவந்தார்கள். நமது அன்றாட வாழ்க்கையில் தங்க ஆபரணங்களுக்கென்றே ஓர் தனியிடமுண்டு. திருமணம் என்றால் சொல்லவே வேண்டாம். தாலி முதல் வரதட்சணை நகைகள், பரிசாகக் கிடைக்கும் நகைகள் என ஒரு களைகட்டும். சிலருக்கு இதுதான் வியாபாரமே. சிலர் முதலீடு செய்வர். பலர் ஆடம்பரத்திற்காக புதுப்புது டிசைன்களில் விதம்விதமான நகை செய்துபோட்டு அழகு பார்ப்பர். நடுத்தர வர்க்கத்தினர் தம்முடைய அவசர தேவைகளுக்காக இவற்றை அடகுவைத்து தம் தேவைகளை நிவர்த்திசெய்வர் . உண்மையில் அவசரத்துக்கு யாரிடமாவது பணம் கேட்டால் அவ்வளவு எளிதில் கிடைக்காது. அப்படிப்பட்ட நேரங்களில் தங்க நகைகள்தான் மிகப்பெரிய உதவியாக இருக்கும் என்பது உண்மை. மேலும், யாரிடமாவது பணம் கேட்டு கூனிக்குறுகி நிற்பதைக் காட்டிலும், நம்முடைய தேவைக்காக நம் நகைகளை விற்ப்தோ அடகுவைப்பதோ மேலல்லவா?

ஆனால், முதலீடு பற்றிய விழிப்புணர்வு அதிகரித்தபின், தங்கத்தினை நாணயமாகவோ, பிஸ்கட்டாகவோ வாங்கிக்கொள்ளும் மாற்றம் தற்போது ஏற்பட்டுள்ளது. இதன்போது நகைகளை விற்கையில் செய்கூலி, சேதாரம் என எந்தவித இழப்புமிருக்காது . தங்கத்துக்கு எந்தவகையில் போட்டி என்று பார்த்தல், அமெரிக்காவின் டொலர்தான். எல்லா அரசாங்கங்களினாலும் அமெரிக்க டொலர்கள் களஞ்சியப்படுத்தப்படுகின்றன. டொலருக்கு அடுத்தபடியாக தங்கத்தையே அரசாங்கங்கள் அதிகளவில் களஞ்சியப்படுத்துகின்றன. இவ்விரண்டுக்குமிடையே தனியுறவே உண்டெனலாம். டொலர் விலை இறங்கினால் தங்கம் விலை உயரும். டொலர் விலை உயர்ந்தால் தங்கத்தின் விலை இறங்கும். டொலர் தவிர மற்றுமொரு சர்வதேசப் பயன்பாட்டுப் பொருளுடன் தங்கத்திற்கு உறவுண்டு . அதுதான் கச்சா எண்ணெய். ஆனால், கச்சா எண்ணெய்க்கும் தங்கத்துக்குமான உறவு நேர்கோடிலானது. அதாவது இரண்டுமே விலையேறினால் ஒன்றாக விலையேறும். வீழ்ச்சியடைந்தால் ஒன்றாகவே வீழ்ச்சியடையும்.

சரி... தங்கத்தில் முதலீடு செய்யும்போது நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் என்னென்ன? தங்க நகை, தங்க பிஸ்கட் அல்லது தங்க நாணயங்கள் வாங்கும்போது அவை “hallmark'' முத்திரை தரச்சான்றிதழ் கொண்டவையா என்பதை கவனிக்க வேண்டும். தங்கம் வாங்கும்போது தரத்தினை உறுதி படுத்திக்கொள்வது முக்கியம். அது 18 கரட்டாகக் கூட இருக்கலாம். திரும்ப விற்கும்போதோ அல்லது அடகு வைக்கும்போதோ தான் வில்லங்கம் தெரியவரும். ஆபரணத் தங்கம் எனப்படுவது 22 கரட் என்றால்தான் தரமானது. எனவே, நம்பிக்கையான நகைக்கடைகளில் வாங்குவதே நல்லது. நகையாக வாங்கும்போது சேதாரம் எவ்வளவு என்பதைக் கவனத்தில் கொள்வது நல்லது. ஏனெனில், நாம் வாங்கும் நகையில் அதிகப்படியான நுண்ணிய வேலைப்பாடுகள் இருந்தால் மட்டுமே அதிக சேதாரம் இருக்கும். எனவே, சாதாரண நகைகளுக்கு அதிக சேதாரம் இருந்தால் அவதானம் தேவை. மேலும், நகைகள் வாங்கும்போது கற்கள், முத்துக்கள் பதிந்த நகைகள் வாங்குவதை தவிர்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில் , அவற்றை மீண்டும் விற்கும்போது, நகையில் பதிக்கும் கற்களுக்கு மதிப்புக் கிடைக்காதது மட்டுமன்றி, அவற்றை தங்கத்தோடு இணைக்க பயன்படுத்தும் அரக்கு போன்றவற்றுக்கும் சேர்த்து குறைந்த மதிப்பில்தான் பணம் கிடைக்க நேரிடும் .

தங்கம் வாங்கும்போது கிடைத்த பற்றுச்சீட்டையும், விற்கும்போது கிடைக்கும் பற்றுச்சீட்டையும் பத்திரமாக வைத்துக்கொள்வது நல்லது. இலட்சங்களைக் கொட்டி வாங்கும் தங்க ஆபரணங்களையோ, நாணயங்களையோ பாதுகாக்க சில ஆயிரங்களை செலவு செய்ய தயங்காதீர்கள். நம்பகமான வங்கிகளில் பாதுகாப்புப்பெட்டக வசதிகள் உள்ளன. வங்கிக்குத் தகுந்தவாறு அவற்றின் கட்டணங்கள் மற்றும் வைப்புத் தொகை மாறுபடும். நமக்குத் தேவையானபோது எடுக்கவும், வைக்கவும் வாய்ப்பிருக்கும் . ஆகவே, கொள்ளையர்களை நினைத்து, உறக்கம் தொலைத்து, மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டிராமல், அவற்றை பாதுகாப்புப்பெட்டகத்தில் வைத்துவிடுவது பாதுகாப்பாகும். முதலீடு அடிப்படையில் தங்கத்தை வாங்குபவர்கள் 24 கரட் சுத்தமான தங்கத்தை பிஸ்கட்டாகவே வாங்குவர். இந்த சுத்தமான தங்கத்தில் நகைகளை செய்ய முடியாது என்பதால், அதில் செம்பு மற்றும் வெள்ளி கலந்து 22 கரட், 18, 10, 09, 08 கரட் என தங்கத்தின் தரம் பிரிக்கப்படுகிறது. இதில் தரமான நகைகளை செய்வதற்கு பயன்படுவது 22 கரட் தங்கமே. தங்க உற்பத்தியில் முன்னணியில் இருப்பது தென்னாபிரிக்கா, கனடா போன்ற நாடுகள் தானாம். உலகில் தென்னாபிரிக்காவில்தான் 50 சதவீதத்துக்கும் அதிகமான தங்கச் சுரங்கங்கள் உள்ளனவாம். உலகளவில் தங்கத்தை வெட்டியெடுக்கும் பணி 60 சதவீதத்துக்கும் மேலாக தனியார் நிறுவனங்களின் கைவசம் உள்ளதாம். World Gold Council என்கிற உலகளாவிய அமைப்பே தங்கத்திற்கான அன்றாட விலையை நிர்ணயம் செய்கின்றது. 1987 இல் தொடங்கப்பட்ட இவ்வமைப்பில் மொத்தமாக 23 நாடுகளின் நிறுவனங்கள் உறுப்பினர்களாக உள்ளன.

இங்கே நாம் மற்றுமொரு விடயத்தை அவதானிக்கத் தவறிவிடுகின்றோம். நம் மத்தியில் நகைக் கடைகள் மட்டும் அதிகரிக்கவில்லை. மாறாக, அடகுக்கடைகளும், தெருவுக்கு நான்காக முளைத்துள்ளன என்பதுடன், அவை மிகப்பெரிய கோர்ப்பரேட் நிறுவனங்களாகவும் வளர்ச்சியடைந்துள்ளன. (LB finance மிகச் சிறந்த உதாரணம்) அந்தப்பக்கம் சினிமா நட்சத்திரங்களைக் கொண்டு தங்கம் வாங்கச் சொல்லி அழைப்பு விடுப்பவர்கள், இந்தப்பக்கம் அவர்களைக் கொண்டே அடகு வைக்கச் சொல்லி அழைக்கிறார்கள் எனலாமா? தெருவுக்கு நான்கு நகைக்கடைகள் முளைக்க, மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்துள்ளமைதான் காரணம் என்றால், தெருவுக்கு எட்டு அடகுக கடைகள் முளைக்க என்ன காரணம்? ஏனெனில், புதிய தாராளமயக் கொள்கை ஒரு பகுதி நடுத்தர வர்க்க மக்களை செழுமைப்படுத்தியிருக்கும் அதேவேளை பெரும்பான்மை மக்களை இறுக்கிப் பிடிக்கிறது என்பது கண்கூடல்லவா? கல்வி, மருத்துவம் உட்பட அன்றாடச்செலவுகள் அதிகரித்துவிட, மக்கள் வாங்கிய நகைகளை அடகு கடைகளை நோக்கிக் கொண்டு செல்கின்றனர்.

பொருளாதார நெருக்கடி அதிகரிக்க அடகுக்கடைகளும் அதிகரிக்கின்றன. நம்மைப் பொறுத்தவரை ஆத்திர அவசரத்துக்கு பயன்படுமே என்ற எண்ணத்துடன்தான் தங்கம் வாங்குகிறோம் அநேகமாக அந்த “ஆத்திர அவசரம்'' எவ்வளவு அதிகரித்துள்ளது என்பதற்கு அதிகரித்துவரும் அடகுகடைகளே சாட்சி. மேலும், தங்கம் வாங்குவதை முதலீடாக நியாயப்படுத்தும் அதேவேளை, இன்னுமொன்றையும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். அதாவது இலங்கை, இந்தியா போன்ற கீழைத்தேய நாடுகளில் ஆபரணங்கள் வாங்கும்போது, பெண்களுக்கு அதில் ஓர் உணர்வுசார்ந்த இணைப்பிருக்கும், அவசியத்திற்காக அதை விற்க நேர்ந்தால் கண்கள் கலங்கும். மனதே வராது கொடுப்பதற்கு. பின் சரி, அதை விற்கவேண்டாம் எப்படியாவது சமாளித்துக்கொள்ளலாம் என முடிவெடுக்கப்படும்.

ஆக, இங்கே கவனிக்க வேண்டியது இதைத்தான். வங்கியின் பாதுகாப்புப் பெட்டகத்திலும், வீட்டு அலுமாரியிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் நகைகளில் இருந்து ஏதேனும் வருமானம் வருகின்றதா? வருடக்கணக்கில் அதில் முடக்கப்படும் பணத்திலிருந்து எந்த வருமானமும் வருவதில்லை. அதை விற்றால்தான் பணம். ஆனால், விற்கத்தான் மனதில்லையே? அப்படியாயின் இந்த சந்தர்ப்பத்தில் இதை நாமொரு முதலீடாகக் கருத இயலுமா? அப்படியே விற்றாலும் வாங்கும்போது செய்கூலி, சேதாரம், வரி, என கண்ணுக்குத் தெரியாமல் கைமாறிய பணம் அவற்றை விற்கும்போது நமக்கு நஷ்டக் கணக்காகிவிடும். முதலீடு நோக்கத்திற்காக வாங்குவோரைக் காட்டிலும் பதுக்கல்காரர்களும், கறுப்புப்பண முதலைகளும் தங்கள் கையிருப்பை தங்கமாக மாற்றி, பதுக்கிவைப்பதும் அதிகமாக நடந்தேறுகிறது இன்று.

இக்கட்டுரையின் மூலம் மற்றுமொரு துயரத்தை யும் இங்கே குறிப்பிட்டேயாகவேண்டும் . இதனை வாசித்துக்கொண்டிருக்கும் நீங்கள் சுமார் ஐம்பது வயதுக்குரிய நபர் என வைத்துக்கொள்வோம். அப்படியாயின் சுமார் இருபது - இருபத்தைந்து வருடங்களுக்கு முன் ஒரு நகைக்கடையென்றால் எப்படியிருக்கும் என்பதை மனக்கண்ணில் கொண்டுவாருங்கள். ஒரு சிறிய அறை, அதில் கண்ணாடித் தடுப்புக்களின்கீழ் வரிசை வரிசையாக அடுக்கிவைக்கப்பட்ட நகைகள். வேஷ்டி சட்டையுடன் சந்தனப் பொட்டிட்டுக்கொண்டு தெய்வீகமாக உட்கார்ந்திருப்பார் கடை உரிமையாளர். ரோஜா நிற காகிதத்தில் மடித்து தரப்படும் நகைகள். கடையின் பெயர் அச்சிடப்பட்ட சிறிய மணிபர்ஸ், அல்லது ஆடம்பரமற்ற கருநீல / கருஞ்சிவப்புப் பெட்டி. இக்காட்சிகள் கிட்டத்தட்ட இப்போது வழக்கொழிந்து விட்டன எனலாம். இப்போதெல்லாம் நகைக்கடைகள் பிரம்மாண்டமான காட்சியறைகளாக மாறிவிட்டன. மூன்று - நான்கு தளங்களில் ஆயிரக்கணக்கான டிசைன்களில் விதம்விதமான நகைகள்! எதற்கு இத்தனை பெரிய ஆடம்பரமான கடைகள் என நினைக்கிறீர்களா? ஆனாலும், அந்த கடை வாசலில் காலை 10 மணிக்கே கூட்டம் கூடத் தொடங்கியிருக்கும்.

முன்பெல்லாம் நகைப் பட்டறைகளுக்கென்றே பெயர்பெற்ற தெருக்களெல்லாம் இன்று வழக்கொழிந்துவிட்டன. அவற்றில்வேலை செய்த 90% தொழிலாளர்கள் வேறு வேலை களுக்கு மாறிவிட்டார்கள். பிரம்மாண்ட நிறுவனங்களின் விஸ்வரூபத்துக்கு முன்னால் சிறு வியாபாரிகளால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அப்படியாயின், தற்போதைய நகைக்கடைகளில் அடுக்கிவைக்கப்பட்டுள்ள விதவிதமான நகைகளை செய்வது யார்? இது துயரமான ஓர் பதிலுக்காக கேள்வி. முன்பு சொந்தமாக நகைப் பட்டறைகளை வைத்திருந்தவர்கள்தான் இப்போதைய பிரம்மாண்டமான நகைக் கடைகளின் பட்டறைகளில் கூலிக்கு வேலை பார்ப்பவர்கள் என்றால் நம்பமுடிகிறதா? 1995 களுக்கு பின்னர் படையெடுத்த “தங்க மாளிகைகளை'' எதிர்கொண்டு இவர்களால் தொழில் நடத்த முடியவில்லை. பட்டறைகளை மூடிவிட்டு கொஞ்சம் கொஞ்சமாக வேறு தொழில்களுக்கு மாற்றிக்கொண்டனர். அதிலும் தாக்குப்பிடித்து நின்றவர்களை, 2000ஆம் ஆண்டுக்குப்பின் படையெடுக்கத்தொடங்கிய பிரம்மாண்ட சங்கிலித்தொடர் நகை நிறுவனங்கள் அடியோடு துடைத்து வீசிவிட்டன. எஞ்சியவர்களுக்கு வேறு வழி தெரியவில்லை. அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் நகை வேலை மட்டுமே. அவர்கள் அத்தனைபேரும் பெரும் நிறுவனங்களின் தொழிற்க்கூடங்களில் சரணடைந்தனர் .

இப்போதைய பிரம்மாண்ட நகை நிறுவனங்களின் உற்பத்திப் பிரிவில் பணிபுரிவதில் முக்கால்வாசி பேர் இவர்கள்தான்! இவர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம்போக “இவ்வளவு நகை செய்தால் இவ்வளவு ரூபா ஊக்கத்தொகை'' என்று நிர்ணயிக்கப்படுகிறது. அந்த ஊக்கத்தொகையைப் கூடுதலாகப் பெற அல்லும் பகலும் பணிபுரிகின்றனர். தங்கத் துகள்களை கவர்ந்து சென்றுவிடக்கூடாது என்பதற்காக கடும் கண்காணிப்பு எப்போதுமிருக்கும். வேலை செய்யுமிடம் காற்றுப்போக வழியில்லாத நான்குபுறமும் அடைக்கப்பட்ட அறையாகவே இருக்கும். வேதிப்பொருட்களை நாள் முழுக்க சுவாசிக்கவேண்டியிருப்பதனால், இத் தொழிலாளர்களை ஆஸ்துமா , மூலவியாதி, தோல் நோய்கள் போன்றவை எளிதாக தாக்கக்கூடியதாக உள்ளனவாம். நாம் வாங்கும் தங்கம் ஜொலிக்கலாம். ஆனால், அதனை உருவாக்கும் தொழிலாளர்களின் வாழ்க்கையோ மங்கிக் கிடக்கிறது இல்லையா? ஆனாலும் , அன்மைக்காலங்களில் புதிது புதிதான இயந்திரங்களின் கண்டுபிடிப்பால் இந்த பக்கவிளைவுகள் இனிவரும் காலங்களில் குறையலாம் என நம்பப்படுகிறது. அப்போதும்கூட இயந்திரங்களின் வருகையால் இவர்களுக்கான வேலைவாய்ப்பின்மை அதிகரிக்கவும் நேரலாம். (இப்பெரு நிறுவனங்களால் வியாபார யுக்தியுடன் விளம்பரப்படுத்தப்பட்ட நாட்களுள் ஒன்றுதான் “அட்சய திருதியை'' என்பதும் குறிப்பிடத்தக்கது. அன்றைய தினத்தில் தங்கம் வாங்கினால் செல்வம் பெருகும் என்பதெல்லாம் ஏமாற்றுவேலை என்பது யாவரும் அறிந்த உண்மை)

எப்படியாயினும், தங்க முதலீடு என்பது சமூக நலன் நோக்கில் சரியானதுதானா? தங்கம் என்பது ஒரு பெறுமதியான கனிமம். வெறுமனே இலாபத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டு இதில் கொட்டப்படும் கோடி ரூபாவை ஆக்கபூர்வமான மின்சாரம், விவசாயம், கட்டுமானம், தொழில்துறை போன்ற வேறு துறைகளில் பயன்படுத்தும்போது அதில் ஏராளமான நன்மைகள் உண்டென்றும், வெறுமனே தங்கத்தை வாங்கி குவிப்பதென்பது, மூலதனத்தினை முடக்கும் செயல், இதில் கிடைக்கும் இலாபம் என்பது செயற்கையான “யூக லாபமே”, சேமிப்பு என்ற ரீதியில் ஒழிய முதலீடு என்ற அளவில் தங்கம் வாங்குவது சமூக நலன் நோக்கில் சரியானதல்ல என பல பொருளாதார நிபுணர்கள் என்னதான் கூறினாலும், தங்கத்தின் மவுசு குறையப்போவதில்லை. தங்கத்தின் முன்னும் பின்னுமாக கண்டுபிடிக்கப்பட்ட எத்தனையோ பொருட்கள் மதிப்பிழந்துவிட்டன. ஆனால், தங்கம் மட்டும் ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாக மனிதனை ஆண்டுவருகிறது. இது காலத்தின் தேவையும்கூட! தவிர்க்க இயலாது.

**ப்ரியா ராமநாதன்**

---

**டயலொக் ஆசிஆட்டா மற்றும் வெவெநெட் ஆகியவை ஒன்றிணைந்து கோவிட் – 19 நோயாளிகளை பராமரிப்பதற்காக ஒரு தேசிய நோயாளி படுக்கை மேலாண்மை அமைப்பை சுகாதார அமைச்சகத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.**

தொற்றுநோயைத் தணிப்பதற்கான தேசிய முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் தொடர்ச்சியான முயற்சிகளில்இ இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி மற்றும் அதன் தொழில்நுட்பக் பங்காளனரான வெவெநெட் இன்டர்நெ'னல் (பிரைவட்) லிமிட்டட் உடன் இணைந்து சுகாதார அமைச்சின் சிகிச்சை மையங்களுக்கு ஒரு தேசிய நோயாளி படுக்கை மேலாண்மை தீர்வை நன்கொடையாக வழங்கியது.




மேலும், மேற்படி தனித்துவமான அத்தியாவசிய தீர்வின் மூலம் சுகாதார அமைச்சினூடாக நிர்வகிக்கப்படுகின்ற அரச மற்றும் தனியார் கொவிட் - 19 சிகிச்சை நிலையங்களில் நடப்புகாலத்திற்கேற்ப நோயாளர் படுக்கை தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய முகாமைத்துவ கட்டமைப்பொன்று நிறுவப்படும். இவற்றின் பிரதிபலனாக நோயாளர்களுக்கு படுக்கைகளை வழங்குவதில் ஏற்படக்கூடிய கால விரயம் குறித்தான குறைபாடுகள் தீர்க்கப்படுவதுடன் நோயாளர்களை காத்திருக்க வைக்கக்கூடிய வீண் தாமதங்களையும் குறைக்க முடிவதுடன், நோயாளர்களுக்கு உரிய படுக்கை வசதிகள் உள்ளனவா என ஆராய்ந்து கொண்டிருப்பதற்கு பதிலாக அந்நேரத்தை நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்குவதில் முழுமையாக செலவிடக்கூடியதாகவும் அமையும். மேலும், மேற்படி நோயாளர் படுக்கை முகாமைத்துவ திட்டத்தினால் அவ்வவ் சிகிச்சை நிலையங்களில் நோயாளர்களை அனுமதித்தல் தொடர்பான தகவல்களை திரட்டுவதில் ஏற்படக்கூடிய திறனற்ற தன்மையையும் நீக்க முடியும். இதற்கமைய, மருத்துவத்துறை அதிகாரிகள் தற்போது உள்ளூர் மட்டத்திலும் சிகிச்சை முகாம்களிலும் நிலவுகின்ற படுக்கை தேவைப்பாடுகள் குறித்தும், அவற்றை பெறக்கூடிய வழிவகைகள் குறித்தும் பொதுவான ஒரு பார்வையை கொண்டிருப்பர். எனவே , இதன்மூலம் நோயாளிகளை சிகிச்சை முகாம்களுக்கு அனுமதித்தலுக்கென செலவிடும் நேரத்தை முகாமைத்துவப்படுத்த முடிவதுடன் அம்பியூலன்ஸ் சேவை மூலம் நோயாளிகளை விரைவாக கொண்டு செல்வதில் செயல்திறன்மிக்க வழிமுறைகளை கையாளவும் முடிகின்றது. இதனால், தாமதமின்றி அடுத்த நோயாளிமீதான கவனத்தை செலுத்துவதற்கும் இது வாய்ப்பை ஏற்படுத்தும் .

Dialog
எதிர்காலம் இன்றே.

மேற்படி கட்டமைப்பானது, உள்ளூர் சுகாதாரத்துறை மற்றும் சுகாதார அமைச்சின் ஏனைய திட்டங்கள்மூலம் பெறப்படுகின்ற தகவல்களை ஒருங்கிணைப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மூலம் கிடைக்கப்பெறுகின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் தலைமை கட்டளை கட்டுப்பாட்டு நிலையம் அல்லது பரவலாக்கப்பட்ட அலகுகளினூடாக நோயாளிகளை இனங்கண்டு அவர்களுக்கு உரிய சிகிச்சைகளை இலகுவாக மேற்கொள்ளக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும். இந்த வழிமுறைகளானது நோயாளிகளுக்கான படுக்கைகளை ஒதுக்குவதற்கு தற்போது பாவனையிலுள்ள செயல்முறைகளை டிஜிட்டல் மயப்படுத்தி தானியங்கித் தன்மைக்குட்படுத்துவதுடன் தேசிய சுகாதாரத்துறை கட்டமைப்பிற்கு குறிப்பிடத்தக்க ஒத்துழைப்பை வழங்குவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளதுடன் அதன்மூலம் சுகாதாரத்துறை நிர்வாகிகள், தொழில்வல்லுனர்கள் மற்றும் அவர்களின் பராமரிப்பில் உள்ளவர்களுக்கும் பயன்களை அளிக்கக்கூடியதாகவும் அமையும்.

# கோப் குழு இரண்டு அறிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை;

## இருநாள் விவாதம் நடத்துவதற்கான முன்மொழிவை சபாநாயகரிடம் முன்வைக்கவும் தீர்மானம்



அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவால் இதுவரை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள இரண்டு அறிக்கைகள் மீது, இரு நாட்கள் விவாதம் நடத்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு முன்மொழிய, பேராசிரியர் சரிதஹேரத் தலைமையில் நடைபெற்ற அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் ஏகமனதான முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவினால், நாடாளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட்டது, இரண்டாவது அறிக்கையான மஹாபொல உயர்கல்வி உதவித்தொகை அறக்கட்டளை நிதியத்தினூடாக நிறுவப்பட்ட இலங்கை தகவல்தொழில்நுட்ப நிறுவனம் குறித்த அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் சிறப்பு அறிக்கையாகும். இவ்வாறு இரண்டாவது சிறப்பு அறிக்கை மீதான விவாதம் எடுத்துக்கொள்ளப்படுவதன் மூலமாக இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் தற்போதைய நிலைமை மற்றும் அந்நிறுவனம் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக நாடாளுமன்றத்திலும் நாட்டிற்குள்ளும் ஒரு பரந்த கருத்தாடலை ஏற்படுத்த முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தின் விசாரணை அறிக்கையினடிப்படையில் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தை அரசு சாரா நிறுவனமாக அங்கீகரிக்கவும், அதற்கேற்ப குறித்த நிறுவனம் எந்த அமைச்சின் எல்லைப் பரப்பின் கீழும் வராது என 24.05.2017 அன்று அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவு தொடர்பாக விமர்சன ரீதியாக ஆராயவும் குறித்த நிறுவனம் தொடர்பாக எடுக்கப்பட்ட ஏனைய அமைச்சரவை தீர்மானங்களின் உள்ளடக்கங்களை பரிசீலிக்கவும் SLIIT நிறுவனத்தை ஒரு அமைச்சின்கீழ் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மஹாபொல நிதியத்தின் திட்டமாக அந்நிதியத்தின் 500 மில்லியன் ரூபாவை மூலதனமாகக் கொண்டு மாலபேயில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த நிறுவனம் இதுவரை நிதியத்தின் கட்டுப்பாடு மற்றும் ஆரம்பிக்கப்பட்டதன் பிரதான நோக்கத்தை மீறி, வியாபார நிறுவனமாக அதிக இலாபத்தைப் பெறும் நிறுவனமாக மாற்ற பல்வேறு தரப்பினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் இங்கு புலப்பட்டது. இந்த நிலைமையை மாற்றி மீண்டும் அதனை மஹாபொல நிதியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கும், சாதாரண கட்டணத்தின் கீழ் உயர் கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பிலும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உரிய அதிகாரசபையின் அதிகாரமின்றி கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தினூடாக SLIIT நிறுவனம் தொடர்பில், அரசாங்கத்துக்குக் காணப்பட்ட உரிமை மற்றும் அதன் கட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்த அனைத்துத் தரப்பினருக்கு எதிராகவும் , பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு முன்வைத்துள்ள இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

SLIIT நிறுவனத்தை தனியார் மயப்படுத்தும் சிக்கலான நடைமுறை திட்டமிடப்பட்ட மோசடியாகத் தோன்றுகின்றது என்றும், அரசாங்க நிதி முதலீட்டில் ஆரம்பிக்கப்படுகின்ற எந்தவொரு நிறுவனமும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் முன்னிலையில் அழைப்பதற்கு காணப்படும் சட்டரீதியான ஏற்பாடுகள் தொடர்பிலும் குழு உறுப்பினர்களால் கவனம் செலுத்தப்பட்டது.

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் அமைச்சர் சரத் வீரசேகர, இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா, நாடாளுமன்ற உறுப்பினரக்ளான ஜகத் புஷ்பகுமார, எரான் விக்ரமரத்ன, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, நளின் பண்டார மற்றும் சாணக்கியன் ராசமாணிக்கம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# சம்பள முரண்பாட்டை உடன் தீர்க்குமாறு கோரி திருக்கோவிலில் அதிபர் – ஆசிரியர்கள் பேரணி





(அட்டாளைச்சேனை நிருபர்)

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களது சம்பள முரண்பாட்டை உடன் தீர்க்குமாறு கோரி நேற்று முன்தினம் தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலயத் திலிருந்து திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரம் வரை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாகச் சென்றனர்.

இதன்போது திருக்கோவில் மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் அதிபர்கள், ஆசிரியர்கள் ஒன்றுகூடி,24 வருட அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கு, அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சேவையை அகப்படுத்தப் பட்ட சேவையாக மாற்று,பி.சி.பெரேராவின் தலைமையில் சீரமைக்கப்பட்ட சம்பளத்தை அமுல்படுத்து, ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் விதை நெல் போன்றது. விதை நெல்லுக்கு கணக்குப் பார்த்தால் விளைச்சலே இருக்காது, சம்பள முரண்பாட்டை நீக்கு, அதிபர்கள் ஆசிரியர்களின் சம்பளத்தை சரி செய். சதி செய்யாதே, அதிபர் ஆசிரியர்களை ஏமாற்றாதே போன்ற வாசகங்களை எழுப்பியவாறு கோஷமிட்டார்கள்.

இப்போராட்டத்தில் இலங்கை பொது முற்போக்கு ஆசிரியர் சங்கத்தின் தேசியத் தலைவர் ஜே.மோகன்ராஜ், அகில இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் தேசியத் தலைவர் தியாகதீபம் ஏ.பீ.கமால்டீன் ஆகியோர் கலந்துகொண்டு அதிபர், ஆசிரியர்களது சம்பளப் பிரச்சினைகள் தொடர்பாக உரையாற்றினர்.கொவிட் -19 காரணமாக சுகாதார நடைமுறையைப்பேணி அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், இலங்கை பொது முற்போக்கு ஆசிரியர் சங்கம் மற்றும் அகில இலங்கை ஜனநாயக ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் பதவிவழி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.இதன்போது திருக்கோவில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட் டதுடன், அவ்விடத்தில் திருக்கோவில் பிரதேச சுகாதார காரியாலயத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கொவிட்-19 தொடர்பான அறிவுறுத்தல்களை கை ஒலிபெருக்கியின் மூலம் தெரிவித்தபடி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இனங்களுக்கிடையில் நல்லுறவைப் பேண பாடுபட்டவர் மறைந்த யூ.எல்.எம்.பாரூக்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் எம்.பி. அனுதாபம்



நாட்டில் இனங்களுக்கிடையிலான நல்லுறவைப் பேணுவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அரசியல்வாதியாக இருந்த, மறைந்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் யூ.எல்.எம்.பாரூக், மக்கள் மனங்களில் நீங்காது நிறைந்திருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.அன்னாரின் மறைவையொட்டி முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் விடுத் துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

சப்ரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில், ருவன்வெல்ல தேர்தல் தொகுதியில் கன்னந்தோட்டையைச் சேர்ந்த மறைந்த யூ.எல்.எம்.பாரூக், ஆரம்பத்தில் கிராம சபையினூடாக நேரடி அரசியலில் பிரவேசித்தார்.

கேகாலை மாவட்ட அபிவிருத்திச் சபையிலும் உறுப்பினராக இருந்து, பின்னர் தனது அபிமானத்திற்குரிய அரசியல்வாதியான மறைந்த பி.சி.இம்புலான ஆளுநராக நியமிக்கப்பட்ட காரணத்தினால் பொதுமக்களின் அமோக ஆதரவுடன், வெறுமனே மூவாயிரம் முஸ்லிம் வாக்காளர்களைக் கொண்டிருந்த ருவன்வெல்ல தேர்தல் தொகுதியை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலைக்கு உயர்ந்தார்.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சராக இருந்தபோது அவர் நாடளாவிய ரீதியில் சேவையாற்றியதை மக்கள் இன்றும் சிலாகித்துப் பேசுகின்றனர்.

அவர் அரசியல் பிரதிநிதித்துவம் அற்றிருந்த காலத்திலும் கூட, நாங்கள் அமைச்சுப் பதவிகளை வகித்த சந்தர்ப்பங்களில் பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக கை நிறைய விபரங்கள் அடங்கிய கோவை களுடன் வந்து சந்தித்து உரிய தீர்வுகளைக் காண்பதில் அதிக கரிசனை காட்டியிருக்கிறார். நோய் வாய்ப்பட்டிருந்தபோதிலும் அவர் ஓய்ந்திருக்க வில்லை.

அன்னாரின் சேவைகளை பாராட்டி எழுதப்பட்ட 'யுகப் புரட்சியொன்றின் மூன்று கோரளை அபிமானம்' என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு சில வருடங்களுக்கு முன்னர் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது அவரைப் பற்றி உரையாற்றக் கூடிய வாய்ப்பு எனக்கும் கிடைத்தது.

கேகாலை மாவட்ட முஸ்லிம் கல்வி அபிவிருத்தி சங்கத்திலும் அவர் பிரதான பங்கு வகித்தார். அவர் மக்கள் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுவந்த நிலையில், 'யூ.எல்.எம்.பாரூக் மன்றம்' என்ற ஓர் அமைப்பு 2015ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்டது. மறைந்த யூ.எல்.எம்.பாரூக், சாதாரண பொதுமக்களுடன் மிகவும் நெருங்கிப் பழகிவந்தமை அவரது சிறப்பியல்பாகும். அன்னாரை எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக்கொண்டு, மேலான ஜன்னதுல் பிர்தௌஸ் சுவன பாக்கியத்தை வழங்குவானாக. அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், அன்னாரை நேசிக்கும் மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து K

வெற்றி இலக்கங்கள் 28 49 63 67

திகதி: 06.08.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 0558

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 102,473,920.40 | 1 |
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 2 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 72 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 188 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 4312 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2884 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 72623 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 13563 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 105,405,880.40

பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 93,645

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை

ரூ. 80,000,000.00

• ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Web: www.nlb.lk

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD



கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2823 சீட்டிழுப்பு திகதி: 06.08.2021

ஆங்கில எழுத்து J

வெற்றி இலக்கங்கள் 13 20 41 72

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 6 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 151 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 353 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8377 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5566 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 137960 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 25372 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 177,785

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை

ரூ. 5,581,980.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு

ரூ. 63,547,536.40

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும்.

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Fax: 0114 663416 Web: www.nlb.lk

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD



தூரன செய்திகளுக்கு இணைந்திருங்கள்

thamilan.lk உடன்



சீட்டிழுப்பு இலக்கம்: 4528 உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத

திகதி: 06.08.2021

வெற்றி எழுத்து M வெற்றி இலக்கங்கள் 2 7 4 1 7 8

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | ■ 2 7 4 1 7 8 | ரூபா 2,000,000/- | 1 |
| 2ஆம் பரிசு | ■ ■ 7 4 1 7 8 | ரூபா 100,000/- | 11 |
| 3ஆம் பரிசு | ■ ■ ■ 4 1 7 8 | ரூபா 10,000/- | 102 |
| 4ஆம் பரிசு | ■ ■ ■ ■ 1 7 8 | ரூபா 1,000/- | 1018 |
| 5ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ 7 8 | ரூபா 100/- | 10258 |
| 6ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ ■ 8 | ரூபா 20/- | 101834 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ 2 7 4 1 7 ■ | ரூபா 10,000/- | 9 |
| 8ஆம் பரிசு | ■ 2 7 4 1 ■ ■ | ரூபா 1,000/- | 102 |
| 9ஆம் பரிசு | ■ 2 7 4 ■ ■ ■ | ரூபா 100/- | 1025 |
| 10ஆம் பரிசு | ■ 2 7 ■ ■ ■ ■ | ரூபா 50/- | 10135 |
| 11ஆம் பரிசு | M ■ ■ ■ ■ ■ ■ | ரூபா 20/- | 40737 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 9,816,470.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.19,832,449.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை

32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. www.nlb.lk



Mega POWER மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 0876

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 06.08.2021

ஆங்கில எழுத்து W சுப்பர் இலக்கம் 04 வெற்றி இலக்கங்கள் 04 05 19 58

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 78 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 183 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4644 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2919 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 75494 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 13875 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.141,707,606.00

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை

ரூ. 2,838,040.00

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD



உத்தியோகபூர்வ முடிவுகள்

சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு திகதி: 06.08.2021 1608 சீட்டிழுப்பு இலக்கம்

சுப்பர் இலக்கம் 11 வெற்றி இலக்கங்கள் 16 38 50 54

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | 1 |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 20,000.00 | 7 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 102 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 318 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 4543 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 3848 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 54797 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாத்திரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 13274 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை

ரூ. 2,852,200.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு

ரூ. 3,560,660.80

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Fax: 0114 663416 Web: www.nlb.lk

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

# அரசின் மீது நம்பிக்கைய
# இதைவிட வேறு

## – அமைச்சர் டக்ளஸ்

**மக்கள் என்னை ஓர் ஆசனத்தோடு 28 வருடங்களாகத் தெரிவுசெய்து வருகிறார்கள். அந்த ஓர் ஆசனம் எனக்குப் போதாது. அதிகூடிய வாக்குகளும், அதிகூடிய ஆசனங்களும் தனக்கு இருக்க வேண்டும் எனத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையுடன் இருப்பதாகவும் இதைவிட வேறு வழியில்லையெனவும் குறிப்பிட்டார்.**

**தமிழன் வார இதழுக்கு வழங்கிய விசேட செவ்வியின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**செவ்வியின் முழுமையான விபரம் வருமாறு,**

**இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை தொடர்ந்தும் இழுபறி நிலையில் இருக்கிறது. அதனை ஏன் தீர்க்க முடியாதுள்ளது? தீர்ப்பதற்கு இருக்கும் தடைகள் எவை? அண்மையில் கூட இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக சொல்லப்பட்டதே?**

இந்திய மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக ஒருதரப்பினால் மாத்திரமே கூறப்பட்டுள்ளது. இலங்கைத் தரப்பில் எதுவும் கூறப்படவில்லை. இருந்தாலும் இதுபற்றிய அறிக்கையொன்றைக் கோரியிருக்கிறேன்.

அதாவது, எல்லைதாண்டிய, அத்துமீறிய, சட்டவிரோத தொழில்களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். இங்கே இருக்கக்கூடிய மக்களின் வளங்கள் சுரண்டப்படுகின்றன. எமது கடற்றொழிலாளர்களுடைய தொழில் உபகரணங்கள் அழிக்கப்படுகின்றன. இவர்கள் நூற்றுக்கணக்கான பெரிய வள்ளங்களில் வரும்போது எங்களுடைய மக்கள் கடல் பயணத்துக்குப் போகாமல், தொழிலில் ஈடுபடாமல் வீட்டில் தங்கியிருக்க வேண்டிய நிலை அல்லது கடற்கரையில் இருந்து பார்க்க வேண்டிய நிலைதான் ஏற்பட்டிருக்கிறது.

இதற்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

> “மீனவர் பிரச்சினையைத் தீர்க்க முடியாமை துரதிர்ஷ்டம்”

துரதிர்ஷ்டவசமாக யுத்த காலத்தில் கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்வது நிறுத்தப்பட்டிருந்தது. அப்போது இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்து இவ்வாறான நடவடிக்கைகளுக்கு தங்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

யுத்தம் நிறைவடைந்து பத்து வருடங்களுக்கு மேலாகின்றது. அப்படியிருந்தும் பல முயற்சிகளை செய்துள்ளதுடன், பல பேச்சுவார்த்தைகளையும் நடத்தியிருக்கிறோம். இருதரப்பினருடனும் பேச்சுவார்த்தை முயற்சிகளை மேற்கொண்டேன். அவை கைகூடவில்லை.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் நான் இந்தியாவுக்குச் சென்று இந்தப் பிரச்சினையைப் தீர்ப்பதற்கு புதிய திட்டமொன்றை முன்மொழிந்தேன். இதுவொரு புதிய, அற்புதமான திட்டம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்ஷங்கர் கூறியிருந்தார். இது தொடர்பான கலந்துரையாடல்களை நடத்தி பிரச்சினைக்கு தீர்வுகாணுவோம் என அவர்கள் தெர்வித்திருந்தார்கள்.

ஆனால், கொரோனா தொற்றுப்பரவல் காரணமாக அந்த நடவடிக்கையை முன்னெடுக்க முடியாமல் போனது. அதிகாரிகள் மட்டத்தில் அண்மையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. ஆனால், அதிலும் தீர்வுகள் எட்டப்படவில்லை.

இதுவொரு துரதிர்ஷ்டம்தான்.

''திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது'' என்ற எம்.ஜி.ஆர். படப்பாடல்தான் நினைவுக்கு வருகிறது. இந்திய மீனவர்கள்தான் அதை உணர வேண்டும்.

**நீங்கள் அமைச்சுப் பொறுப்பை ஏற்றவுடன் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காகப் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தீர்கள். ஒரு தமிழ் அமைச்சர் இந்தப் பிரச்சினையை கையிலெடுத்திருக்கிறார். ஆதலால் அவர் தீர்த்துவைப்பார் என்ற நம்பிக்கை மக்களிடத்தில் இருந்தது. இப்போது அந்தப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில் தொய்வுநிலை ஏற்பட்டுள்ளதா? அல்லது அமைச்சர் டக்ளஸும் இந்த விடயத்தை கைவிட்டுவிட்டாரா?**

நான் பல தடவைகள் இந்திய தூதுவருடன் கலந்துரையாடியிருக்கிறேன். தொலைபேசியினூடாக பல தடவைகள் இந்திய தரப்பை தொடர்புகொண்டு கதைத்திருக்கிறேன்.

மீண்டும் விக்கிரமாதித்தன்போல் நான் திரும்பத்திரும்ப அந்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறேன்.

கடந்த காலங்களில் கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பயன்படுத்திக்கொள்ளவில்லை. மக்கள் தொடர்ச்சியாக 28 வருடங்களாக நாடாளுமன்றம் அனுப்புகிறார்கள். தேசிய நல்லிணக்கம் தொடர்பான எனது நடவடிக்கைகள், தற்போதைய ஆட்சியாளர்களுடன் எனக்கு இருக்கின்ற உறவு, புரிந்துணர்வு காரணமாக இந்த அமைச்சு எனக்குக் கிடைத்திருக்கிறது.

அமைச்சுப் பதவியை சுயலாபத்தோடு நான் பார்க்கவில்லை. கிடைக்கும் சந்தர்ப்பங்களை எமது மக்களுக்கு சாதகமானதாகவே பார்க்கிறேன். இன்னும் மக்கள் எனக்கு பெரியளவில் வாக்களித்து, கூடிய ஆசனங்களையும் தந்திருந்தால் இந்தப் பிரச்சினை மாத்திரமல்ல, இன்னும் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என நாம் நம்புகிறேன்.

**சீனாவின் முதலீடு வடக்கில் அதிகரித்திருக்கிறது. நீங்கள் ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்?**

நான் மௌனமாக இருக்கவில்லை. இதை மிகைப்படுத்தி ஊதி, பெருப்பிக்கின்ற நிலைமைதான் அங்கு காணப்படுகிறது. அதாவது நல்லாட்சி என்று சொல்லப்பட்ட ஆட்சிக்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சியில் 2016 இறுதி, 2017 ஆரம்பத்தில் சீனாவின் தனிப்பட்ட சிறு முதலீட்டாளர் ஒருவர் அன்றைய ஆட்சி அனுமதியோடு அரியாலையில் மூன்று, நான்கு பரப்பு காணியை குத்தகைக்கு எடுத்து அட்டைக்குஞ்சு பொறிக்கும் நிலையம் ஒன்றை உருவாக்கினார்.

அந்த இடம் சரியாக அமையாததால் கௌதாரிமுனை எனும் இடத்தில் அங்கிருக்கின்ற கடற்றொழில் சங்கங்களின் புரிந்துணர்வுடன், பரீட்சார்த்தமாக அதனைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

நாங்கள் நூற்றுக்கணக்கில் அட்டைப் பண்ணைகளை ஆரம்பித்து வருகிறோம். அதற்கு குஞ்சுகள் தேவை. தொடர்ந்தும் கடலிலிருந்து எடுக்க முடியாது. வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யும் சூழ்நிலையுமில்லை. ஆதலால் உள்ளூரில் அந்தத் தொழில்நுட்பங்களோடும், முதலீடுகளோடும் ஒருவர் வருவாராக இருந்தால் நாங்கள் ஏன் அதைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது?

> “வடக்கு, கிழக்கில் சீனாவின் ஆதிக்கத்துக்கு அல்லது இந்தியாவுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு இடங்கொடுக்க மாட்டோம்”

தமிழ்த் தலைமைகள் அல்லது தமிழ்த் தலைமைகள் என்று சொல்லப் படுபவர்கள் கடந்த காலங்களிலும், தற்காலத்திலும் கிடைக்கின்ற வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதில்லை.

தமிழ்த் தலைவர்கள் என்று சொல்லப்ப டுகின்றவர்களுடைய நோக்கம், பிரச்சினைகளை தீராப் பிரச்சினைகளாக வைத்திருப்பதுதான். அதனால்தான் தமிழ் மக்களுக்கு தொடர்ச்சியாக இந்தப் பிரச்சினைகள் இருக்கின்றன.

தமிழ் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குவதற்குக் காரணம் தமிழ்த் தலைமைகள்தான் என்பதை எனது அனுபவங்களினூடாக சொல்கிறேன்.

**இந்திய அரசாங்கத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் எந்தச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படமாட்டாது என நீங்கள் அண்மையில் சொல்லியிருந்தீர்கள். ஆனால், இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சீனாவுடன்தானே நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தியிருக்கிறது?**

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு முதலீடு தேவைப்படுகிறது. தொழில்நுட்பங்கள் தேவைப்படுகின்றன. சீனா அவற்றைக் கொடுக்கின்றது. அந்த வகையில் அவர்கள் அதனைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

வட, கிழக்கு மக்களைப் பொறுத்தவரையில் சீனாவின் ஆதிக்கத்துக்கோ அல்லது இந்தியாவினுடைய பாதுகாப்புக்கு எதிராகவோ செயற்படுவதற்கு நாங்கள் இடங்கொடுக்கப் போவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு புலம்பல் அரசியல்வாதியொருவர் சீனமயம் என்று சொன்னார். அதாவது, தான் வெளியில் செல்லும்போது, வீதி வேலைகளிலும் சீனர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கூறி ஒரு படத்தை சமூகவலைத்தளத்தில் தரவேற்றியிருந்தார். அவ்வாறு தரவேற்றியிருக்காவிட்டால் அவர் அம்பலப்பட்டிருக்க மாட்டார். அதாவது அம்பாறையைச் சேர்ந்த ஒருவர் குடத்தனையில் திருமணம் செய்து, வீதிப் பணிகளை தனியார் நிறுவனத்தினூடாக தொழிலாக செய்துவருகிறார்.

தமிழ்த் தலைமைகள் தங்களுடைய சுயலாபத்துக்காக கடந்த காலங்களில் கிடைத்த பல சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தவில்லை.

இந்த அழிவுப் பிரச்சினையை முன்னெடுத்ததும் அவர்கள்தான். நினைத்திருந்தால் எப்போதோ பிரச்சினையை தீர்த்திருக்கலாம்.

எங்களுக்கு ஒரு காலகட்டத்தில் ஆயுதப் போராட்டத்துக்குரிய தேவை இருந்தது. அதை நாங்கள் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தோடு முற்றுப்புள்ளி வைத்திருக்க வேண்டும். ''அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு'' என்பதுபோல் அல்லது ''சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது'' என்பது போல் என இந்த விடயத்தை நான் அன்றிலிருந்தே சொல்லிவந்திருக்கிறேன்.

இந்த ஆயுதப் போராட்டத்தில் பங்கேற்ற ஆரம்பப் போராளி என்ற வகையில் எனக்கும் ஒரு தார்மீகப் பொறுப்பிருக்கிறது. நமது மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு நானும் ஏதோ ஒருவகையில் காரணம் என யோசிக்கிறேன்.

''சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி'' என்பதுபோல நாங்கள் ஓர் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்துவிட்டோம். இருப்பதைப் பாதுகாத்துக்கொண்டு முன்னோக்கிச் செல்வதற்குத்தான் போராட்டத்தை ஆரம்பித்தோம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக ''தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன்'' என்பது போல் சிலர் மக்களின் அழிவுக்கும், தங்களுடைய அழிவுக்கும் காரணமாக இருந்திருக்கிறார்கள்.

நான் 1980 களில் இந்தியாவுக்குச் சென்று 90 களில் திரும்பி வந்தமைக்கு மக்கள்பால் உள்ள தார்மீகப் பொறுப்புதான் காரணம். அப்படி வரும்போது நான் சொன்ன மூன்று விடயங்கள் இருக்கின்றன.



> “எனக்கு அதிகூடிய வாக்குக
> நாடாளுமன்றத்தில் அவசிய

# யுடன் இருக்கிறேன்
# வழியில்லை

## தேவானந்தா



“ஓர் ஆரம்பப் போராளி என்ற வகையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நானும் பொறுப்பேற்கிறேன்”

தேசிய நீரோட்டத்தில் கலந்துகொண்டு, நாடாளுமன்ற பிரசன்னத்தில், தேசிய நல்லிணக்கத்தினூடாக பிரச்சினைகளைத் தீர்க்கலாம்.

இயக்கங்களாக இருந்து கட்சிகளாக மாறியவையும், தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி இவர்களெல்லாம் பயம் காரணமாகவும், தங்களுடைய சுயலாப அரசியல் காரணமாகவும் பிரபாகரனின் அழிவு யுத்தத்துக்குக் காரணமாக இருந்தார்கள்.

அதனை நியாயப்படுத்தவும் முற்பட்டார்கள்.

இன்னொரு துரதிர்ஷ்டம் என்னவென்றால், அந்தக் கட்சிகள், இயக்கக் கட்சிகள், அவற்றின் தலைவர்களெல்லாம் கொல்லப்பட்டது பிரபாகரனால். பயம் காரணமாகவும், சுயலாப அரசியல் காரணமாகவும் புலித்தலைமையின் தவறான, நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயத்துக்குத் துணைபோனார்கள்.

இதற்கு எல்லாரும் பொறுப்பெடுக்க வேண்டும். நானும் பொறுப்பெடுக்கின்றேன்.

என்னால் எதுவும் செய்ய முடியாற்போய்விட்டதே என்ற மனக்கவலை இருக்கிறது. அதை என்னுடைய கையில் எடுத்துச் செய்ய வேண்டும் என்ற தார்மீகப் பொறுப்பு காரணமாக நான் இந்தியாவிலிருந்து திரும்பிவந்து என்னால் முடிந்தளவு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறேன்.

“சபையில் உணர்ச்சிவசப்படப் பேசும் தமிழ் உறுப்பினர்கள் பின்கதவால் சென்று அமைச்சர்களிடம் தனிப்பட்ட உதவிகளைப் பெறுகிறார்கள்”

**இப்போதும் அந்தப் பொறுப்பு உங்களுக்கிருக்கிறதல்லவா? தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிறீர்கள். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவில்லையா?**

மக்கள் என்னை ஓர் ஆசனத்தோடு 28 வருடங்களாக தெர்வுசெய்து வருகிறார்கள். அந்த ஓர் ஆசனம் எனக்குப் போதாது. அதிகூடிய வாக்குகளும், அதிகூடிய ஆசனங்களும் எனக்கு இருக்க வேண்டும்.

நாங்கள் முன்னர் ஆயுதம் தூக்கியது கூட ஆயுதபலத்தினால் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்பதால்தான்.

பிறகு அதிலிருந்து தேசிய நீரோட்டத்தில் கலந்துகொண்டு, ஜனநாயக ரீதியில் நாடாளுமன்றத்தில் கூடிய வாக்குகளும், கூடிய ஆசனங்களும் இருக்க வேண்டும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அது கிடைக்கவில்லை.

''தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போன'' மாதிரிதான் என்னுடைய செயற்பாடுகள் இருக்கின்றன.

என்னுடைய தேசிய நல்லிணக்கம், எனக்கும் அவர்களுக்கும் இருக்கின்ற புரிந்துணர்வு காரணமாக பல விடயங்களை செய்துகொண்டிருக்கிறேன்.

அரசியல்தீர்வு வானத்திலிருப்பதாக அல்லது ஒளிந்திருப்பதாக நான் கருதவில்லை. ஏற்கனவே, எங்களுடைய போராட்டத்தினூடாக இலங்கை – இந்திய ஒப்பந்தம் என்ற பொன்னான வாய்ப்புக் கிடைத்தது. அந்த வாய்ப்பை நாங்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை.

அந்த வாய்ப்புக் கிடைத்த ஒரு பகுதியினர், தங்களுடைய சுயலாப அரசியலுடனான தலைமையால் அதனைத் தூக்கியெறிந்தது. அதன்பின்னர் இன்னொரு பகுதியினருக்கு அந்த வாய்ப்பு கிடைத்தது. அதனை துஷ்பிரயோகம் செய்துவிட்டார்கள். அதற்குப் பிறகு வாய்ப்புகள் எதுவும் கிடைக்கவில்லை.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் எங்களுடைய அரசாங்கம் தேர்தலை நடத்தியது. அதிலும் அதிகாரங்கள் எதுவும் கிடைக்கவில்லையென தமிழ்த் தரப்பினர் கூக்குரலிட்டார்கள்.

நல்லாட்சி என்றதொரு ஆட்சியைத் தாங்கள்தான் கொண்டுவந்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளிட்டவர்கள் கொண்டாடி, தம்பட்டமடித்தார்கள். ஏன் அந்த ஆட்சியில் அவர்களால் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை?

புதிய அரசியலமைப்பை கொண்டுவருவதென்றால் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை. சர்வஜன வாக்கெடுப்புக்குப் போக வேண்டும். அது இந்த நாட்டில், இந்தக் காலகட்டத்தில் சாத்தியமில்லை.

ஏற்கனவே எங்களுடைய கையில் ஒரு தீர்வு இருக்கிறது. அதிலிருந்து முன்னோக்கிச் செல்ல வேண்டும். நான் 1987 ஆம் ஆண்டு முதல் இதைப் பற்றி சொல்லிவருகிறேன். அப்போதே இந்தப் பிரச்சினையை தீர்த்திருந்தால் நாங்கள் இன்று சுயநிர்ணய உரிமையுடன் வாழ்ந்து கொண்டிருப்போம்.

மற்றையவர்களெல்லாம் வெறும் வாய்ப்பேச்சு மாத்திரம்தான். நாடாளுமன்றத்தில் உணர்ச்சிவசப்பட பேசுவது, பின்னர் உணவு உண்ணும் அறையில் சல்லாபம் கொண்டாடுவது, பின் கதவால் சென்று அமைச்சர்மாரிடம் தங்கள் தனிப்பட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்வது என இதுதான் நடக்கிறது.

**நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையா சொல்கிறீர்கள்?**

தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் பெரும்பாலும் இதைத்தான் செய்கிறார்கள்.

**தற்போதைய அரசாங்கம் குறித்து நிறைய விமர்சனங்கள் இருக்கின்றன. கொரோனா கட்டுப்பாடு முறையாக நடைபெறவில்லை. நாட்டில் டொலர்களுக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படுமென இறக்குமதியாளர்கள் சங்கம் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியிருந்தது. இவ்வாறானவை குறித்து உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

கொரோனா இந்தளவுக்கு பாரதூரமாகச் செல்லும் என யாரும் எதிர்பார்க்கவில்லை. உலக நாடுகள் அனைத்தும் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்கின்றன. நாங்கள் இறக்குமதிகளைக் குறைத்து உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதில் கவனம் செலுத்தி வருகிறோம். கொஞ்ச நாட்களுக்கு சில பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும்.

**அப்படியானால் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் திருப்தியாக இருக்கிறீர்களா?**

ஆம். நம்பிக்கையுடன் இருக்கிறேன். இதைவிட வேறு வழியில்லை. இங்கே வேறு ஆட்கள் இருந்திருந்தால் நிலைமை மேலும் மோசமாகியிருக்கும்.

**மாகாண சபைத் தேர்தல் ஏன் பிற்போடப்படுகிறது? இதுபற்றி அமைச்சரவையிலோ அல்லது அரசாங்கத் தரப்பினருடனோ நீங்கள் பேசாதது ஏன்?**

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் சேற்றுக்குள் இருந்த தேரை நாங்கள் வெளியில் கொண்டுவந்தோம். அதாவது யுத்தம் நிறைவடைந்த பின்னர் தேர்தலை நடத்தினோம். ஆனால், அதைக் கையில் எடுத்துக்கொண்ட கட்சியினர் ஒன்றும் செய்யவில்லை.

அதேநேரம் நாட்டுச் சூழலும் அதற்குப் பொருத்தமானதாக இல்லை. இன்னும் கொஞ்ச காலம் அதற்குத் தேவை.

**மத்திய அரசாங்கத்தின் பலம் மாத்திரம் போதுமானது, மாகாணங்களுக்கான அதிகாரம் அவசியமற்றது என அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களே கூறிவருகிறார்கள். அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆயத்தங்கள் இடம்பெறுகின்றனவா?**

அதுவொரு காரணம் அல்ல. இது கூட்டு அரசாங்கம். அதற்குள் பல கருத்துகள் வரலாம்.

நல்லாட்சிக் காலத்திலும் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படவில்லைதானே? இப்போதைய காலகட்டம் தேர்தல் நடத்துவதற்குப் பொருத்தமானதல்ல என நான் கருதுகிறேன்.

**இலங்கையில் கடல்வளம் தாராளமாக இருக்கிறது. ஆனால், ரின் மீன்களை வெளிநாடுகளிலிருந்துதானே இறக்குமதி செய்கிறோம். உங்களுடைய அமைச்சினால் உள்நாட்டில் அதை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை ஏன் எடுக்கவில்லை?**

அந்தத் திட்டங்களை நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம். படிப்படியாக அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**– நிர்ஷன் இராமானுஜம் –**
**படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன**

ளும், ஆசனங்களும்
ம்”





## சொந்த நாட்டிற்காக சி.பி.எல். தொடரிலிருந்து விலகும் ஹஸரங்க

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முக்கிய சகலதுறை வீரரான வனிந்து ஹஸரங்க இம் மாதம் ஆரம்பமாகவுள்ள கரீபியன் ப்ரீமியர் லீக் (சி.பி.எல்.) தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடத்தப்படுகின்ற இருபதுக்கு 20 லீக் தொடர்களில் ஒன்றான கரீபியன் ப்ரீமியர் லீக் தொடரின் 2021ஆம் ஆண்டுக்கான தொடரானது எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகிறது. குறித்த தொடரில் பங்கேற்பதற்காக இலங்கையிலிருந்து 3 வீரர்கள் தெரிவாகியிருந்தனர்.

இதில் வனிந்து ஹஸரங்க முதல் தடவையாக வெளிநாட்டு இருபதுக்கு 20 லீக் தொடரில் விளையாடும் அடிப்படையில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற கரீபியன் ப்ரீமியர் லீக் ஏலத்தின் போது சென்.கைட்ஸ் அண்ட் நெவிஸ் பெட்ரியோட்ஸ் அணியில் விளையாடுவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், எதிர்வரும் செப்டெம்பர் மாத ஆரம்பத்தில் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இலங்கைக்கு இருதரப்பு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது. இதனால், தான் தென்னாபிரிக்க தொடரில் இலங்கை அணியின் சார்பில் விளையாட வேண்டும் என்பதற்காக வனிந்து ஹஸரங்க கரீபியன் ப்ரீமியர் லீக் தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

## ஆஸி. அணியுடன் முதல் வரலாற்றுத் தொடரை கைப்பற்றிய பங்களாதேஷ்



சுற்றுலா அவுஸ்திரேலிய அணியுடனான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் மூன்றாவது போட்டியில் 10 ஓட்டங்களினால் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி, அவுஸ்திரேலிய அணியுடன் முதல் தடவையாக இருதரப்புக் கிரிக்கெட் தொடர் ஒன்றினை கைப்பற்றி வரலாற்று சாதனை படைத்தது.

மெத்யூ வேட் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியானது ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடுவதற்காக பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. தொடரின் முதல் 2 போட்டிகளிலும் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்று முன்னிலை பெற்றிருந்த நிலையில், மூன்றாவது போட்டியானது நேற்று முன்தினம் டாக்காவில் நடைபெற்றது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது. 128 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 117 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 10 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

அதனடிப்படையில் பங்களாதேஷ் அணி தொடரின் முதல் மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்றதையடுத்து, தொடரைக் கைப்பற்றியது. பங்களாதேஷ் அணி அவுஸ்திரேலிய அணியுடன் முதல் தடவையாக இருபதுக்கு 20 சர்வதேச தொடரைக் கைப்பற்றியிருக்கும் அதேவேளை, முதல் தடவையாக இருதரப்புத் தொடரையும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. போட்டியின் ஆட்டநாயகனாக பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்டத்தில் முக்கிய பங்கு வகித்த மஹ்மதுல்லாஹ் தெரிவானார்.

**போட்டியின் சுருக்கம்**

பங்களாதேஷ் - 127/9 (20)

மஹ்மதுல்லாஹ் 52 (53), ஷகீப் அல் ஹஸன் 26 (17), நதன் எலிஸ் 3/34 (4), ஜொஷ் ஹேஸில்வுட் 2/16 (4)

அவுஸ்திரேலியா – 117/4 (20)

மிட்செல் மார்ஷ் 51 (47), பென் மெக்டர்மோட் 35 (41), சுரிபுல் இஸ்லாம் 2/29 (4), நாஸும் அஹமட் 1/19 (4)

## ஒலிம்பிக்கில் சறுக்கிய தருணங்கள்

விளையாட்டுப் போட்டியின் போது விபத்து ஏற்பட்டு வீரர்கள் காயமடைவதுண்டு. சிலவேளைகளில் பார்வையாளர்கள் காயமடைந்த சந்தர்ப்பங்களும் உண்டு. டோக்கியோ ஒலிம்பிக்கில் விளையாட்டு வீரர் ஒருவர் வீடியோ படப்பிடிப்பாளரை மோதித்தள்ளிய சம்பவமொன்று நடைபெற்றுள்ளது.

டோக்கியோவில் புதிதாகச் சேர்க்கப்பட்ட போட்டிகளில் ஸ்கேட்போர்டிங்கும் ஒன்று. ஸ்கேட்போர்டிங்கின் அபாயம் பற்றி விளையாட்டு வீரர்களுக்கு நன்கு தெரியும். கரணம் தப்பினால் மரணம் போன்ற விளையாட்டுதான் இது. நான்கு சில்லுகளுள்ள சிறிய பலகையில் சாதுரியமாக இலக்கை அடையும் விளையாட்டு. உயரமான தடைகள், படிகள், தடிகள்



போன்றவற்றைக் கடந்து விளையாடும் போட்டியே இது.

இதன்போத அவுஸ்திரேலியாவின் 17 வயதான கிரன் வூலி, போட்டியாளராகக் கலந்துகொண்டார். உடம்பை வளைத்து, இருந்து, எழும்பி தனது திறமைகள் அனைத்தையும் வெளிப்படுத்தினார். அப்போது அந்தப் போட்டியைப் பதிவு செய்த வீடியோ படப்பிடிப்பாளர் மீது எதிர்பாராத விதமாக கிரன் வூலி மோதினார்.

வீடியோ படப்பிடிப்பாளரை மோதித் தள்ளிய கிரன் வூலி அதிர்ச்சியுடன் தலையில் கையை வைத்தார். பின்னர் மன்னிப்புக் கேட்டார். ஆனால், கடமையே கண்ணான படப்பிடிப்பாளர் நிலத்தில் படுத்துக்கொண்டு கட்டை விரலை உயர்த்தி தனது கடமையைச் செய்தார். தனது கெமரா சேதமடையவில்லை என்பதையும் தெரியப்படுத்தினார். பொதுவாக ஸ்கேட்போர்டர்கள் தான் இரத்தம் தோய்ந்து காயமடைகிறார்கள். அதிர்ஷ்டவசமாக கிரன் வூலி காயமடையவில்லை.

விபத்துக்குள்ளான போதிலும், வூலி தொடர்ந்து விளையாடி 82.69 மதிப்பெண்களைப் பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார். இறுதிப் போட்டியில் கிரன் வூலி ஐந்தாவது இடத்தைப் பிடித்தார். இன்னொரு அவுஸ்திரேலியரான கீகன் பால்மர் தங்கம் வென்றார்.பிரேசிலின் பெட்ரோ பீரோஸ் வெள்ளியையும், அமெரிக்காவின் கோரி ஜூனே வெண்கலத்தையும் வென்றனர்.

## டோக்கியோ ஒலிம்பிக்கில் ரஷ்யாவை காணவில்லையே!

### ஏன் தெரியுமா?

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

(ஏ. அகீல் சிஹாப்)

32ஆவது டோக்கியோ ஒலிம்பிக் இன்றைய தினம் நிறைவுக்கு வருகிறது. ஒவ்வொரு ஒலிம்பிக்கிலும் வீறுநடை போட்டுவரும் ரஷ்யாவை டோக்கியோ ஒலிம்பிக்கில் காணவில்லையே என்ற சந்தேகம் எல்லோருடைய மனதிற்குள்ளும் எழுந்திருக்கிறது. இதற்குப் பின்னர் மிகப்பெரிய கதையொன்று உள்ளது. அது தொடர்பில் அவதானம் செலுத்தலாம்.

விளையாட்டு உலகத்தை உலுக்கிய மோசமான ஊக்கமருந்து ஊழலுக்குப் பின்னர் 2019 டிசம்பர் மாதம் டோக்கியோ ஒலிம்பிக்கில் ரஷ்யாவுக்குத் தடை விதிக்கப்பட்டது. நான்கு ஆண்டுகளின் ஆரம்பத்தடை 2020ஆம் ஆண்டில் இரண்டு ஆண்டுகளாக குறைக்கப்பட்டது. இதனால் டோக்கியோ ஒலிம்பிக் மற்றும் 2022 பீபா உதைபந்து உலகக் கிண்ணம் ஆகியவற்றில் ரஷ்யா என்ற அணி பங்கேற்க முடியாமல் போனது. எனினும் ரஷ்ய ஒலிம்பிக் கூட்டமைப்பு (ஆர்.ஓ.சி.) நிறுவப்பட்டதன் காரணமாக ரஷ்ய விளையாட்டு வீரர்கள் டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கும் வாய்ப்பை பெற்றனர்.

**ரஷ்யா ஏன் தடை செய்யப்பட்டது?**

ரஷ்ய ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம் வழங்கிய தரவுகளை மையப்படுத்தி ரஷ்ய அதிகாரிகள் மற்றும் அரசால் வழங்கப்பட்ட ஊக்கமருந்து திட்டத்தினாலேயே ரஷ்ய வீரர்கள் குற்றவாளிகளாக்கப்பட்டனர் எனக் கண்டறியப்பட்டது.

இதனால் ரஷ்ய விளையாட்டு வீரர்களுக்கு பியோங்சாங்கில் 2018 குளிர்கால ஒலிம்பிக்கில் போட்டியிடத் தடை விதிக்கப்பட்டது. இதன் விளைவுகளால் 2019ஆம் ஆண்டிலிருந்து ஆரம்ப நான்கு ஆண்டுகள் தடைக்கு மேன்முறையீடு செய்து, அரசு நிதியளிக்கும் ஊக்கமருந்து திட்டத்தில் ஈடுபடுவதை ரஷ்யா கடுமையாக மறுத்துள்ளது.

உலக ஊக்கமருந்து எதிர்ப்பு அமைப்பின் கோரிக்கையின் பேரில் உண்மையான போதைப்பொருள் சோதனை தரவை வழங்க ரஷ்ய ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம் தவறிவிட்டது என்று மூன்று நீதிபதிகள் குழு ஒருமனதாக ஒப்புக் கொண்டாலும், விளையாட்டுக்கான நடுவர் நீதிமன்றம், அவர்களின் ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம் ஆகியன இந்தத் தீர்ப்புக்கு இணங்கவில்லை. ஊக்கமருந்து சிக்கலில் ரஷ்யா மாட்டிக்கொண்டதால் ஆரம்பத்தில் நான்கு ஆண்டுகள் தடைக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

அதாவது ஒலிம்பிக் போன்ற நிகழ்வுகளில் ரஷ்ய பெயர், கொடி மற்றும் கீதம் அனுமதிக்கப்படாது. மேலும் 2022 கட்டாரில் நடைபெறவுள்ள பீபா உலகக்கிண்ணத் தொடருக்கு ரஷ்யா தகுதி பெற வேண்டுமானால், அவர்கள் நடுநிலை பெயரில் போட்டியிட வேண்டும் எனவும் அதிரடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த தடையின் விளைவாகவே டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆர்.ஓ.சி. என்ற பெயரில் ஒரு அணி உருவானது.

**ஆர்.ஓ.சி என்றால் என்ன?**

ஆர்.ஓ.சி என்பது ரஷ்ய ஒலிம்பிக் கூட்டமைப்பு என்பதைக் குறிக்கிறது. ரஷ்ய விளையாட்டு வீரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்த அணி



அனுமதிக்கப்படுகிறது. நிறுவனத்தின் பங்கேற்பாளர் பெயரின் அனைத்து பொது காட்சிகளும் ஆர்.ஓ.சி. என்ற சுருக்கத்தைப் பயன்படுத்த வேண்டும் எனும் உத்தரவுடனேயே இந்த அணி ஒலிம்பிக்கில் பங்கேற்றிருக்கிறது.

ஒட்டு மொத்தத்தில் ரஷ்ய அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள் காரணமாகவே ரஷ்யாவின் வீர, வீராங்கனைகள் ஊக்கமருந்து சோதனையில் அகப்பட்டுக்கொண்டனர் எனும் தீர்மானத்தின் அடிப்படையில் அவர்கள் ஆர்.ஓ.சி. எனும் நாமத்தில் ஒலிம்பிக்கில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

ஆர்.ஓ.சி. என்ற பெயரில் 300க்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் ஒலிம்பிக்கில் பங்கேற்று வந்தாலும் அவர்கள் அத்தனை பேரும் மறைமுகமான ரஷ்ய நாட்டு வீரர்கள் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

## பதக்கத்தின் நிறத்தை மாற்றிய கனடா



ஒலிம்பிக் மகளிர் உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் சுவீடனை எதிர்த்து விளையாடிய கனடா பெனால்டியில் வெற்றி பெற்று தங்கத்தை தட்டிச் சென்றது.

லண்டன், ரியோ டி ஜெனிரோ ஆகிய நகரங்களில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் கனடா, வெண்கலப் பதக்கம் வென்றது. இறுதிப் போட்டிக்குத் தெரிவாகிய பின்னர் கனடாவின் பயிற்சியாளரான பெவ் பிரீஸ்ட்மேன் இந்த ஒலிம்பிக்கின் இலக்கு பதக்கத்தின் நிறத்தை மாற்றுவது என்று கூறியிருந்தார். 2016 இல் ரியோவில் ஜேர்மனியிடம் 2-1 என்ற கணக்கில் தோற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றது சுவீடன்.

34 ஆவது நிமிடத்தில் சுவீடன் வீராங்கனை ஸ்டீனா பிளாக்ஸ்டீனியஸ் கோல் அடித்தார். கனடாவுக்கு கிடைத்த பெனால்டி மூலம் ஜெஸ்ஸி ஃப்ளெமிங் 67 ஆவது நிமிடத்தில் கோல் அடித்து சமப்படுத்தினார். தலா ஒரு கோல் அடித்ததால் போட்டி மேலும் 30 நிமிடங்கள் நடந்தது. இரு அணிகளும் கோல் அடிக்காததால் பெனால்டி வரை போட்டி சென்றது.

ஐந்து பெனால்டிகளில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்கள் அடித்தன. கனடாவின் கோல்கீப்பர் ஸ்டீபனி லப்பே, இரண்டு பெனால்டிகளைத் தடுத்து தங்கத்தை நோக்கி அணியை அழைத்துச் சென்றார். டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தின் 20 வயது வீராங்கனை ஜூலியா கிராஸோ கடைசி கோலை அடித்து கனடாவின் தங்கப்பதக்கத்தை உறுதி செய்தார். கனேடிய அணியின் 38 வயதான கப்டன் கிறிஸ்டின் சின்க்ளேர், கனடாவின் தங்கக் கனவை நிஜமாக்கினார்.

## மருதூர் ப்ரீமியர் லீக் முதல் போட்டியில் இலவன் ஹீரோஸ் அணிக்கு வெற்றி





(அஷ்ரப்கான், காலிதீன், நூருள் ஹுதா)

சாய்ந்தமருது கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் மருதூர் ப்ரீமியர் லீக் - 2021 (எம்.பி.எல்.) கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஆரம்ப நிகழ்வும், முதலாவது போட்டியும் நேற்று முன்தினம் சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்றது.

32 முன்னணிக் கழகங்கள் பங்கு கொள்ளும் இச்சுற்றுப் போட்டியின் முதல் போட்டியில், சாய்ந்தமருது இலவன் ஹீரோஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அட்டாளைச்சேனை பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் விளையாடியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அட்டாளைச்சேனை பிரண்ட்ஸ் விளையாட்டு கழகம் 11.1 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்களையும் இழந்து 64 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. 65 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது இலவன் ஹீரோஸ் அணி 6.5 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்து 9 விக்கெட்களால் வெற்றியீட்டியது. போட்டியின் ஆட்ட நாயகனாக சாய்ந்தமருது இலவன் ஹீரோஸ் விளையாட்டுக் கழகத்தின் ஸல்பி தெரிவானார்.

ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கல்முனை தொகுதி அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபா, கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் பொதுச் செயலாளர் சித்தார்த் லியனாராச்சி, விசேட அதிதிகளாக ஓய்வுபெற்ற விளையாட்டு அதிகாரி முஹம்மட் நபார், தொழிலதிபர் எம்.நாஸர், சிலோன் மீடியா போரத்தின் தலைவர் றியாத் ஏ.மஜீட், சாய்ந்தமருது கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் எம்.எச்.கே. காலிதீன் உள்ளிட்ட விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

தமிழன் சிறுவர் உலா



# கும்மி

கும்மி பலர் கூடி ஆடும் ஒருவகைக் கூத்து அல்லது நடனம். இது தொன்றுதொட்டுவரும் ஒரு நடனக் கலையாகும். பலர் வட்டமாக ஆடிக்கொண்டோ அல்லது இருபுறமாக சரிசமமாக நின்று ஆடிக்கொண்டோ வரும்போது இசைக்குத் தக்கவாறு தம் கைகளைத் தட்டி கால்களையும் இடுப்பையும், தலையையும் அழகுற அசைத்து, குனிந்தும் நிமிர்ந்தும் கூட்டாக ஆடும் ஒரு கூத்து. இலங்கை, இந்தியாவின் தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் கும்மி வழக்கில் உள்ளது. குரவை என்ற கலையில் இருந்து, கும்மி பிறந்ததாகக் கூறப்படுகிறது.



# மூன்று ஆண்டுகள் தூங்கும் நத்தை

இந்த உயிரினம் உயிர்வாழ ஈரப்பதம் இன்றியமையாத ஒன்று. இது வசிக்கும் இடத்தின் காலநிலை ஒத்து வராவிட்டால் இது 3 ஆண்டுகள்வரை தொடர்ந்து தூங்கும். இந்த நத்தையானது முட்டை இட்டு குஞ்சு பொரிக்கும் வகையைச் சார்ந்த உயிரினம்.

# ஆ அப்படியா?

## குருவிக்குத் தக்கன ராமேஸ்வரம்

*பிழையான அர்த்தம்..*

நம்முடைய தகுதிக்கும், வசதிக்கும் தகுந்ததுதான் கிடைக்கும் என்ற அர்த்தத்தில் இந்த பழமொழி உபயோகப்படுத்தப்படுகிறது. அதென்ன குருவிக்கு தக்கன ராமேஸ்வரம். குருவிக்கும் ராமேஸ்வரத்துக்கும் என்ன சம்பந்தம்.

சரியான அர்த்தம்

குறி வைக்கத் தப்பாது ராமசரம் என்பதே உண்மையான பழமொழி. ராமனின் அம்பு (ராமசரம்) குறி வைத்துவிட்டால் தப்பாது இலக்கை அடையும் என்பதே இதன் அர்த்தம். இதுவே நாளடைவில் பேச்சுவழக்கில் குருவிக்கு தக்கன ராமேஸ்வரம் என்று கூறப்படுகிறது.

# யானை பல் துலக்குமா?

புத்தக மூடையுடன் பாடசாலைக்குக் கிளம்பிய அப்பு, அம்மாவுக்கு டாட்டா சொல்லிக்கொண்டு புறப்பட்டான். “ஏண்டா இன்னைக்கு குளிச்சியா” என்றாள் அப்புவின் அம்மா.

“நேரமாச்சும்மா, நாளைக்கு குளிக்கிறேன்” என்று சொல்லிவிட்டு ஓடினான். அப்பு ஐந்தாவது படித்துக் கொண்டிருந்தான். வகுப்பில் அவன்தான் முதல் மாணவன். அப்புவின் அம்மாவுக்கு பெருமையாக இருந்தது. அடுத்த நாள் வகுப்பிற்குள் நுழைந்ததும் ஆசிரியர் அப்புவிடம்தான் வந்தார்.

“ஏன் அழுக்கு சட்டையை போட்டுக்கொண்டு வந்திருக்கிறாய். துவைத்துப் போடக்கூடாதா?” என்று இரகசியமாக அவனிடம் கேட்டார்.

“மறந்திட்டேன் சார்” சமாதானம் சொன்னான் அப்பு. படிப்பில் கெட்டிக்காரனாக விளங்கிய அப்பு ஏனோ தன்னை சுத்தமாக வைத்துக்கொள்வதில் அக்கறை காட்டவில்லை. பல நாட்கள் அப்பு பல் விளக்காமலேகூட பாடசாலைக்குப் போயிருக்கிறான். அப்போது பையன்கள் இவனிடம் கேட்டால், “யானை பல் விளக்குகிறதா” என்று கிண்டலாகப் பதில் சொல்வான்.

அப்புவின் அம்மாவும் வகுப்பு ஆசிரியரும் பலமுறை கூறியும் அவன் தன்னை சுத்தமாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தவே இல்லை. அவன் கவனம் முழுவதும் படிப்பிலேயே இருந்தது. ஆனால் பையன்கள் இவனை “அழுக்கு மாமா” என்று அழைத்தனர். அரையாண்டுத் தேர்வு வந்தது. அப்பு விழுந்து விழுந்து படித்தான். முதல் மார்க்கை வேறு யாரும் தட்டி போய்விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தான்.

“டேய் குளிச்சிட்டுப் போய் படிடா” இது அப்புவின் அம்மா.

“குளிக்கிற நேரத்துல ஒரு பாடம் படிக்கலாம்மா” என்பான் அப்பு.

பரீட்சைக்கு இன்னும் இரண்டு நாள் இருந்தது. அப்போது அப்புவுக்கு திடீரென்று பல்வலி வந்தது. வலியோடு பள்ளிக்கூடம் சென்றான். மாலை வீட்டிற்கு வருவதற்குள் அவன் முகத்தில் தாடைப்பகுதி பெரியதாக வீங்கிவிட்டது. விண் விண் என்று வலித்தது. உடம்பு அனலாக கொதித்தது. அப்புவின் அம்மாவும் அப்பாவும் கை வைத்தியமாக ஏதோ செய்தார்கள். எதுவும் சரிப்படவில்லை. விடிந்தால் அரையாண்டுத் தேர்வு. அப்பு புலம்பிக்கொண்டே இருந்தான். அவனால் வலியைத் தாங்கமுடியவில்லை. ஆசிரியர் அவனை மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்படி கூறினார்.

அடுத்த நாள் மதுரையில் அப்புவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. “பல்வலிக்கு காரணமாக இருந்த சொத்தைப் பல்லை உடனடியாக எடுக்கவில்லை என்றால் உயிருக்கே ஆபத்து” என்றார் டாக்டர்.

அப்பு அரையாண்டுத் தேர்வுக்கு போகமுடியவில்லையே என்று அழுது கொண்டிருந்தான்.


“தினந்தோறும் பற்களை சுத்தம் செய்தால் இப்படிப்பட்ட பிரச்சினையெல்லாம் வரவே வராது” என்றார் டாக்டர்.

அப்பு ஒருவாரம் மருத்துவமனையில் இருந்தான். அரையாண்டுத் தேர்வு முடிந்து அன்றுதான் பாடசாலை திறந்தது. அன்று வகுப்பில் ரேங்க் கார்டு கொடுக்கப்பட்டது. “முதல் மார்க் ரங்கராஜன்” என்று ஆசிரியர் பெயரைப் படித்தபோது அப்பு தேம்பி அழுதான். ஆசிரியர் அவனை சமாதானப்படுத்தினார்.

“சுவற்றை வைத்துதான் சித்திரம் எழுதவேண்டும். நமது உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொண்டால்தான் எதையும் வெற்றிகரமாகச் செய்ய முடியும்” என்றார். அப்பு மௌனமாக இருந்தான். அடுத்தநாள் அவன் பாடசாலைக்கு “பளிச்” என்று வந்தான்.

“அழுக்குமாமா இப்போ உஜாலாவுக்கு மாறிட்டாண்டா” என்று ஒருவன் சொல்ல, “கொல்”லென்று சிரித்தனர்.

அப்புவுக்கும் சிரிப்பு வந்தது.



# பொன்மொழிகள்

1. தன் பிள்ளைகளுக்கு பிறர் மீது அன்பு செலுத்த கற்றுக் கொடுப்பதனூடாக தாய், தன் கடமையை செய்து முடிக்கிறாள்.

2. மனிதன் பிறக்கும்போது வெற்றுத்தாள் போல்தான் பிறக்கின்றான். இவ்வுலகில் அவன் கண்டு, கேட்டு, உற்று அறியும் சம்பவங்கள் மூலம் மெல்ல மெல்ல அவன் நல்லது, கெட்டது பகுத்தறியும் திறன் பெறுகிறான்.

3. கனவுகள் அபத்தமாகத் தோன்றலாம். ஆனால், எப்போதும் அப்படி இருப்பதில்லை. கனவு எண்ணங்கள் அபத்தமானவை அல்ல, நாம் மனநோயாளியாக இல்லாதவரை.

4. ஒரு மனிதனுடைய குணத்தைப் பற்றி அறிவதற்கு அவனுடைய எண்ணங்களையும் செயல்களையும் ஆராய்ந்தால் போதுமானது.


5. ஆசையின் வேட்கையை அடக்கவும் முடியாது, தீர்த்துவைக்கவும் முடியாது.

6. மன அமைதியில் அடங்கியதே இன்ப வாழ்வு.

7. கிணற்றில் தவறி விழுந்துவிட்டது பற்றி வருத்தப்பட வேண்டாம். அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நிம்மதியாகக் குளித்துவிட்டு வா.

8. சின்ன விடயங்களை கண், காது, மூக்கு வைத்து ஒன்றுக்கு ஒன்பதாக்கும் பழக்கத்தை மனிதர்கள் கனவுகளிடம் இருந்துதான் கற்க வேண்டும். ஏனெனில், உணர்வுகளை கனவுகள் மிகைப்படுத்திக் காட்டும்.

9. புத்தகம் இல்லாத வீடு – ஆன்மா இல்லாத கூடு.



# தமிழ்மொழி

உலகத்தில் வாழ்கின்ற சுமார் 9 கோடி மக்கள் தமிழ் மொழியை பேசுகின்றனர். உலகில் மொத்தம் 6,809 மொழிகள் உள்ளன. இதில் எழுத்துகளைக்கொண்ட மொழிகள் 100 ஆகும். அதில் ஆறு மொழிகள் பழைமையான மொழிகளாகும். அவை எதுவென்றால் ஹீப்ரு, கிரேக்க மொழி, லத்தீன், சமஸ்கிருதம், சீன மொழி மற்றும் தமிழ். ஆனால், இதில் தமிழ், சீன மொழி மற்றும் ஹீப்ரு ஆகிய மொழிகள்தான் பேச்சு மற்றும் எழுத்து வடிவில் உள்ளன. இதற்காக தமிழர்களான நாம் பெருமைகொள்ள வேண்டும். உலகில் மனிதர்களுக்கு தெரிந்த முதல் மொழி தமிழ் மொழிதான் என்று ஆய்வாளர் அலெக்ஸ் காலியர் கூறியுள்ளார்.

சுமார் 20 ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக தமிழ் மொழி தோன்றியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. உலகத்தில் தமிழ் பேசத் தெரிந்த மக்களுள் ஒரு கால் பகுதி மக்களுக்கு தமிழ் மொழியை வாசிக்கவோ எழுதவோ தெரியாது. நம் தமிழ் மொழி திராவிட குடும்பத்தைச் சேர்ந்த மொழியாகும். தமிழ் மொழி பரவலாக தமிழ்நாடு, இலங்கை ஆகிய இடங்களில்தான் பேசப்படுகின்றது. தமிழ்நாடு, சிங்கப்பூர், புதுச்சேரி மற்றும் இலங்கை ஆகிய இடங்களில் தமிழ் ஆட்சி மொழியாக உள்ளது. அம்மா என்கின்ற வார்த்தையானது தமிழ் மொழியின் அழகியலை உணர்த்துகிறது. அ என்பது உயிரெழுத்தையும் ம் என்பது மெய் எழுத்தையும் மா என்பது உயிர்மெய் எழுத்தையும் குறிக்கின்றது. தமிழ்மொழியில் ஏறத்தாழ 22 வகை வழக்குத் தமிழ்கள் உள்ளன.

# வாரம் ஒரு சாதனையாளர்



## ஜோன் நேஷ்

நோபல் பரிசு பெற்ற இவர், கணிதத்திற்கு மிகப்பெரும் பங்காற்றியவர். இவர் கண்டுபிடித்த ஆட்டக் கோட்பாடு பொருளாதாரம், அரசியல், உயிரியல், கணினி அறிவியல் எனப் பல இடங்களிலும் பயன்படுகிறது. சைசோப்ரேனியா என்னும் மனநோயால் பாதிக்கப்பட்ட நேஷ், ஜோமெட்ரி, டிபரென்சியல் சமன்பாடு முதலியவற்றிற்கும் முன்னோடியாகத் திகழ்ந்தவர். தீவிர மனநோயால் பாதிக்கப்பட்ட இவர், கற்பனையாக சில விடயங்களை புனைந்துகொண்டு பயப்படுவார் என்று அவரது மனைவி கூறியுள்ளார். ஆனாலும் தனக்கு மிகவும் பிடித்த கணிதத்தை அவர் ஒருபோதும் ஒதுக்கவில்லை. கணிதத்தோடு வாழ்ந்ததால்தான் அவர் நீண்டகாலம் உயிரோடு இருந்தார் என அவருக்கு நெருக்கமானவர்கள் கூறுகின்றனர். 1994ஆம் ஆண்டு பொருளாதாரத்திற்கான நோபல் நினைவுப் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது.



# பனங்கற்கண்டு உண்பதால் உடலுக்கு என்ன நன்மை?

சித்த மருத்துவத்தில் தயாரிக்கப்படும் அனைத்து மருந்துகளிலும் முக்கியமாக சேர்க்கப்படும் ஒரு பொருள் என்றால் அது பனங்கற்கண்டாகும். கரும்பு மற்றும் பனைமரத்திலிருந்து தயாரிக்கப்படும் இந்த பனங்கற்கண்டில் விற்றமின்கள், தாதுக்கள் மற்றும் அமினோ அமிலங்கள் போன்றவை நிறைந்து காணப்படுகின்றன.

இதிலுள்ள சத்துகள் உங்களுக்கு ஏற்படும் ஆஸ்துமா, அனிமியா, மூச்சுப் பிரச்சினை, இருமல், சளி, இரத்த அழுத்தம் மற்றும் சிறுநீரகப் பிரச்சினை போன்றவற்றிற்கு நல்ல பலனைத் தரக்கூடியது.

**நன்மைகள்:** அந்தக் காலத்தில் வாழ்ந்த நம் முன்னோர் இந்த பனங்கற்கண்டை சளி மற்றும் இருமலுக்கு பயன்படுத்தினர். மேலும், இது தொண்டைக் கரகரப்பு, சளியை வெளியேற்றுதல் மற்றும் இருமல் குறைதல் போன்றவற்றை செய்கிறது. இதற்கு இதை நீங்கள் வாயில் போட்டு அந்த உமிழ்நீரை விழுங்கினால் போதும்.

வாயில் துர்நாற்றம் வீசுகிறதா? கொஞ்சம் சீரகம் மற்றும் பனங்கற்கண்டை வாயில் போட்டு மென்று சாப்பிட்டால் போதும். வாய் துர்நாற்றம் காணாமல் போகும்.

உங்களுக்கு எப்பொழுதும் சோர்வாக இருப்பது மாதிரி தோன்றுகிறதா? அதற்கு 1/2 டேபிள் ஸ்பூன் பசு மாட்டு நெய்யுடன் சிறிது பனங்கற்கண்டு மற்றும் சிறிது நிலக்கடலை சேர்த்து சாப்பிட்டால் போதும். மிகவும் சுறுசுறுப்பாக மாறிவிடுவீர்கள்.

தீராத சளிப் பிரச்சினையிருந்தால் அதற்கு 2 பாதாம் பருப்பு, 1 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு, 1/2 டேபிள் ஸ்பூன் மிளகுத்தூள் பொடி சேர்த்து, மிக்ஸியில் போட்டு பொடி பண்ணி, பாலுடன் கலந்து குடித்தால் போதும். சளிப் பிரச்சினை காணாமல் போகும்.

தொண்டை கட்டிக் கொண்டு பேச முடியாமல் கஷ்டப்படுகிறீர்களா? 1/2 டேபிள் ஸ்பூன் மிளகுத்தூள், 1/2 டேபிள் ஸ்பூன் நெய் மற்றும் 1/2 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிட்டால் தொண்டை வலி குணமாகும்.

சிறிது பனங்கற்கண்டு, பாதாம் பருப்பு மற்றும் சீரகம் சேர்த்து இரவில் படுப்பதற்கு முன்பு சாப்பிட்டு வந்தால் நினைவாற்றல் அதிகரிக்கும். மேலும், கண்பார்வை அதிகரிக்கும்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க இந்த பனங்கற்கண்டை பாதாம் மற்றும் மிளகுத்தூளுடன் சேர்த்து வாரத்திற்கு 2 முறை சாப்பிட்டால் போதும். எந்த நோயும் அண்டாது.

2 டேபிள் ஸ்பூன் வெங்காய ஜூஸ் மற்றும் 1 டேபிள் ஸ்பூன் பனங்கற்கண்டு சேர்த்து வாரத்திற்கு ஒரு முறை சாப்பிட்டால் சிறுநீரகக் கற்கள் பிரச்சினை சரியாகும்.

இந்த மருத்துவ குணம் வாய்ந்த கற்கண்டைப் பயன்படுத்தி நம் உடல் உபாதைகளிலிருந்து காப்பாற்றிக் கொள்ளலாம்.

கருவுற்ற பெண்கள் பனங்கற்கண்டு சாப்பிடுவதால் மலச்சிக்கல், வயிற்றுப்புண் முதலிய பிரச்சினைகளைக் குணப்படுத்துகிறது. இரத்த அழுத்தத்தை சீராக்குகிறது. டைபாய்ட், ஜுரம், நீர்க்கட்டு முதலிய வியாதிகளை போக்குகின்ற நல்ல மருந்தாகவும் இது செயற்படுகிறது. இருதய நோய் குணமாகும். இருதயம் வலுவடையும்

உடல் குளிர்ச்சியடைய உதவுகிறது. இத்தகைய அளப்பரிய நன்மைகளுள்ள பனங்கற்கண்டு ஒவ்வொரு இல்லத்திலும் இருக்க வேண்டும். இதை வெறும் வாயிலேயே போட்டு மென்று சாப்பிட்டால் உடல் சூடு குறையும் என்பது குறிப்பிடத்தக்கது.



# முகத்தில் உள்ள உரோமங்கள் நீங்க...

சிறிதளவு சர்க்கரையுடன், எலுமிச்சை சாறு மற்றும் தண்ணீர் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து, கலவையாக தயார் செய்து, முகத்தில் இருக்கும் உரோமங்கள் மீது தடவி 5 நிமிடம் மசாஜ் செய்யவும். பின்பு குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவ வேண்டும். வாரத்தில் இரண்டு முறை செய்து வந்தால் முகத்தில் வளரும் முடியின் வளர்ச்சியை தடுக்கலாம்.

மஞ்சள் தூள், சிறிதளவு உப்பு, எலுமிச்சை சாறு மற்றும் பால் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து முகத்தில் தடவி மசாஜ் செய்யவேண்டும். பின்பு முகத்தை நீரில் கழுவ வேண்டும். முகம் பளபளப்பாவதுடன், முகத்தில் இருக்கும் முடியும் உதிர்ந்து விடும்.

சிறிதளவு கடலை மாவு, தேவையான அளவு மஞ்சள் தூள் மற்றும் சிறிதளவு கடுகு எண்ணெய் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து, ஒரு பேஸ்ட் போல் தயாரித்து முகத்திலிருக்கும் ரோமங்களின் மீது தடவி சிறிது நேரம் கழித்து முகத்தை குளிர்ந்த நீரால் கழுவவேண்டும். முகத்திலிருக்கும் தேவையற்ற முடிகள் உதிர்ந்து விடும்.



# காரிகை களம்



# பெண்களின் அழகில் புதினம் செய்யும் புதினா

புதினா என்றாலே சாப்பிடும் பொருளாகத்தான் நம் நினைவுக்கு வரும். இது பல்வேறு ஆரோக்கிய நன்மைகளைக் கொண்டுள்ளது. குறிப்பாக, உங்கள் சரும ஆரோக்கியத்தில் புதினா ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது என்று உங்களுக்கு தெரியுமா? ஆம், புதினா அழகு சாதனப் பொருட்களிலும், தோல் பராமரிப்புப் பொருட்களிலும் முக்கிய பொருளாக சேர்க்கப்படுகிறது. முகம் கழுவுதல், மாய்ஸ்சரைசர்கள் மற்றும் லோஷன்கள் போன்ற தோல் பராமரிப்புத் தயாரிப்புகளை உற்பத்தி செய்யும்போது புதினா இலை ஒரு முக்கிய அங்கமாக பயன்படுத்தப்படுகின்றது. இது சித்த மருத்துவத்திலும், ஆயுர்வேதத்திலும் பயன்படுத்தப் படுகிறது.



புதினா இலைகளில் ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. அவை சரும ஆரோக்கியத்தை பராமரிக்க பயனுள்ளதாக இருக்கும். புதினா இலைகளின் வலுவான கிருமி எதிர்ப்புப் பண்புகள் ஒரு சிறந்த கிளென்சர், டோனர் மற்றும் மாய்ஸ்சரைசராக வேலை செய்கின்றன. உங்கள் தோல் பராமரிப்பு வழக்கத்தில் புதினா இலைகளைச் சேர்ப்பதால் சில அறியப்படாத நன்மைகள் பற்றித் தெரிந்துகொள்ளலாம்.

### முகப்பருவை போக்கும்

புதினா இலைகளில் சாலிசிலிக் அமிலம் மற்றும் விற்றமின் ஏ என்பன நிறைந்துள்ளன. இது சருமத்தில் சரும எண்ணெய் சுரப்பதைக் கட்டுப்படுத்துகிறது. எண்ணெய் சருமம் உள்ளவர்களுக்கு முகப் பரு வெடிப்பு ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. புதினா இலைகளிலுள்ள கிருமி எதிர்ப்பு மற்றும் பூஞ்சை எதிர்ப்புப் பண்புகள் வீக்கத்தைத் தடுப்பதுடன், முகப்பருவையும் குணப்படுத்துகின்றன. நீங்கள் செய்யவேண்டியது புதினா இலைகளை முகப் பருவில் தடவி, அது காய்ந்து போகும் வரை 15 நிமிடங்கள் விடவும். இது முகப்பரு தழும்புகளை நீக்கி, சருமத்தின் துளைகளை சுத்தம் செய்யும்.

### கரு வளையங்களைக் குறைக்க

புதினா இலைகளில் உள்ள என்டி-ஒக்ஸிடென்ட்கள் கண்களுக்குக் கீழேயுள்ள கருமையைக் குறைக்க நன்றாக வேலை செய்கின்றன. இது மிகவும் எளிமையான செயல்முறையாகும். ஏனென்றால், நீங்கள் செய்யவேண்டியது புதினா இலை பேஸ்ட்டை கண்ணைச் சுற்றியுள்ள கறுப்பு வளையங்களில் தடவி ஒரே இரவில் இருக்க விடுங்கள். இது கண்களுக்குக் கீழேயுள்ள சரும நிறத்தைக் குறைத்து, கரும்புள்ளிகளின் தோற்றத்தைக் குறைக்கும்.

### காயங்களுக்கு மருந்தாகும்

புதினா இலைகளிலுள்ள வலுவான அழற்சி எதிர்ப்புப் பண்புகள் வெட்டுக்கள், காயங்கள், கொசுக்கள் கடித்தல் மற்றும் தோல் அரிப்புகளைக் குணப்படுத்த உதவுகின்றன. நீங்கள் புதினா இலை சாற்றை பிரித்தெடுத்து தோலின் பாதிக்கப்பட்ட பகுதியில் தடவவேண்டும். இது காயங்களை குணப்படுத்த உதவுவதோடு, சருமத்தில் எரிச்சல் மற்றும் எரியும் உணர்வையும் ஆற்றும்.

### அழுக்குகளை போக்குகிறது

சருமத்தில் துளைகளில் அடைத்துக்கொண்டிருக்கும் அழுக்குகளைப் போக்குகிறது. கிருமிகள் பரவுவதைத் தடுத்து பருக்கள் வருவதைக் குறைத்து விரைவில் ஆற்றுகிறது. வீக்கத்தைக் குறைத்து, வடுக்களைப் போக்குகிறது. எனவே, உங்கள் மேனியை புதினா பளபளப்பாக்குகிறது. கிருமிகள் வளர்வதைத் தடுத்து மீண்டும் பருக்கள் வருவதைத் தடுக்கிறது. உங்கள் சருமத்தை மென்மையாக, மிருதுவாக மாற்றுகிறது.

### நிறத்தை பிரகாசமாக்குகிறது

புதினா இலைகளில் செப்டிக் எதிர்ப்புப் பண்புகள் நிறைந்துள்ளன. இது மாசுபடுவதைத் தொடர்ந்து வெளிப்படுத்தினாலும் தோலில் புள்ளிகள் மற்றும் தடிப்புகள் ஏற்படுவதைத் தடுக்கிறது. இது நேரடி சூரிய ஒளியால் நீண்ட காலத்திற்கு சருமத்திற்கு ஏற்படும் சேதத்தையும் குறைக்கிறது. குறைபாடற்ற மற்றும் ஒளிரும் தோற்றத்திற்கு புதினா இலை சாற்றை உங்கள் மந்தமான தோலில் தடவவும். பயனுள்ள முடிவுகளுக்கு மாதத்திற்கு ஒரு முறை இவ்வாறு செய்யவும்.



# மல்லிகைப் பூவின் மருத்துவ குணங்கள்

மல்லிகைப் பூவைக் கொதிக்கவைத்து தேன் அல்லது பனங்கற்கண்டு கலந்து குடித்துவர சிறுநீரகப் பிரச்சினை, வயிற்று கோளாறுகளை சரிசெய்ய உதவும். அஜீரணப் பிரச்சினைகள் இருக்காது. வயிற்றில் புழுக்கள் இருந்தாலும் அதை அழித்துவிடும்.

நரம்புத்தளர்ச்சியுள்ளவர்கள் மல்லிகைப்பூவைக் காயவைத்து பொடியாக்கி தேனில் குழைத்து இரு ஸ்பூன்கள் சாப்பிட குணமாகும்.

பெண்களுக்கு கருப்பைப் பிரச்னைகள் தீரவும், கருப்பை வலுபெறவும் மல்லிகைப் பொடியை தேனில் குழைத்து சாப்பிடலாம். மாதவிடாய் சீராக வருவதற்கும் மல்லிகைப் பூ உதவும்.

மல்லிகைப்பூக்களை சாப்பிடுவதால் நோய் எதிர்ப்பு சக்தி, சளி, மூக்கடைப்பு, மூச்சுத்திணறல், போன்ற பிரச்சினைகளும் வராதாம்.

மல்லிகை எண்ணெய்யின் மணம் மனஅழுத்தத்தைக் குறைக்க உதவுமாம். ஆழ்ந்த உறக்கத்தையும் வரவழைக்கும். எனவே, தூங்கும் முன் கொஞ்சம் கைகளிலோ அல்லது மல்லிகை எண்ணெய் விளக்கு ஏற்றி வைத்து அந்த வாசனையை வீடு முழுவதும் பரப்பினால் நன்மைகள் கிடைக்கும்.

பால் கொடுக்கும் தாய்மாருக்கு தாய்ப்பால் கட்டிக் கொண்டால் மல்லிகைப் பூவை அரைத்து அதை மார்பகங்களில் பத்து போட்டால் உடனே பால் கரைந்து வெளியேறிவிடும்.



# செட்டிநாடு ஸ்டைல் பெப்பர் காளான்

**தமிழ்நாட்டில் செட்டிநாடு ரெசிபிக்கள் மிகவும் தனித்துவமான சுவையுடன் சற்றுக் காரமாக இருக்கும். இதற்குக் காரணம் அதில் சேர்க்கப்படும் மசாலாக்கள் தான். உங்களுக்கு செட்டிநாடு ரெசிபிக்கள் பிடிக்குமா? செட்டிநாடு ரெசிபிக்களை வீட்டில் செய்ய விரும்புகிறீர்களா? அதுவும் சப்பாத்திக்குப் பொருத்தமான செட்டிநாடு ரெசிபி எதுவாக இருக்கும் என்று யோசிக்கிறீர்களா? அப்படியானால் அதற்கு செட்டிநாடு ஸ்டைல் பெப்பர் காளான் சரியான தேர்வாக இருக்கும். இந்த ரெசிபி சப்பாத்திக்கு மட்டுமின்றி, மதிய வேளையில் சாதத்துடன் சேர்த்து சாப்பிடுவதற்கும் அட்டகாசமாக இருக்கும்.**

### தேவையான பொருட்கள்:

- ★ பட்டன் காளான் - 1 கப்
- ★ தக்காளி - 1
- ★ பச்சை மிளகாய் - 1
- ★ பிரியாணி இலை - 1
- ★ சோம்பு - 1/2 தேக்கரண்டி
- ★ கறிவேப்பிலை - சிறிது
- ★ கொத்தமல்லி - சிறிது
- ★ எண்ணெய் - 2 மேசைக்கரண்டி
- ★ உப்பு - சுவைக்கேற்ப

வறுத்து அரைப்பதற்கு

- ★ துருவிய தேங்காய் - 4 தேக்கரண்டி
- ★ மல்லி - 1 மேசைக்கரண்டி
- ★ மிளகு - 1 தேக்கரண்டி
- ★ சீரகம் - 1 தேக்கரண்டி
- ★ கசகசா - 1 தேக்கரண்டி
- ★ சோம்பு - 1 தேக்கரண்டி
- ★ பட்டை - 1 துண்டு
- ★ கிராம்பு - 4
- ★ வரமிளகாய் - 3
- ★ உளுத்தம் பருப்பு - 2 தேக்கரண்டி

மசாலாவிற்கு

- ★ சின்ன வெங்காயம் - 10
- ★ பூண்டு - 5 பல்
- ★ இஞ்சி - 2 இன்ச்
- ★ கறிவேப்பிலை - சிறிது
- ★ மஞ்சள் தூள் - 1/2 தேக்கரண்டி



### செய்முறை:

முதலில் வறுத்து அரைப்பதற்கு கொடுத்துள்ள பொருட்களை ஒரு வாணலியில் போட்டு வறுத்து இறக்கி குளிர வைத்து, மிக்ஸியில் போட்டு நன்கு அரைத்துக்கொள்ள வேண்டும். பின் மசாலாவிற்கு கொடுத்துள்ள பொருட்களை மிக்ஸியில் போட்டு நன்கு அரைத்து தனியாக வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி சூடானதும், பிரியாணி இலை, சோம்பு மற்றும் கறிவேப்பிலை சேர்த்து தாளிக்கவேண்டும். பிறகு தக்காளி மற்றும் பச்சை மிளகாயைப் போட்டு, 5 நிமிடம் நன்கு வதக்க வேண்டும். பின் அரைத்து வைத்துள்ள வெங்காய மசாலாவை சேர்த்து நன்கு பச்சை வாசனை போக வதக்கவேண்டும். அடுத்து வறுத்து பொடி செய்து வைத்துள்ளதை சேர்த்து, சுவைக்கேற்ப உப்பு மற்றும் சிறிது நீர் சேர்த்து நன்கு பத்து நிமிடம் பச்சை வாசனை போக கொதிக்க வைக்க வேண்டும். பின்பு சுத்தம் செய்து நறுக்கி வைத்துள்ள காளானை சேர்த்துக் கிளறி, மூடி வைத்து காளானை வேக வைக்கவேண்டும். காளான் நன்கு வெந்ததும், அடுப்பை அணைத்துவிட்டு, மேலே கொத்தமல்லியைத் தூவினால், சுவையான செட்டிநாடு ஸ்டைல் பெப்பர் காளான் தயார்.

# மனிதனற்ற வெளி...



களைகொல்லிகள்
கிருமி கொல்லுமென பயந்ததால்
மாடு, ஆடுகளின் மந்தைவெளி
செழித்திருக்கிறது

அள்ளி இறைத்தவன் அடுப்பூதுகிறான்
வட்டைப் பூவல்களில் தண்ணீர்ப்பஞ்சம்
தலைதூக்காததால் தவளைகளின்
மாநாடு தடையின்றி நடக்கிறது

கோடாலிகள் கூட்டுக்குள்
காட்டு விலங்குகளின்
பேரடவி மழை பூத்தபடி
மலர்ந்து கிடக்கிறது

வேடனற்ற வெளியில்
மானும் முயலும் மறித்து
விளையாடுகின்றன

புகைபிடித்து புகைந்து கொண்டிருந்த
சாலையோரத்து நிழல் மரங்கள்
இலை கொட்டி துளிர்த்து
சடைத்து வளர்ந்து நிற்கின்றன

தொறட்டிகள் எலிக்கூண்டுகளில்
அணில்களின் கனிப்பொறியில்
இனித்து பழுத்து விழும்
தேன் சுளைகள்

தூண்டில் போட்டவன் கூண்டில்
இரையாக்க இரை போடுபவர்கள்
இரை தேடித் தவிக்க
மீன்கள் ஆறு, குளம்
துள்ளி விளையாடி

கடலுடன் கை குலுக்கியபடி
தெளிந்து கிடக்கிறது....

எனதருமைப் பறவைகளே
இது உங்களின் வானம்
சிறகுகள் சுமையில்லைதானே?
எத்தூரம் வேண்டுமோ
போய் வாருங்கள்

வேடர்கள் விடுப்பில்
புறாக்களே புறப்படுங்கள்
இது உங்களுக்குமான உலகம்

கட்டாரிலிருந்து...
-ரோஷான் ஏ.ஜிப்ரி -

# நிர்வாக அராஜகங்கள்

பிணியின் பிணக்குகளான
பிரபஞ்சமே திணறும் தருணத்தில்
தரம் கெட்ட நிர்வாகங்களால்
மலையக பந்த நிலை
நொந்த நிலையாய் மாறி
நிர்க்கதியாய் நிலை குழைகிறது!

துணைவர்களின் களம் தந்தும்
கனையற்ற தொடர் குறிகளால்
மனம் சலித்த குதூகலங்களால்
குணம் விட்டு அடுக்கியதே
குரோத நிலைகளை

அச்சமற்ற நிர்வாகிகள்
அரக்கத்தன செயல்களினால்
உச்சம் பெற்று வளர்கிறதே
இரக்கமற்ற அடாவடித்தனம்!

காக்கி சட்டை போட்டவர்களின் முன்
சேட்டை வட்ட நடத்தையினால்
மலையகம் தாட்டிக மின்றி
மடிந் தொடிந்து போகிறது தமிழினம்

சலிப்புத் தனம் வரப்பு மீறி
நிலையற்ற வழிந்தோடிகளால்
தகர்த்தப் படனுமே
துயர் கலந்த பிம்பங்களை

சட்டங்களும் நிலை பெறனும்
சான்றிதழில் பதிவிடனும்
காரமான வழிப் போக்கர்களினால்
உற்றுழி காலம் மறைந்து
நற்றம் பொழிய வேண்டும்
மலையகமெங்கும் !

கலாபூஷணம்
மாதம்பை கதிர்



# என்னவளே நீ வேண்டும்



ஏன் என்னை கொல்கிறாய்
இவ்வுலகில் என்னவளே
இத்தனையாம் மௌனத்தால்
வேதனையோ வேண்டாமென்று
தனிமையிலே உயிர் துறக்க
காதலதின் பாதையதை
வாழ்வினிலே மறைத்து வைத்தேன்

பக்க வேரின்றி வாழ்ந்திடவே
அகிலத்தில் முடிவு செய்தேன்
அத்தனையும் மாற்றிவிட்டாய்
காதலெனும் வடிவிலே
முடிசூடா ராணியாய்
என்னுள்ளே வந்தவளே
கூறிவிடு என்னிடமே
உன் மௌனத்தின் காரணத்தை

வேண்டாத தெய்வமில்லை
போகாத கோவில் இல்லை
பார்க்காத குருக்கள் இல்லை
ஏறாத மலைப் படிகள் இல்லை
அத்தனையும் சுத்தி வந்தேன்
உன்னை மட்டும் அணைத்திடவே

மரணத்தின் விளிம்பில் தவிக்கிறேன்
மாயையின் உலகில் வசிக்கிறேன்
கவலையின் கண்ணீரைக்
குடிக்கிறேன்
என் மாமிசத்தை நானே உண்கிறேன்
பித்துப்பிடித்தவனாய் அலைகிறேன்
பிறந்ததை எண்ணி கலங்கிறேன்

உன் வார்த்தைகள் இன்றி
இவ்வுலகில் எனக்கு வாழ்வுதான்
ஏதடி
என் வலிகள் வரிகளில் ஊசலாடி
உன்னை என்னிடம் சேர்த்திடுமோ
சேனைகளின் தலைவனாக
உன்னை மார்பிலே நான்
சுமந்திடவே
என்னவளே நீ வேண்டும்....

வன்னித் தமிழ் மறவன்
இந்திராபுரம், பளை.

## தூறல்கள்

# மனிதன் மாறிவிட்டான்



அந்தக் காலத்தில்
குடிசை வீடுகள்
வாசலில் திண்ணைகள்
வசதி வாய்ப்புகள் இல்லை
இதயங்கள் திறந்தே இருந்தன
இரக்க சிந்தனை மேலோங்கி
இருந்தன
எல்லோரும் இன்புற்று வாழும்
தர்ம சிந்தனை வளர்ந்திருந்தன

இன்றோ..
மாடி வீடுகள்
வானுயரக் கட்டிடங்கள்
வசதியான வாழ்க்கை
வசதியான மனிதர்கள்
வாசலில் சி.சி.ரி.வி. கெமராக்கள்
பூட்டிய இரும்புக் கேற்றுக்குள்
இதயங்கள் கல்லாய்
இருக்கின்றன
தான் மட்டும் வாழவேண்டும்
என்ற எண்ணமே விரிகிறது!

செ.துஜியந்தன்



# பாசமொன்றே அர்ப்பணம்

அன்னையின் பாசம்.
அதுக்கில்லையடி வேஷம்.
காரிருள் அவளது கேசம்.
கண்டு ஆவேனே சந்தோஷம்.

அகராதியோ அவளது பாஷை.
அதை கேட்கவே பேராசை.
புணரும் கண்களின் பேச்சை.
உணர்ந்து ஆவேனே மூர்ச்சை.

என் தாயே !

உலகிலே நிறையுது தாசு.
உனதன்பில் இல்லையே மாசு.
நிகரில்லையே உனக்கு காசு.
நினைவாய் நிதம் என்னுள் வீசு.

சஹீகா சாஜஹான்
மருதமுனை

# ஏ(கோ)மாளி கிளை

புதிய காற்று
புதிய திசை
புதிய உறவு
பிடித்து போனதால்
பழைய கிளை
வெறுத்துப் போனது
அந்த பறவைக்கு

கிளை அசைந்தாலும்
கிறுக்கன் என்றது
மெல்ல உதைந்து
உதைந்து
கிளையை உடைக்க
நினைக்கிறது அந்த
பறவை

அதற்கு புதிய பாதை
புதிய பயணம்
பிடித்துவிட்டதால்
பழைய கிளை அதற்கு
பரதேசியாய் தெரிகிறது

அது கிளைக்கு ஒன்றும்
புதியவையல்ல
எத்தனையோ பறவைகள்
மிச்சங்களாய்
எச்சங்களை வைத்து
விட்டு
பறந்து சென்றிருக்கிறது
அந்த கிளைக்கு
இறைவன் கொடுத்த வரம்
அது

அமரும் வரைக்கும்
அன்பை காட்டி விட்டு
விட்டு செல்லும் போது
மட்டும்
அலகுகளால்
காயப்படுத்தி விட்டு
சென்று விடுகிறது

கிளை முழுதும்
காயத் தழும்புகள்
தவம் கிடந்தாலும்
இன்னொரு பறவை
வந்தாலும்
இடம் கொடுத்து
இன்னொரு
காயம் வாங்க
காத்து கிடக்கிறது
ஏ(கோ)மாளி கிளை

ஸாலிஹ் அஸீம்
புத்தளம்

# உன்னிலே என் விழிகளடி..



விடியல் நோக்கி நிலவு ஓடும்
நிலவை நோக்கி என் கனவு நாடும்
அதில் என்றும் உன்னை தேடும்
சுதந்திரமாம் தூக்கத்தை
சுகமாக கொடுத்திடுமே என்
கனவினிலும் உன் அழகு
என் நினைவினிலும் உன் சிரிப்பு

பிரம்ம படைப்பினிலே எனக்கென
படைத்தானோ என் உயிரே உன்னை
பூலோகம் சுற்றிவிட்டேன்
ஏதுமில்லை
கூறிவிட உன் பேரழகிற்கு
ஈடென்றுவிட

எப்படி நான் வர்ணிப்பேன்
எதைக்கொண்டு வர்ணிப்பேன்
அத்தனையும் தோற்றுவிடும்
உன் முன்னே போட்டி இட்டால்

ஏடெடுத்து படித்ததில்லை
எவர் குருவும் எனக்கிருந்ததில்லை
உனை பாத்தவுடன் கொட்டுகிறேன்
என் தாய் மொழியாம்
தமிழ் மொழியில் வரிகளை
கவிகளென எண்ணி நானும்

இந்த வேடிக்கை உலகினிலே
பல வேஷங்கள் போட்டுவிட்டாய்
கோமாளி ஆடை போட்டு எனை
நடுத் தெருவில் தவிக்க விட்டாய்
நா வறண்டு தவிக்கிறேன் உனை
எண்ணி மனம் நொந்து அழுகிறேன்

எல்லாம் பொய்யென தெரிந்தும்
என் பாதம் உனை நோக்கி நகருதடி
எனை அறியாமல் விழியில்லா
குழியனிலே நீர் கசிந்து வருகுதடி
சிலை போலே என் முன்னே
என் தேவதையே நீ நிற்கிறாய்
எனைப் பார்த்து சிரித்தபடி உன்
காதலனை தழுவுறாய்

உனைக் கண்ட என் கண்கள்
இனி எதைத்தேடி நகர்ந்திடுமோ
உன் இதயத்தில் நான் இல்லை
உன் அருகிலும் நான் இன்றில்லை
என் காதலுக்கு பதில் கூற
மறுத்ததென்ன
நீ இதுவரை அறியாமல் நான்
கொடுத்த
தானமாக என் விழிகள் உன்னில்
இருப்பதாலோ......

வன்னித் தமிழ் மறவன்
கிளிநொச்சி...

# சாலையோரங்களில் செவ்வரளிச் செடிகளை நாட்டி வைப்பது ஏன்?



நெடுஞ்சாலைகளில் ஆயிரக்கணக்கில் வாகனங்கள் வந்து செல்கின்றன. இந்த வாகனங்களிலிருந்து வெளிவரும் புகைகளில் கார்பன் நச்சுகள் அதிகமாக இருக்கும். இந்த நச்சுவாயு, காற்றை அசுத்தமாக்குவதுடன், சாலையில் பயணிப்போருக்கு சுவாசக் கோளாறுகளையும் ஏற்படுத்தும்.

அதனால்தான் இந்த நச்சுக்காற்றை கட்டுப்படுத்த செவ்வரளிச் செடிகள் வளர்க்கப்படுகின்றன. செவ்வரளிச் செடியில் உள்ள இலைகள் மற்றும் மலர்கள் கார்பன் துகள்களை காற்றிலிருந்து நீக்கி, காற்றிலுள்ள மாசுக்களை அகற்றி, தூய காற்றாக மாற்றும் தன்மை கொண்டவை. இதனால், நெடுஞ்சாலைகளில் பயணிக்கும்போது தூய்மையான காற்றை சுவாசிக்க முடியும். அதனால்தான் நெடுஞ்சாலையின் நடுவே உள்ள தடுப்புகளில் செவ்வரளிச் செடிகள் அதிகமான அளவில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

மேலும், இவை வறட்சியையும், மண்ணரிப்பையும் தாங்கும் தன்மை கொண்டவை. மேலும், வாகனங்கள் தரும் இரைச்சலையும் குறைத்து, சத்தத்தைக் குறைக்கும் ஆற்றல் படைத்தவை. எதிர்ப்புறம் உள்ள சாலைகளில் வரும் வாகனங்களின் முகப்பு விளக்குகள் எதிர்வரும் வாகன ஓட்டிகளின் மீது படாமலும் இவை தடுக்கின்றன. அந்த அளவுக்கு இவற்றின் இலைகள் அடர்த்தி மிக்கவை. மேலும், இவற்றைப் பராமரிக்கும் செலவுகளும் குறைவாகத்தான் இருக்கும்.

விலங்குகள் இயற்கையாகவே இத்தாவரத்தின் இலைகளை உண்ணாது என்பது இயற்கையின் விதி. அதனால், விலங்குகள் பாதிப்பிலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம்.


அழகோடு சேர்த்து இத்தனை வசதிகளும் இருப்பதால்தான் நிறைய நெடுஞ்சாலைகளில் இச்செடியைக் காணமுடிகிறது. நெடுஞ்சாலைகளில் வைக்கப்படும் செவ்வரளிச் செடிகள் மழை அதிகமான காலங்களில் செழித்து வளரக்கூடியவை.

இச்செடியை சரிவர பாதுகாத்து வருவதும் அவசியமாகும். ஒரே அளவில் இவை வளர்ந்திருக்க வேண்டும். அதிகமாக வளர்ந்தால் மக்கள் சாலையைக் கடக்கும்போது விபத்துகள் நேரலாம். அதனால்தான் சாலையின் நடுவில் செவ்வரளிச் செடிகள் குறைந்த அளவு உயரமாக வளர்க்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

# உலகின் மிக ஆழமான நீச்சல் குளம்



உலகின் மிக ஆழமான, பிரம்மாண்டமான நீச்சல் குளம் தற்போது டுபாய் நகரிலிருப்பதாக அறிய முடிகின்றது. டுபாயில் நூலகம், அடுக்குமாடிக் கட்டடங்கள், மிகப்பெரிய தூண்கள் என இவை அத்தனையையும் நீருக்கடியில் வடிவமைத்து, மிகவும் பிரம்மாண்ட நீச்சல் குளத்தைக் கட்டி டுபாயில் உலக சாதனையைப் படைத்துள்ளனர்.



60 மீற்றர் ஆழத்துக்கு இந்த நீச்சல் குளத்தை உருவாக்கியுள்ளனர். இந்த நீச்சல் குளம் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது.

ஆழ்கடலுக்குள் நீச்சலுக்குச் செல்லும் நிபுணர்கள், இந்த நீச்சல் குளத்தில் புதுவித அனுபவத்தைப் பெறுவதாகக் கூறுகின்றனர். நீந்தியபடியே சென்று, நீருக்குள் கட்டப்பட்ட கட்டடங்கள், நூலகத்தைப் பார்வையிட்டு ரசிக்கலாம். ஒலிம்பிக் போட்டிக்கான நீச்சல் குளத்தை விட ஆறு மடங்கு பெரிய அளவில் இந்த நீச்சல் குளத்தை உருவாக்கியுள்ளனர்.

தற்போது ஆழ்கடலுக்குள் செல்லும் பயிற்சி பெற்ற நபர்களை மட்டுமே இந்த நீச்சல் குளத்திற்குள் அனுமதிக்கின்றனர். ஜூலை மாத இறுதிக்குள், இந்த பிரம்மாண்டமான நீச்சல் குளத்தில் பொதுமக்களும் அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீதி சமிக்ஞை இல்லாத நாடு பூட்டான்



பூட்டானில் போக்குவரத்து தொடர்பான அனைத்து சமிக்ஞைகளும் போக்குவரத்து பொலிஸாராலேயே வழங்கப்படுகின்றன.

ஒரு நாட்டில் போக்குவரத்து அதிகம் இருந்தால் தானே மின்னணு விளக்குகள் மூலம் சமிக்ஞைகளை வழங்கவேண்டும்?

ஆனால், பூட்டானில் சமிக்ஞைகளை ஏற்படுத்தும் அளவுக்கு போக்குவரத்து அதிகளவில் இல்லை. அதனால் பூட்டானில் போக்குவரத்து சமிக்ஞைகளும் இல்லை.

90களில் அங்கு சமிக்ஞைகள் ஏற்படுத்தப்பட்டன. எனினும், மக்களின் கோரிக்கையை ஏற்று அவற்றை நீக்கிவிட்டனர்.






# வட கொரியாவின் விசித்திரமான சட்டங்கள்

**3 டிவி அலைவரிசைகள் மட்டுமே!**

வட கொரியாவில் வெறும் 3 தொலைக்காட்சி அலைவரிசைகள் மட்டுமே ஒளிபரப்பப்படுகின்றன. இந்த 3 அலைவரிசைகளிலும் ஒளிபரப்பாகக்கூடிய அனைத்து நிகழ்ச்சிகளையும் அந்நாட்டின் அரசாங்கமே கட்டுப்படுத்துகிறது!

**சிகை அலங்காரங்கள்**

வட கொரியாவில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட 28 சிகை அலங்காரங்களுக்கு (Hairstyles) மட்டுமே அனுமதியுண்டு. இதைத் தவிர மற்ற சிகை அலங்காரங்கள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளன!

**வடகொரிய தலைநகர்**

வடகொரிய அரசால் அனுமதிக்கப்பட்டவர்கள் மட்டுமே அந்நாட்டின் தலைநகரமான Pyongyang இல் வசிக்க முடியும். சாதாரண வடகொரியர்களுக்கு அங்கு வசிக்க அனுமதியில்லை. எனவே, பெரும் செல்வாக்கு படைத்த முக்கியமான வட கொரியர்கள் மட்டுமே இந்த நகரில் வசிக்கிறார்கள்!

**பைபிள் தடை!**

வடகொரியாவில் பைபிள் தடைசெய்யப்பட்ட நூலாகும். மேற்கத்திய கலாசாரம் வட கொரியாவில் பரவக்கூடாது என்பதற்காக பைபிளை அந்நாட்டின் அரசு தடைசெய்துள்ளது. ஒருமுறை பைபிளை மக்களிடம் விநியோகித்த கிறிஸ்தவப் பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார்!



**திரைப்படங்கள் - பாடல்கள்**

மற்ற வெளிநாடுகளில் வெளிவந்த திரைப்படங்களைப் பார்ப்பதும், இசை, பாடல்களைக் கேட்பதும் வடகொரியாவில் தடைசெய்யப்பட்ட செயலாகும்.

**கல்வியறிவு**

வடகொரியாவிலுள்ள 100 சதவீத மக்களும் கல்வியறிவு பெற்றவர்கள் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**வடகொரியாவின் இராணுவ பலம்**

வட கொரிய அரசு மூன்றில் ஒரு பங்கு வருவாயை இராணுவத்தின் வளர்ச்சிக்காகவே பயன்படுத்துகிறது. இதன்மூலம் இந்த நாடு இராணுவத்துக்கு எந்த அளவுக்கு முக்கியம் கொடுக்கிறது என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது!

**ஆடைக் கட்டுப்பாடு**

ஜீன்ஸ் - பேண்ட்கள் வடகொரியாவில் தடைசெய்யப்பட்டுள்ளன. பெண்கள் நீச்சல் உடை அணிவது மிகப்பெரிய குற்றமாகும். எந்த அரைகுறையான ஆடைகளுக்கும் வடகொரியாவில் அனுமதியில்லை!

**மோட்டார் வாகனங்கள்**

சாதாரண வட கொரியர்களுக்கு மோட்டார் சைக்கிள், கார் போன்ற மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்த அனுமதியில்லை. அரசு அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் மட்டுமே மோட்டார் வாகனங்களை வடகொரியாவில் பயன்படுத்துகிறார்கள்.

**செல்லப்பிராணிகளுக்கு தடை!**

நமது நாட்டில் பலரது வீடுகளிலும் நாய்கள், பூனைகள் என்று செல்லப் பிராணிகளை வளர்ப்பது சாதாரணமான விடயம்தான். ஆனால், வட கொரியாவில் செல்லப்பிராணிகள் என்ற பேச்சுக்கே இடமில்லை! விலங்குகளை செல்லப்பிராணிகளாக வீட்டில் வளர்ப்பதென்பது வடகொரியாவில் முற்றிலும் தடைசெய்யப்பட்ட செயலாகும்.

**சமூக வலைத்தளங்களுக்குத் தடை!**

நம் நாட்டில் இன்று சுட்டிக் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை பலரும் பேஸ்புக், வட்ஸ் அப் உள்ளிட்ட சமூக வலைதளங்களைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால், வடகொரியாவில் எந்தவிதமான சமூக வலைத்தளங்களும் கிடையாது.




**காதலில் தோல்வியடைந்தவர்களுக்கு குறும்பனின் ஆலோசனை என்ன?**

பிருந்தகன் - வாழைச்சேனை

வடை போச்சே என்று யோசிக்கிறதை விட

வடையோட போச்சே என்று நினைப்பதுதான் புத்திசாலித்தனம்.

**வாய்ப்புண் குணமாக என்ன செய்யலாம்?**

எம்.எஸ்.இஸ்மைல் - தெஹியோவிட்ட

வாயில் புண் இருந்தால் வயிற்றிலும் இருக்கலாம். இதற்கு தினமும் காலை மற்றும் மாலையில் தேங்காய்ப்பாலுடன் சிறிது தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் புண் குணமாகும்.

**பேஸ்புக்கில் மூழ்கிக் கிடப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

சுரேஷ்குமார்- பாதுக்க



என்னதான் சொல்வது? ஒன்றை மட்டும் சொல்கிறேன்.

மது விற்பனை செய்பவன் ஒருபோதும் அதை அருந்துவதில்லை.

**தங்களது காரியத்தை செய்துகொள்வதற்காக பழகுபவர்களைப் பற்றி என்ன சொல்வீர்கள்?**

கனகராஜ் - மாவனெல்ல



ரயில் போனால்தான் தண்டவாளம் தெரியும் - அதேபோல்

சிலருடன் பழகிப் பார்த்தால்தான் அவரவர் வண்டவாளம் தெரியும்.

### சுய ஒழுக்கம்..!

தொடர்ச்சியாக இரண்டு முறை யாரையும் தொலைபேசியில் அழைக்காதீர்கள். அவர்கள் முக்கிய வேலையாக இருக்கலாம் அல்லது பேச முடியாத சூழ்நிலையில் இருக்கலாம்.

திருப்பித் தருகிறேன் என்று உங்களிடம் பணம் கடனாக கேட்பவரிடம் மனப்பூர்வமாக கேட்டுக்கொடுங்கள். இது திரும்ப வருமா, வராதா என யோசிக்காதீர்கள். இது நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதை அவர்களுக்கு உணரவைக்கும்.

ஹோட்டலில் சாப்பிடலாம் என நண்பர் உட்பட யார் அழைத்தாலும், அதிக விலையுள்ள உணவுகள் எதையும் ஓடர் செய்யாதீர்கள். அழைத்தவரையே உங்கள் விருப்பப்படி ஓடர் செய்யுங்கள் என சொல்லிவிடுங்கள்.

தர்மசங்கடமான இதுபோன்ற கேள்விகளைத் தவிர்க்கலாம்.

இன்னும் கல்யாணம் ஆகவில்லையா?

குழந்தைகள் இல்லையா?

இன்னும் சொந்தவீடு வாங்கவில்லையா?

ஏன் இன்னும் கார் வாங்கவில்லை?

இது நமது பிரச்சினை இல்லைதானே!

நண்பருடன் வாடகை வாகனங்களில் சென்றால் இம்முறை இயலாவிட்டால் அடுத்தமுறை நீங்கள் பணம் கொடுத்துவிடுங்கள்.

மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளியுங்கள். மோசமாக இருந்தாலும், பரிசீலனையில் வைத்திருக்கலாம்.

அடுத்தவர்கள் பேசும்போது இடைமறிக்காதீர்கள். அவர்கள் கொட்டட்டும். இறுதியில் அவர்களுக்கே நல்லது தெரிந்துவிடும்.

நீங்கள் கிண்டலடிப்பதை சம்பந்தப்பட்டவர் விரும்பவில்லை என்றால், மீண்டும் அதைச் செய்துவிடாதீர்கள். அவரை உற்சாகப்படுத்துங்கள். உங்கள் மதிப்பை அது மேம்படுத்தும்.

யார் உதவினாலும் பாரபட்சமின்றி நன்றி சொல்லுங்கள்.

உடல்பருமனை ஒருபோதும் கிண்டலடிக்காதீர்கள். "நீங்கள் பார்க்க ஸ்மார்ட்டாக இருக்கீங்க" என்று கூறுங்கள்.

உடல் எடையைக் குறைக்க அவராக கேட்டால் ஒழிய நாம் அறிவுரை வழங்கக் கூடாது.

யாராவது அவர்கள் படத்தைக் காட்ட கைபேசியைக் கொடுத்தால் அவர்களது கேலரியிலுள்ள படங்களை இடது வலதாக தள்ளிப் பார்க்காதீர்கள். அடுத்து என்ன இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியாது.

யாரும் தனக்கு Doctor appointment இருக்கிறது, போகவேண்டும் என்றால், உடனே என்ன நோய்க்கு என்று கேட்டுவிடாதீர்கள். அவர்களின் தனிப்பட்ட நோய்கள் பற்றி மற்றவர்களுக்கு தெரியக்கூடாது என்று கருதலாம். விரைவில் நலமடைவீர்கள் என்று நம்புகிறேன் என்று கூறலாம்.

நண்பர்களிடமோ யாரிடமோ நேரில் சந்தித்துப் பேசும்போது கைபேசியை பயன்படுத்திக்கொண்டு இருக்காதீர்கள்.

கேட்டால் தவிர அறிவுரை வழங்காதீர்கள்.

நீண்ட நாட்கள் கழித்து யாரையும் சந்தித்தால், அவர்களின் சம்பளம், வயது ஆகியவற்றைக் கேட்காதீர்கள்.

தெருவில் யாரையாவது சந்திக்க நேர்த்தால், நீங்கள் ஸ்டைலுக்காக கறுப்புக்கண்ணாடி அணிந்திருந்தால் கழற்றிவிட்டுப் பேசுங்கள். கண்பார்த்து பேசுதல் நம்பிக்கைக்கு நல்லது.

யார் தனிப்பட்ட பிரச்சினையிலும் நேரடியாக வலியப் போய் தலையிடாதீர்கள்.

**உங்களுடைய கேள்விகளை குறும்பனிடம் கேளுங்கள்**
**whatsapp - 076 2728213**
**e-mail- kurumpan@yahoo.com**



# தமிழன் தர்பார்

தொகுப்பு:
மணி ஸ்ரீகாந்தன்

## இது எங்க ஏரியா

## எம். ஆர். ராதாவின் இம்பாலா....

ஒரு முறை படப்பிடிப்பின்போது, ராதாவுக்கு வீட்டிலிருந்து மதிய உணவு எடுத்துவருவதற்கு வாகனம் எதுவும் இல்லை. அப்போதுதான் புதிதாக இம்பாலா கார் வாங்கியிருந்தார் சிவாஜி.

சாப்பாடு எடுத்துவருவதற்காக அக்காரை சிவாஜியிடம் கேட்டார் ராதா.

‘‘அண்ணே, அது இம்பாலாண்ணே...” என்றார் சிவாஜி.

அடுத்த மூன்றே நாட்களில், புதிய இம்பாலா கார் ஒன்றை வாங்கினார் ராதா.

மதிய உணவு நேரத்தில், சிவாஜி இருக்கும் நேரம் பார்த்து, ராதாவின் இம்பாலா கார் அங்கு வந்து நின்றது.

அதில், நிறைய வைக்கோல் கட்டுகள் ஏற்றப்பட்டிருந்தன.



‘‘கணேசா, பாத்தியா இம்பாலா காரை” என்றார் ராதா.

‘‘என்னண்ணே வைக்கோல் கட்டெல்லாம் ஏத்திக்கிட்டு” என்றார் சிவாஜி.

அது என்ன வெறும் தகரம் தானே.

தோட்டத்துக்கு வைக்கோல் ஏத்திட்டுப் போக, வண்டி கிடைக்கலன்னு சொன்னான் வேலையாள். சரி... இம்பாலால ஏத்திக்கோன்னு சொல்லிட்டேன்.

சரியான பதிலடி.



டாக்டர்: வாங்க உட்காருங்க.. கையை நீட்டுங்க.. நாக்கை நீட்டுங்க.. ஆ..ன்னு சத்தம் கொடுங்க.. நல்லா இழுத்து மூச்சு விடுங்க.. திரும்புங்க.. இப்ப சொல்லுங்க என்ன செய்யுது.

டாக்டரிடம் வந்தவர்: ஒன்னும் இல்லை டாக்டர்.. மகளுக்கு கல்யாணம் பத்திரிக்கை கொடுக்க வந்தேன்.. இந்தாங்க. வரட்டா!

## எல்லாம் முதுமைதான்



தள்ளாடும் பாட்டி ஒருவர் டாக்டரிடம் வந்தார்.

“டாக்டர்! என் நினைவாற்றல் மங்கிக்கொண்டே வருகிறது. இப்பொழுது எல்லாம் எதுவும் என் நினைவில் நிற்பது இல்லை.”

“நினைவாற்றல் குறைவதற்கு முதுமைதான் காரணம்.”

“டாக்டர்! கண் பார்வையும் சரியாக தெரிவது இல்லை. கண்ணின் முன்னால் நிறைய கரும்புள்ளிகள் தெரிகின்றன.”

“கண் பார்வை குறைவதற்கும் முதுமைதான் காரணம்.”

“இப்பொழுது அடிக்கடி முதுகு வலி வருகிறது டாக்டர்.”

“அதற்கும் முதுமைதான் காரணம்.”

“டாக்டர்! இப்பொழுது சிறிதளவு சாப்பிட்டாலும் செரிமானம் ஆவது இல்லை. பசியும் எடுப்பது இல்லை.”

“அதற்கும் முதுமைதான் காரணம்.”

“இப்பொழுது எல்லாம் மூச்சு விட மிகவும் துன்பப்படுகிறேன்.”

“அதற்கும் முதுமைதான் காரணம்.”

கோபத்துடன் அவர், “முட்டாளா நீ? உனக்கு அறிவே இல்லையா? டாக்டர் படிப்பே நீ படிக்கவில்லையா? எந்த நோய் சொன்னாலும் மருந்து சொல்லாமல் முதுமைதான் காரணம் முதுமைதான் காரணம் என்று பிதற்றுகிறாயே. ஒரு பைத்தியத்திடம் மருத்துவம் பார்க்க வந்த என்னைச் சொல்ல வேண்டும்” என்று கத்தினார்.

டாக்டர் மிக அமைதியாக, “காரணமின்றி அடிக்கடி கோபம் வருவதற்கும் முதுமைதான் காரணம்” என்றார்.

## ஆறுவது சினம்!

### தென்கச்சி கோ. சுவாமிநாதன் சொன்ன கதை



“மனுஷனுக்கு ஏன் சார் கோபம் வருது?” அப்படின்னு கேட்டேன் ஒரு பெரியவரைப் பார்த்து.

அவர் கோபப்படாமே பதில் சொன்னார். அதனாலேதான் அவரு பெரியவர்.


“ஆசைகள் உருமாறி கோபமா மாறுது”ன்னார் அவர். மனுஷன் ஆசைப்படறான். அது நிறைவேறாமே போறப்போ அவன் மனசு குழம்புது. அது கோபமா உருவெடுக்குது.

கோபம் வந்தவுடனே மனுஷன் தன்நிலை இழந்துடறான். நிலைமையை புரிந்துகொள்கிற சக்தி அவனை விட்டு நீங்கிப் போயிடுது. அதனாலே –

கோபத்துலே இருக்கிற மனுஷன் என்ன வேணும்னாலும் பேசுவான். என்ன வேணும்னாலும் செய்வான். கொலை கூட பண்ணுவான்.

இரண்டு பேர் சாதாரணமா பேசிக்கிட்டிருப்பாங்க. ஏதாவது ஒரு சூடான வார்த்தை பெரிசாப்போயி கடைசியிலே இரண்டு பேரும் கத்தியைத் தூக்கிக்கிட்டு நிற்பாங்க.

ஏன் இப்படி ஆவுதுன்னா ... கோபம் வந்தவுடனே மதிமயங்கிப் போயிடுது.



அவனுடைய புலன்கள் மேலே அவனுக்கு உள்ள கட்டுப்பாடு அந்த நேரத்துக்கு தளர்ந்து போயிடுது. அவன் கண்ட்ரோல்லே அதல்லாம் இருக்கறதில்லே. அதனாலே அவன் என்ன செய்யறான்ங்கறதையே அவன் உணர்றதில்லே

கோபம்ங்கற வலையிலே விழுந்துடறான். அதுக்கப்புறம் மாட்டிக்கிட்டு விழிக்கிறான். இதெல்லாம் ஒரு பெரியவருடைய (பாபா) கருத்து.

சில கோபம் ரொம்ப ஆழமானதா இருக்கும். சிலது ரொம்பத் தீவிரமான கோபமா இருக்கும். இதைப் பொறுத்து கோபத்தை பல வகையா பிரிக்கலாம். இழிவு, மனசை காயப்படுத்துது. வெறி, ஆத்திரம், எரிச்சல் – இதெல்லாம் கோபத்தின் பல வகைகள். ஆனா பாருங்க, இதே கோபம், சுயநலம் இல்லாமே அடுத்தவனைக் கண்டிச்சி நல்ல வழியிலே திருப்பறத்துக்காகப் பயன்படும்போது அது ஆன்மிகக் கோபமாகக் கருதப்படுது.

ஒரு பெண்ணின் மானம் காக்க மற்றவன் வெளிப்படுத்தற கோபம் தார்மீகக் கோபம்” – இது தவறல்ல. பொறாமை – சுயநலம் இதனாலே ஏற்படற கோபம் இருக்கு பாருங்க... இதுதான் தவறானது!

ஒரு வாத்தியார் பிள்ளைங்களைப் பார்த்துக் கோபப்படறார். இது என்ன பொறாமையாலே வர்ற கோபமா? இவன் என்ன இவ்வளவு நல்லா படிக்கிறான். 100க்கு 80 மார்க் வாங்கறான். நாம படிக்கற காலத்துலே 100க்கு 40 மார்க் தானே வாங்கினோம்? அப்படின்னு நினைச்சா ஆசிரியர் பொறாமைப்படுவார்? அவர் பெருமைப்படுவார். பையன் நல்லா படிச்சா அது அவருக்குப் பெருமை.

குரு சீடர்களிடம் காட்டற கோபம் அவங்களை நல்வழிப் படுத்தறத்துக்காக.

சின்ன சின்ன விஷயத்துக்கெல்லாம் சில பேர் அடிக்கடி கோபப்பட்டுக்கிட்டிருப்பார்கள். அது அவர்களின் மனப் பலவீனத்தின் அடையாளம்.

இப்படிப்பட்ட கோபத்தை அவர்களாலே அடக்க முடியும். அதுக்கு என்ன செய்யணும் தெரியுமா? பொறுமை –சுயபரிசோதனை – மன்னிக்கும் தன்மை – அன்பு – மகிழ்ச்சி – சேவை மனப்பான்மை – இதையெல்லாம் வளர்த்துக்கணும்.

அகங்காரம் இருக்கு பாருங்க ‘ஈகோ’ அதுதான் கோபத்தோட ஆணிவேர். சுய பரிசோதனை அதாவது தன்னைத்தானே கேள்வி கேட்டுக்கறது மூலமா அகங்காரத்தை வேரோட கிள்ளி எறிய முடியுமாம். அனுபவப்பட்டவங்க சொல்றாங்க. மௌனத்தைக் கடைப்பிடிக்கறது கூட கோபத்தை அடக்கறதுலே ரொம்ப உதவியா இருக்குமாம். இப்படி... கோபத்தைப்பத்தி நிறைய விஷயம் இருக்கு...

எல்லாத்தையும் வளவளன்னு சொல்லிக்கிட்டே இருந்தா. கேட்டுக்கிட்டிருக்கிற உங்களுக்கும் கோபம் வந்துடும். அதனாலே இதோட நிறுத்திக்குவோம்.

நம்ம ஆள் ஒருத்தன் சொன்னான்:

“சார், நான் தினமும் ஒரு தடவையாவது என் மனைவியைப் பார்த்து திட்டிக்கிட்டே தான் இருப்பேன். இருந்தாலும் ஒரு தடவை கூட அவளுக்குக் கோபம் வந்ததே இல்லே சார்!” அப்படின்னான்.

“அது எப்படிப்பா சாத்தியம்?” ன்னேன்!

“எல்லாம் நம்ம கையிலேதான் சார் இருக்கு!” என்றான் ரொம்பப் பெருமையா.


“அந்த ரகசியத்தை எனக்கும் கொஞ்சம் சொல்லிக்கொடேன். தகவல் கேக்கறவங்க காதுலேயும் போட்டு வைப்போம்!” அப்படின்னேன்.

அவன் மெதுவா கிட்டே வந்து, “வேறே ஒண்ணுமில்லே சார்... நான் அவ முன்னாடி நின்னு திட்டற சமயம்லாம்... அவ நல்லா தூங்கிக்கிட்டிருப்பா சார். அது மாதிரி சமயம் பார்த்துத் தான் திட்டுவேன்” அப்படிங்கறான்!





## குறும்பா

### ஏலம்!



பாலன்
மகன் கண்
விழித்துப் படித்து
படிப்பினிலே
நல்லிடத்தைப்
பிடித்து ஏலம்
போடும்
சந்தையிலே
எட்டு லட்சம் வாங்கியதால் காலமெல்லாம்
கண்ணீர் விட்டான் துடித்து!

ஒலுவில் எஸ்.ஜலால்டீன்.



“எதிரி எல்லைகளை விரிவுபடுத்தப் போகிறானாம் மன்னா.”

“அப்படியானால் நம் எல்லையை பதுங்குக் குழியோடு” சுருக்கிக் கொள்ளவேண்டியதான் அமைச்சரே!”

pio– 006

“அரண்மனைப் புலவர் மீது மன்னர் ஏகக் கடுப்பாக இருக்கிறாராமே! ஏன்?”

“தூதுப்புறாக்கள் நானூறை சமைத்து விருந்து வைத்ததை “புறா நானூறு” என்று பாடல் இயற்றிவிட்டாராம்!”







தொலைபேசி இல - 0740107194
அனுப்பவேண்டிய முகவரி : இல.91, விஜேராம மாவத்தை, கொழும்பு-07 மின்னஞ்சல் முகவரி: thamilandharbar@yahoo.com

சமூக வலைத்தளங்களில் நீங்கள் படைக்கும், பகிர்ந்த, படித்துச் சுவைத்த சுவாரஸ்யமான விடயங்களை எமக்கு அனுப்பிவையுங்கள். அத்தோடு சிரிப்புத் துணுக்குகள், வித்தியாசமான செல்பிகள், புகைப்படங்கள், நச்சுன்னு நாலு வரியில் எழுதப்படும் ஹைக்கூ உள்ளிட்டவற்றையும் எம்மோடு பகிர்ந்துகொண்டால் சிறப்பானதை தெரிவுசெய்து “தமிழன் தர்பார்” பக்கத்தில் பிரசுரிக்கக் காத்திருக்கிறோம்.



காரைக்கவி



# சீத்துவக்கேடு 147

ஆச்சியின்ரை முகம் ஒருமாதிரி போனதைக்கண்ட அப்பு லோட்டாவில கிடந்த தண்ணியை எடுத்து ஒருவாய் குடிச்சுப் போட்டு, ''எட பெடி உனக்கொரு விசயம் தெரியுமே. உந்த விளக்கைப் பற்றி எங்கட நாயன்மார் மட்டுமில்லை. உவை ஆழ்வார்களும் எல்லே பாடி இருக்கினம்'' எண்டார்.

***“வையம் தகளியா வார்கடலே நெய்யாக***
***வெய்ய கதிரோன் விளக்காகச் செய்ய***
***சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை***
***இடர் ஆழி நீங்குகவே’’***

எண்டு பொய்கை ஆழ்வார் பாடுறார் கண்டியோ.

உதில என்ன புதினம் பாத்தியெண்டால் பொய்கை ஆழ்வாருக்கு உந்த சின்ன விளக்குகள் ஒண்டும் பிடிக்கேல்லை

பெருமாளுக்கு பெரிய விளக்கா கொளுத்த வேணும் எண்டு நினைச்சுப் போட்டு, பூமியையே விளக்காக்கி கடல் தண்ணியை எண்ணெயாக்கி சூரியனை சுடரும் திரியாக்கி கொளுத்திவிட்டார் எண்டார் அப்பு.

உவர் உப்பிடிப் பாட, பூதத்தாழ்வார் எண்டவர் அன்பை விளக்காக்கி அதில ஆர்வத்தை எண்ணெயாக ஊத்தி சிந்தையை திரியாக்கி எரிச்ச விளக்கைப் பற்றி

***“அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக***
***இன்புருகு சிந்தை இடுதிரியா நன்புருகி***
***ஞானச் சுடர் விளக் கேற்றினேன் நாரணற்கு***
***ஞானத் தமிழ்புரிந்த நான்”***

எண்டு வலு விளக்கமாப் பாடி இருக்கிறார்.

உப்பிடி அப்பு ஆழ்வார்களைப் பற்றிச் சொல்லவும் ஆச்சி, ''என்ன காணும் நீர் சைவம் சைவம் எண்டு சொல்லுறீர். பிறகு பாத்தா ஆழ்வார்கள் பாட்டைச் சொல்லிப் பெருமாளின்ரை புகழ் பாடுறீர்'' எண்டா.

உடன அப்பு, ''எடி விசரி, என்ன விசர்க்கதை கதைக்கிறாய். உங்க இருக்கிற சில அறப்படிச்ச வேலை மினக்கெட்டவங்கள் மாதிரி பெருமான் பெருசோ பெருமாள் பெருசோ எண்டு பாத்து என்னத்துக்கு நாங்கள் எங்கட நேரத்தை வீணாக்க வேணும்.

பெருமாள் ஆரெண்டு தெரியுந்தானே அவர் எம்பெருமான் சிவபெருமானுக்கு மச்சான் எண்டெல்லே புராணங்கள் சொல்லுது எண்டு நாங்கள் சொல்லுறம். அப்ப மச்சானை கும்பிடுறனாங்கள் அவற்றை மச்சானை மதிக்கப்படாதோ எண்டார்.

கனக்க ஏன் போவான் நாங்கள் சைவ ஆக்கள் சொல்லுறம் சிவபெருமான் எங்கும் இருப்பார் எதிலும் இருப்பார் எண்டு. அப்பிடியெண்டால் பெருமாளிலும் அவர்தான் இருப்பார். பெருமாளைக் கும்பிடுற அனுமானிலும் ஏன் பெருச்சாளியிலும் அவர்தான் இருப்பார் எண்ட விளக்கம் இருந்தால் உந்த பிரச்சினை ஒண்டும் வராது. ஆரையும் அப்பிடியே நிண்டு பயபக்தியோட கும்பிட்டுப் போட்டுப் போகலாம்'' எண்டார் அப்பு.

அதுசரி, நீர் என்னவோ சைவ ஆக்கள் எண்டீர். ஆனால், எங்கட ஊரில ஒரு கொஞ்சக் குடும்பங்களைத்தானே சைவம் எண்டு நாங்கள் சொல்லுறனாங்கள்.

விரல் விட்டு எண்ணினால்கூட இஞ்சை ஊரில ஓர் இருபத்தைஞ்சு குடும்பந்தன்னும் தேறுமோ தெரியாது எண்டா ஆச்சி.

உடன அப்பு எடியே அவை மச்சம் மாமிசம் ஒண்டும் சாப்பிடாமை மரக்கறி சாப்பிடுறதால அவையை நாங்கள் சைவங்கள் எண்டு சொல்லுறம் உண்மையில உது பிழை கண்டியோ.

உங்க எத்தினையோ வெள்ளைக்காரர் மரக்கறி சாப்பாடுதான் சாப்பிடுகினம். ஏன் வேற சமயக்காரர் கனபேர் மரக்கறி சாப்பாடுதான் சாப்பிடுகினம். அப்ப அவை எல்லாரையும் நாங்கள் சைவ ஆக்கள் எண்டு சொல்லலாமோ எண்டார்.

உங்க நான் ஒரு ஆசுப்பத்திரிக்கு மருந்தெடுக்கப்போய் நிக்கேக்கை ஒரு போர்மைத் தந்தாங்கள் நிரப்பச் சொல்லி. அதில சாப்பாடு என்ன மாதிரி எண்டு கேட்ட இடத்தில, சைவச் சாப்பாடோ அசைவச் சாப்பாடோ எண்டு கேட்டிருந்தாங்கள் கண்டியோ.

கனக்க ஏன் போவான். உங்க சாப்பாட்டுக் கடையளையும் சைவக் கடை அசைவக் கடை எண்டெல்லே எங்கட ஆக்கள் சொல்லுகினம்.

உங்க போன கிழமை என்னோட கதைச்ச ஒருத்தர் சொன்னார் தான் சைவமாம். ஆனால், இடைக்கிடை முட்டை சாப்பிடுவாராம்.

உப்ப என்ன நான் சொல்ல வாறன் எண்டால், சைவம் எண்ட எங்கட விளக்கம் உப்பிடித்தான் சாப்பாட்டோடை தொடர்புபடுத்தி இருக்கு விளங்கிச்சோ எண்டார் அப்பு.

ஆனால் நான் என்ன சொல்லுவன் எண்டால், சிவபெருமானை ஆர் கும்பிடுகினமோ அவையைத்தான் நாங்கள் சைவங்கள் எண்டு சொல்ல வேணும்.

சாப்பிடுற சாப்பாட்டை வைச்சுக் கொண்டு ஆரையும் சைவமோ சைவம் இல்லை எண்டோ சொல்ல முடியாது கண்டியோ எண்ட அப்பு.

உப்பிடிப் பாத்தம் எண்டால் எங்கட ஊரில தொண்ணூத்தி ஒம்பது சதவீதமும் சைவ ஆக்கள் இல்லை கண்டியோ எண்டு போட்டு காதிலை சொருகி இருந்த குறைச் சுருட்டை எடுத்து விரலாலை தட்டினார்.

**(தொடரும்)**

# இவ்வார இராசி பலன்கள்



**வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்**

### மேஷ ராசி அன்பர்களே!

தேவையான அளவுக்குப் பணவரவு இருந்தாலும், சேமிக்க முடியாதபடி செலவுகள் ஏற்படும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். மற்றவர்கள் உங்களைப் பற்றி அவதூறாகப் பேசினாலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியானாலும் முடிந்துவிடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே நடைபெறும். சக வியாபாரிகளுடன் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், எச்சரிக்கையாக நடந்துகொள்ளவும். புதிய வாடிக்கையாளர்களின் அறிமுகம் உற்சாகம் தரும். குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் வாரமாக இருக்கும். பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. புகுந்தவீட்டு உறவினர்களிடையே கௌரவம் உயரும்.

### ரிஷப ராசி அன்பர்களே!

பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். ஆனால், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும் என்பதால், சிலருக்கு சிறுதொகை கைமாற்றாக வாங்க நேரிடும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் மறைந்து மகிழ்ச்சி உண்டாகும். வெளியூர்ப் பயணங்களின்போது கூடுதல் கவனம் தேவை. இளைய சகோதரர்களால் உதவி உண்டு. பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். தந்தையுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கச் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி இருக்கும். உழைப்புக்கேற்ற இலாபம் கிடைப்பதால் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பங்குதாரர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குத் தேவையான பணம் இருப்பதால் சிரமம் எதுவும் இருக்காது. அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும்.

### மிதுன ராசி அன்பர்களே!

பல வகைகளிலும் அனுகூலமான வாரம். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் வாழ்க்கைத்துணையின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது. தந்தையுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் கூடுமானவரை பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். சக வியாபாரிகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு நிம்மதியான வாரம். எதிர்பார்த்த சுப நிகழ்ச்சி ஒன்று நடப்பதற்கான வாய்ப்புள்ளது. பண வரவும் திருப்திகரமாக இருக்கும்.

### கடக ராசி அன்பர்களே!

ஓரளவுக்கு நன்மைகள் நடக்கும் வாரம். ஆனால், பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் தேவை. பால்ய நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியும் ஆறுதலும் தருவதாக இருக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களிடையே செல்வாக்கு அதிகரிக்கும். செலவுகளைச் சமாளிப்பதில் பிரச்சினை எதுவும் இல்லை. சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் இலாபம் கிடைக்காது. வியாபாரம் அபிவிருத்தியடைய கூடுதலான முயற்சியும் உழைப்பும் தேவை. பங்குதாரர்களிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைப்பது தாமதமாகும். குடும்ப நிர்வாகத்தைக் கவனித்துவரும் பெண்கள் குடும்ப நிர்வாகத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவருடன் ஏற்பட்டிருந்த மனக்கசப்புகள் நீங்கி மகிழ்ச்சி ஏற்படும்.

### சிம்ம ராசி அன்பர்களே!

பணப்புழக்கம் அதிகரிக்கும். திருமண வயதிலுள்ள பிள்ளை அல்லது பெண்ணுக்கு வரன் தேடும் முயற்சியில் ஈடுபடலாம். கணவன் - மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்றாலும் உடனே சரியாகிவிடும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவருடன் அனுசரித்துச் செல்வது நல்லது. இழுபறியாக இருந்த அரசாங்கக் காரியங்கள் அதிகாரிகளின் ஆதரவால் அனுகூலமாக முடியும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும். கடையை வேறு இடத்துக்கு மாற்ற நினைத்தால், அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். பங்குதாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள். வாடிக்கையாளர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உற்சாகமான வாரம். புகுந்தவீட்டு உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கி, அவர்களுடன் உறவு சுமுகமாகும்.

### கன்னி ராசி அன்பர்களே!

பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருப்பதாலும், தேவையற்ற செலவுகள் இல்லை என்பதாலும் குடும்பத்தில் மகிழ்ச்சி யான சூழ்நிலை இருக்கும். கணவன்- மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. தாய் வழி உறவினர்களால் வீண் குழப்பங்கள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். சிலருக்கு வீட்டில் தெய்வவழிபாடு செய்யும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் இலாபம் குறைவாகத்தான் இருக்கும். கடையை விரிவுபடுத்தவோ அல்லது வேறு இடத்துக்கு மாற்றவோ சாதகமான சூழ்நிலை இல்லை. கடன் வாங்குவதைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். குடும்ப நிர்வாகத்தைக் கவனிக்கும் பெண்களுக்குக் குடும்பத்தை நிர்வகிப் பதில் சற்று சிரமம் ஏற்படும் என்றாலும் சமாளித்துவிடுவீர்கள். உங்கள் தேவைகளை கணவர் நிறைவேற்றுவார்.

### துலா ராசி அன்பர்களே!

இந்த வாரம் உற்சாகமான வாரமாகவே அமையும். புதிய முயற்சிகளுக்கு ஏற்ற வாரம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் சிறிது அலைச்சலும் அதனால் சோர்வும் உண்டாகும். உறவினர்கள் வருகை ஆதாயம் தருவதாக இருக்கும். சகோதரர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். வியாபாரத்தில் விற்பனை இருந்தாலும்கூட அதற்கேற்ற இலாபம் கிடைக்காது. எனவே, பொறுமையை விடாமல் வியாபாரத்தில் கவனமாக இருப்பது நல்லது. பணியாளர்களிடம் அனுசரணையாக நடந்துகொள்ளவும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குத் திருப்திகரமான வாரம். வாரப் பிற்பகுதியில் பிள்ளைகள் மூலம் எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். அவசியத் தேவை ஏற்பட்டால் மட்டுமே கடன் வாங்கவும். உறவினர்களுடன் வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்புண்டு. குடும்பம் தொடர்பான எந்தவொரு முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. சிலருக்குக் குடும்ப விஷயமாக சிறிய பயணம் ஒன்று மேற்கொள்ள நேரிடும். சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட யோகம் ஏற்படும். தந்தையால் அனுகூலம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனை நல்லபடியாக இருப்பதுடன், எதிர்பார்த்ததை விட லாபம் கூடுதலாகக் கிடைக்கும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பங்குதாரர்களிடம் கேட்கும் பண உதவி கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் பொறுமையாக இருக்கவேண்டிய வாரம். சிலருக்கு தாய்வழி உறவினர்கள் மூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

### தனுசு ராசி அன்பர்களே!

பண வரவுக்குக் குறைவிருக்காது. குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் போதுமான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். சகோதர வகையில் சிற்சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பெரியளவில் பாதிப்பிருக்காது. நீதிமன்ற வழக்குகளில் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். கணவன் - மனைவி ஒருவரையொருவர் அனுசரித்துச்செல்வது நல்லது. வியாபாரத்தில் விற்பனை சற்று மந்தமாகத்தான் இருக்கும். சக வியாபாரிகளுடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம். புதிய முதலீடுகள் விடயத்தில் நன்றாக யோசித்து இறங்கவும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் தரும் வாரம் இது. சகோதரர்கள் மூலம் பணவரவுக்கு வாய்ப்புள்ளது.

### மகர ராசி அன்பர்களே!

எதிர்பார்த்ததை விட பணவரவு அதிகமாக இருக்கும். வீண் விரயம், செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. வராது என்று நினைத்த கடன் தொகை கைக்கு வந்துசேரும். உடல் ஆரோக்கியம் மேம்படும். திருமண முயற்சிகளில் ஏற்பட்டிருந்த பிரச்னைகள் தீர்ந்து திருமணம் கூடிவரும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. தந்தைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே திருப்தி தருவதாக இருக்கும். பற்று வரவு சுமுகமாக நடைபெறும். கடையை விரிவுபடுத்துவது போன்ற முயற்சிகளை இந்த வாரம் மேற்கொள்ளலாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குத் தேவையற்ற செலவுகள் ஏற்படுவதன் காரணமாக, மனதில் சிறுசிறு சஞ்சலம் ஏற்படக்கூடும். புகுந்த வீட்டு உறவினர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம்.

### கும்ப ராசி அன்பர்களே!

பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். பிள்ளைகளால் மதிப்பும் மரியாதையும் கூடும். வாழ்க்கைத் துணை வழியில் மகிழ்ச்சி உண்டாகும். உடன்பிறந்தவர்களின் வருகை மனதுக்கு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். தடைப்பட்டு வந்த சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற் கான சூழ்நிலை கனிந்து வரும். உறவினர் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். பிறருக்குக் கொடுத்து வராது என்று நினைத்த கடன் தொகை கிடைக்கக்கூடும். வியாபாரத்தில் கடுமையாக உழைத்தால் மட்டுமே விற்பனையை அதிகரிக்க முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்கள் மிகவும் பொறுமையாக இருக்கவேண்டியது அவசியம். கணவருடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் பொறுமை காப்பது நல்லது.

### மீன ராசி அன்பர்களே!

பணவரவு ஓரளவு திருப்தி தரும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. விலகிச் சென்ற உறவினர்கள் உங்களைப் புரிந்துகொண்டு உறவு பாராட்டுவார்கள். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். வழக்குகளில் சாதகமான திருப்பம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் மேம்படும். தந்தையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருப்பது மகிழ்ச்சி தரும். பற்று வரவில் பிரச்சினை எதுவும் இருக்காது. வியாபாரம் தொடர்பாக சிலருக்கு தொலைதூர பயணங்கள் மேற்கொள்ள நேரிடும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகள் அதிகரிக்கும் என்பதால், சிலருக்குக் கடன் வாங்க நேரிடும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

# தமிழன் தொடர்கதை

# யார் அது?

## அத்தியாயம் -04

**வன்னித் தமிழ் மறவன்**

வைத்தியரின் நம்பிக்கையற்ற பேச்சை ராம் கேட்டும் அவனிடம் தேவ் பிழைப்பான் என்று இருந்த நம்பிக்கை கொஞ்சமும் குறையவில்லை.

உலகில் இருக்கும் அத்தனை தெய்வங்களிடமும் வேண்டுதல் வைத்தான் ராம்.

தேவை வைத்திருக்கும் அறைக்கு முன்னால் இரவு முழுவதும் நின்றபடியே கண்ணீரோடே காத்திருந்தான். அதேபோல விடிந்ததும் முன்னால் போய் நின்றான்.

இப்படியாக ரமணாவும் சீனுவும் ரெடியாகி முதலாவதாக ராமிடம் வைத்தியசாலை வந்தார்கள்.

“டேய் நீங்க என்னடா இங்க பண்ணுறீங்க. தேவ் வீட்டுக்கு போங்கடா.”

“இல்லடா தேவ ஒருமுறை பாத்துட்டு போயிடுறோமேடா. அதுதான் வந்தோம்.”

“அந்த கதவு கண்ணாடி வழியா பாருங்கடா. உள்ள போய்ப் பார்க்க அனுமதி இல்லை. நானும் இந்த வழியாத்தான் பாத்துட்டு இருக்கிறேன்.”

“ராம் சாப்பிட்டியாடா ஏதாசும் குடிச்சியா.”

“இல்ல சீனு. பசியே எடுக்கலடா எனக்கு. எப்படி பசிக்கும். இவன் இப்படி ஏதுமே பேசாம படுத்துக் கிடக்கிறானே. ஒரு நாள் கூட பேசாமல் இருக்க மாட்டான். இப்போ இப்படி கிடக்கிறானே.”

“டேய் ராம். ஏன்டா இப்படி இருக்கிறாய். எங்களுக்கு தைரியம் கொடுத்துட்டு நீ இப்படி கண்ணீர் வடித்தால் நாங்க என்ன பண்ணுறது.”

“ரமணா போய் கடையில் ஏதும் வாங்கிட்டு வா. இவனுக்கு ஊட்டிட்டு போவோம். இல்லண்ணா இவன் சாப்பிட மாட்டான்.”

“ரமணா வேணாம் எனக்கு பசிக்கலடா”

“லூசாடா உனக்கு. நீயும் சாப்பிடாம இப்படியே இருந்தா யார் தேவை பாத்துகிறது. நீ முதல் சரியா சாப்பிடு.”

“நீ போய் வாங்கிட்டு வா ரமணா. இவன் கதையை விடு’’ என்றதும் ரமணா கடைக்கு ஓடிப்போனான்.

“சீனு கயல் எப்படி இருக்கிறாள்டா. அவள் ஒகே தானே.”

“ஓகே யா எனக்கு தெரியல ராம். ஏதோ கயல் முகத்துல இந்த நிச்சயதார்த்தம் வேணாம் என்ற போல எனக்கு தோணுச்சுடா. அவ முகம் சரி இல்லை ஏதோ இருக்கு...”

“அப்படி ஏதும் இல்லடா. அவ அண்ணன் இல்லனு சோகமா இருப்பாள் டா. அவள் ஒத்துக்கிட்டுதானே இந்த நிச்சயதார்த்தம் நடக்குது. அப்புறம் என்ன பிரச்சினை.”

“இல்ல ராம். அண்ணன் இல்லை என்ற கவலையை விட முகத்தில் ஏதோ இருக்குடா. சரி பார்க்கலாம் விடு” என்றதும் ரமணா உணவுடன் வந்து நின்றான்


“இந்தா ராம். இதைச் சாப்பிடு. அவன் சரியாகிடுவான் யோசிக்காத. எங்களை விட்டு போயிட மாட்டான்” என்றதும் ராம் வாங்கி வந்த இட்லியை பிசைந்து உண்டான்.

பின்பு “ராம் நீயும் சரியா பத்து மணிக்கு ரெடி ஆகி மண்டபத்துக்கு வந்துடுடா.”

“என்னடா சீனு சொல்லுறாய். இவனை இப்படியே விட்டுட்டு நான் எப்படி வாறது. அது முடியாதுடா.”

“ராம் சொன்னா கேளுடா. கயல் எங்களை விட தன்னோட அண்ணனுக்கு அடுத்ததா உன் மேலதான் பாசம் வைச்சு இருக்கிறாள். நீயும் நிச்சயதார்த்தத்துக்கு வரலண்ணா அவ மனசு எவ்வளவு காயப்படும். அதை புரிஞ்சுக்கோடா.”

“எவ்வளவு சொன்னாலும் தேவை



விட்டுஎன்னால் வர முடியாது என்னை மன்னிசுக்கோங்கடா.”

“சரி உன் முடிவுடா. ஓகே ராம் நாங்க போறோம்டா. அங்க சின்ன சின்ன வேலை இருக்கு அதை முடிக்கணும் நீ தேவை பாத்துக்கோ” என்று கூறிவிட்டு வைத்தியசாலையை விட்டு தேவ் வீட்டிற்கு சென்றார்கள்.

அங்கே விருந்தினர்கள் வர ஆரம்பித்துவிட்டார்கள்.

எஞ்சி இருந்த சின்ன சின்ன வேலைகளை பார்த்துக்கொண்டிருந்த இவர்களிடம் கயல் வந்து, “அண்ணா எங்கே காணல்லை. ராம் இன்னும் வரல்லை. காலை வருவேன் என்று சொன்னாருனு சொன்னீங்களே.”

“ஆமாம் கயல் வந்துடுவான். ஏதோ முக்கியமான வேலை’’ என்று சீனு கூறியதும், “அப்படியா சரி அண்ணா” என்றாள் கயல்.

அவன்தான் வரமாட்டானே எப்படி கயலை சமாளிப்பது என்று தெரியாமல் நின்றார்கள்.

அப்படியே நேரமும் பத்து மணியை நெருங்குகையில் மண்டபத்திற்கு வந்த கயல் எல்லோர் முன்னும் சீனுவை அழைத்து,

“நான் தேவ் அண்ணா கூட பேசாமல் இந்த நிச்சயதார்த்தம் நடக்காது. எப்படியாவது நான் பேசியே ஆகணும்” என்று ஒற்றை காலில் கயல் நிற்க, ரமணாவும் சீனுவும் என்ன செய்வது என்றே புரியாமல் விழித்து நின்றார்கள்.

உடனே ரமணா ராமுக்கு கோல் பண்ணி நடந்ததை கூறினான்.

“ஓகே டா நிச்சயதார்த்தம் நடக்கும். யாரும் குழம்ப வேண்டாம். நான் ஒரு நம்பர் தாரேன். அதற்கு இரண்டு நிமிடத்தால் கோல் பண்ணு. தேவ் பேசுவான்.”

“டேய் ராம் என்னடா செய்யப் போறாய். தப்பு மேல தப்பு பண்ணுறோம்னு தோணுதுடா.”

“இல்ல ரமணா. கோல் பண்ணு பேசுவான்” என்று அந்த எண்ணைக் கொடுத்தான்.

உடனே ரமணா,

“சீனு இந்தாடா தேவ் நம்பர் இதுக்கு கோல் பண்ணு பேசுவான்” என்றதும் அருகில் வந்த சீனு என்னடா ரமணா பைத்தியமா உனக்கு. உளறுறாய் எப்படி கோமால படுத்து கிடக்கிக்கிறவன் பேசுவான்.’’

“எனக்கு எப்படிடா தெரியும். ராம்தான் இந்த நம்பர் கொடுத்தான் ?கால் பண்ண சொல்லி.”

“சரி கயல். தேவுக்கு கோல் பண்ணி தாரேன் பேசுங்க என்றான்.”

அப்போது துள்ளி குதித்து அருகில் வந்த கயல் எண்ணை வாங்கி சீனுவின் செல்லில் கால் பண்ணினாள்.

இங்கே சீனுவுக்கும் ரமணாவுக்கும் கதி கலங்கி இருந்தது.

‘‘ஹலோ.. ஹலோ அண்ணா’’

“கயல் எப்படிமா இருக்கிறாய். அண்ணனை மன்னிச்சுக்கோ மா. கம்பனியை காப்பாற்றும் பொறுப்பே எங்கிட்டத்தான்மா இருக்கு. அதனாலேயே சொல்லாமலே வந்துட்டேன்.’’

“ஏன் அண்ணா எங்கிட்ட இதை சொல்லி இருந்தா நான் சம்மதிச்சிருக்க மாட்டேனா. உன் தங்கசி அவ்வளவு மோசமானவளா?”

“அப்படி இல்லடா கண்ணா. அண்ணாக்கு என்ன செய்றதே என்று தெரியாமல் பதற்றத்தில் வந்துட்டேன். சாரி டா.”

“சரி ஓகே அண்ணா எப்போ திரும்ப வருவாய்.’’

“நான் இங்க கம்பனி பிரச்சினைகள் எல்லாம் சோல்வ் பண்ணிட்டு சீக்கிரமா வந்துடுறேன். அங்க சீனு, ரமணா, ராம் இருக்காங்க. எல்லாம் என்ன விட நல்லா பாத்துப்பாங்க. நல்லபடியா நிச்சயதார்த்தம் முடியட்டும். கயல் எப்பவும் அண்ணனோட ஆசீர்வாதம் இருக்கும்.”

“அம்மா கூட பேசுறியா அண்ணா”

“வேண்டாம் கயல் ரொம்ப பீல் பண்ணுவா. நான் அப்புறமா பேசுறேன். என் செல் வேர்க் ஆகாது நானே அப்புறமா கூப்புடுறேன்”

“ஒகே அண்ணா பாய் டேகேர்”

என்று பேசியதும் இது எப்படி சாத்தியம் ஆகும் என்று ஏதுமே புரியாமல் நின்றார்கள் சீனுவும் ரமணாவும்...

யார்?... அது.... தொடரும்...

**தொடரும்**

## சொல்ல மறந்த கதை-03

### 1825-1898

### (தென்னிந்தியாவில்)

*பயணம் சொல்ல*
*போகலானு*
*மூனு பேரும் வாசலில*
*நிக்கிறாங்க....*

*தோட்டத்தில் கூவிநிக்கும்...*
*சேவலுக்கும் சொல்லிடனும்....*
*கேவித்திரியும் அந்த*
*கோழிக்கும் சொல்லணுமே....*

*தூரத்துல ஆட்டுக்குட்டி*
*அம்மானு கூப்புடுது...*
*ஓடி போயி ஆட்டுக்கிட்ட*
*போற கத சொல்லிடணும்....*

*புண்ணாக்கு தண்ணி வச்சி*
*தலைய தடவினாக்கா*
*கையெல்லாம் நக்கிவிடும்...*
*பாசக்கார ஆடு அது......*

*கண்ணீரு கருமாயத்தில்...*
*தாய் நாட்ட கழுவுகிறோம்..*
*கோழிகுஞ்சி கூட வந்து.*
*வழியனுப்பி வைக்கிறதே...*

*கூன்விழுந்த கெழவி ஒன்னு*
*ஒடிவந்து கதருதய்யா...*

*அந்த கெழட்டு*
*சிறுக்கி மவ வைக்கும் அந்த*
*ஒப்பாரிய..*
*சொல்லி மொழி ஏதுமில்ல...*

*“யய்யா நிய்யி கொள்ளி போடும்*
*நாளெனுக்கு கிட்ட கிட்ட*
*வருகுதப்போ....”*

*“சருவு கல்லு மேல வச்ச*
*எள்ளுருண்ட கட்டியாட்டம்*
*என்ன தணியாக விட்டு நிய்யி*
*போகு தேசம் தெரியலப்பு...”*

*“அரச்ச அம்மி கல்லு*
*அநாதியா நிக்கிதய்யா..*
*வீட்டு பக்கோ திண்ணையெல்லாம்..*
*இனி ஓரியா இருகுமய்யா...”*

*கூனுகெழவியோட ஒப்பாரி*
*ஓயவில்ல..*
*எல்லாரு கண்ணுலயும்...*
*ஊத்து தண்ணி ஊருரது....*

*வரண்டு போன பூமியில*
*கண்ணீரு பட்ட ஒடன்....*
*மண்ணு மனம் வீசுதடி..*

*கல்லும் களங்குதடி...*

*சொந்த மண்ண*
*உட்டுப்புட்டு தொலை தூரம்*
*நாங்க போரோ.....*

*பொலப்புக்கு போர நாங்க*
*பத்திரமா திரும்பி வந்தா...*
*கெடா வெட்டி பொங்க வச்சி*
*திருவிழா செய்யிரதா...*

*கொலசாமி கோயிலில*
*ஐயனார வேண்டிக்கிட்டா...*
*புள்ளத்தாச்சி மூக்காயி....*

*முச்சந்தி பொட்டலில*
*முக்கண்ணு தேங்கா ஒன்ன*
*மூனு சுத்து சுத்தி வந்து...*
*செதரு தேங்கா அடிச்சுபுட்டு..*

*பயணத்த தொடருராங்க...*

*மூக்காயி முணியாண்டி*
*சின்னப்பய ராசனோட*
*சேத்து இன்னும்..*
*முன்னூறு பேருக்கு மேல்...*
*கூட்டமா போராய்ங்க......*

*ஆட்டுக்கெடா மந்தயப்போல்...*
*போகு எடம் தெரியாம*
*போகுது நம்ம சனம்.......*

*காலில் ஒரு செருப்பு இல்ல*
*லவுக்க துணி*
*ஏதும் இல்ல.....*

*நடயா நட நடந்தும்...*
*தூரம் கொரயலியே.....*
*வயித்தில ஒரு கையி*
*இடுப்பு மேல மத்த கையி...*

*முனியாண்டி தாங்களாக...*
*பொதி சொமக்கும்*
*கழுதயாட்டம்..நடந்து போரா*
*மூக்காயி....*

*கங்காணி வண்டியில...*
*தூங்கிக்கிட்டு முன்னப்போக..*
*அன்னந்தண்ணி*
*ஏதும் இன்றி...*
*பின்ன போகிறது நாதியத்த*
*நம்ம சனோ...*

*அத்தனையும்*
*நம்மலோட ரெத்த சொந்தம்...*

*ஏதோ சிலோனு சீமையாமே...*
*அங்க தான் நாங்க போரோ...*

*எம்புட்டு தூரம் இருக்கு*
*பாவம் தெரிஞ்சவங்க*
*சொல்லுங்களே..,..*

**(சொல்ல மறந்த கதை இன்னும் சொல்லப்படும்)**

**தொடரும்...**

**எம்.ராமதாஸ்**

# தமிழன் சிறுகதை

# இலட்சியக் காதல்

**வன்னித் தமிழ் மறவன்**

அன்று விமலின் அம்மாவின் இறந்த தினம். ஆகையால் தாயுடன் வாழ்ந்த அழகான நினைவுகள் அவனை சோகத்தில் ஆழ்த்தியது.

தனியாகவே வாழ்ந்து படித்து கம்பனியொன்றில் உயர்ந்த பதவியில் இருந்தாலும் அவன் இலட்சியம் ஒரு எழுத்தாளன் ஆவதே. ஆனாலும் அதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை.

ஏதேனும் இயற்கை காட்சியை இரசித்தாவது கவலையை மறந்திடலாம் என்றெண்ணி அருகில் இருந்த கடற்கரையை தெரிவுசெய்து தனியாக இருப்பதைவிட அருகில் யாணு இருந்தால் இன்னும் நன்றாக இருக்கும் என்று அவளுக்கு போன் செய்தான்.

அதே கம்பனியில் வேலை பார்த்த யாணு விமலை தன் உயிருக்கு உயிராக காதலித்தாள். விமலும் அளவற்ற காதல் கொண்டிருந்தான்.

“யாணு இப்போ நீ ப்ரியா.”

“ஏன்டா கொஞ்சம் வேர்க் இருக்கு எதுக்கு கேட்கிறாய்.”

“ஓகே நான் சும்மா கேட்டேன். நீ வேலையை பாரு” என்று அவளிடம் தன் கவலை சிறிதளவும் வெளிப்படுத்தாது தனியாகவே கடற்கரைக்குப் போனான்.

அங்கே அழகை இரசித்தபடியே செல்லும்பொழுது தன் காதலியான யாணு நிற்பதைக் கண்டு கண்ணில் கண்ணீருடன் அந்த மணல் தரையிலே முழந்தாள் படி இட்டு அவளையே பார்த்தபடி இருந்தான்.

கம்பனியில் வேலை என்று கூறியவள் இங்கே கடற்கரையில் ஒருவனை கட்டி அணைத்து முத்தமிட்டபடி இருப்பதை பார்த்த விமலுக்கு வாழ்கையே வெறுத்துப் போக எனக்கு துரோகம் இழைக்க இவளுக்கு எப்படி மனசு வந்தது என்று அவனுக்குள்ளே கேட்டபடி எழுந்து வீட்டிற்கு வந்து பேனாவை எடுத்து தாளில் கண்ணீர் துளி சிந்த எழுத ஆரம்பித்தான்.

“யாணு என்னை பிடிக்கவில்லை என்று ஒரு வார்த்தை கூறி இருந்தால் நானே விலகி இருப்பேனே? எல்லாமுமாக இருந்த நீ என்னை பிரிவதை என்னால் தாங்கிட முடியவில்லை, அன்னை மடி தருவேன் என்று சத்தியமும் செய்தாய்.

என்னை உயரத்தில் வைத்து பார்ப்பாய் என்றாய். இப்போது உன்னை விட்டு உயரமாக போகிறேன் பார்த்துக் கொள். உந்தன் மடி இல்லை என்றால் என்ன? இந்த மண்ணின் மடியில் தலை சாய்த்து என் அன்னை மடி காணப்போகிறேன், கூற முடியா வலியோடு உண்மையாய் காதலித்த ஒருவனாய் உயிரையும் இப்போதே விடுகிறேன்.’’

இது என் வாக்குமூலம் இல்லை. நீ புள்ளி இட்டு வரைந்த என் வாழ்க்கையின் கோலம் என்று தன் காதலின் வலியை எழுத்துகளில் புதைத்தவன் யாணுவின் காதல் நினைவுச்சின்னமாய் பாதுகாத்த அவள் துப்பட்டாவை முத்தமிட்டபடி எடுத்து கழுத்திலே போட்டு தொங்கி அவளை நினைத்தபடியே மூச்சடக்கி உயிரை விட்டான். நன்றி. என்று எழுதிவிட்டு தன் புனைப் பெயரான “வன்னித் தமிழ் மறவன்” என்று எழுதி முடித்து பேனாவை கண்ணீரோடு மேசையில் வைத்தவன் நண்பனுக்கு போன் செய்து “நண்பா என்னோட (இலட்சியக் காதல்) நாவலை எழுதிட்டேன்”

என்று வலி கலந்த குரலில் கூற, “எப்படிடா முடிவு எழுதுறது எண்டு தெரியாம இவ்வளவு நாளா இருந்தியே எப்படி இப்ப மட்டும் எழுதி முடிச்சாய்” என்று நண்பனும் கேட்க

“ஒன்றை இழந்தால் தான் இன்னொன்று கிடைக்கும் என்பது உண்மைதான்டா” என்று கண்ணீரோடு அழைப்பைத் துண்டித்தான்.

சிறிது நேரத்தில் விமலின் நண்பண் போன் எடுத்து “நீ எழுதிய நாவலை எனக்கு அனுப்புடா. வேர்ல்ட் லெவல்ல ஒரு போட்டி நடக்குது. அதுக்கு நான் ஒரு மெம்பரா போறேன். திரும்ப வர ஒரு வாரமாகும். உன்னோட நாவலையும் கொடுக்கிறேன். உன் நாவலுக்கு வரவேற்பு கிடைக்கும். உன் ஆசைப்படி பெரிய எழுத்தாளர்



ஆகிடலாம்”

“சரிடா அனுப்புறேன். நீயே பாத்துக்கோ. என்னை இப்போ தனியா விடு” என்று கூறிவிட்டு போனை துண்டித்தான்.

அப்போது யாணு விமலுக்கு போன் எடுத்தாள். விமலோ அவள் செய்த துரோகத்தால் போன் எடுக்கவில்லை. பல முறை யாணு முயற்சித்தும் முடியாமல் போகவே, நேராக விமல் வீட்டிற்கு போனாள். அவளை பார்த்தவன் கோபம் கொண்டு அவளை ஏதுமே பேசவிடாமல் அடித்து வீட்டை விட்டு வெளியேற்றினான்.

சிறிது நாள் போக விமலின் நண்பன் வீட்டிற்கு வந்து “என்னடா விமல் இந்த கோலம். தாடி எல்லாம் வளர்த்து வீடே சரக்கு போத்தலும் சிகரட் புகையால நிறைஞ்சு இருக்கேடா. என்னடா ஆச்சு உனக்கு.”

“என்ன இப்போ வந்திருக்கிற. ஏதும் சரக்கு கொண்டு வந்தியா, குடுத்துட்டு மூடீட்டு உன்ர வேலையைப் பாத்துட்டு போ.”

“என்னடா நீ குடிக்கிறதே இல்ல. சரக்கு கேட்குற இப்போ.”

“அவதான் போய்ட்டாளே எனக்கு இனி யாரு இருக்கா.”

“யார்டா சொன்னது அவ போய்ட்டா எண்டு. என்னடா பைத்தியகாரன் போல உளறுற”

“யாணு உன்ன பாக்க வரலையா”

“வந்தாடா எனக்கு செய்த துரோகத்துக்கு அடிச்சே துரத்திட்டன்.”

“பைத்தியகாரா என்னடா சொல்லுற. யாணு எங்கடா துரோகம் செய்தாள். உன்ர இலட்சியத்துக்கு அவள் உன்னை விட உழைச்சவள்டா.

உன்ன பெரிய எழுத்தாளனாப் பார்கணும் எண்டு அவளுக்கும் ஆசை இண்டைக்கு நீ யார் தெரியுமா? உலக எழுத்தாளர் பட்டியலில நீயும் ஒருத்தன். அதுக்கு காரணமே அவள் தாண்டா, நீ நாவலை எழுதி முடிக்க இயலாம இருந்தாய் அதனால யாணு தான் அதுக்கு ஒரு வழி இருக்கு எண்டு, நீ கடலுக்கு வார நேரம் பாத்து அவ சித்தப்பா மகனை கட்டி பிடிச்சு முத்தம் கொடுத்தா,

அது அவ தம்பிடா, அப்போவாது நீ பீல் ஆகி உன்ர காதல் நாவலுக்கு ஏதும் வழி கிடைக்கும் எண்டு அவள் இப்படி செய்தாள்டா.

இது தெரியாம அதை சொல்ல வந்த அவளையே அடிச்சு துரத்திட்டியேடா, இது தெரியாதே எனக்கு என்றதும் விமல் அருகில் இருந்த சோபாவில் நிலை தடுமாறி விழுந்தான்.

அவள் காதலை உணர்ந்தவன் அதேகணம் யாணு வீட்டிற்கு ஓடிப் போய் திடீரென வீட்டுக்குள் நுழைந்து வீட்டிலே அம்மா அப்பா சகோதரரோடு ஒன்றாக இருந்த யாணுவை பிடித்து முத்தம் செய்தபடி “சாரி டீ பொண்டாட்டி” என்று தன் காதலை வெளிப்படுத்தினான்.

இதைப் பார்த்த யாணுவின் பெற்றோர் திகைத்துப் போய் நின்றனர்.

**முற்றும்**

# நடிப்பு எனது கனவு

– ஐஸ்வர்யா மேனன்



‘காதலில் சொதப்புவது எப்படி’ என்ற படம் மூலம் அறிமுகமான நடிகை ஐஸ்வர்யா மேனன் வாசகர்களுக்காக மனம் திறந்தவை...

என்னுடைய அண்ணன் டொக்டர், நான் என்ஜினியரிங் முடிச்சிருக்கேன். சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. அப்பா, அம்மா ரொம்பவே சப்போர்ட் பண்ணாங்க.

நிறைய விளம்பரப் படங்களில் நடித்து, ஸ்கிரீன் டெஸ்ட், ஒடிஷன்ஸ் எல்லாம் கொடுத்துத்தான் சினிமா வாய்ப்பு கிடைச்சது.

**கதாநாயகி ஆனது உங்கள் கனவா, எதிர்பாராமல் கிடைத்த வாய்ப்பா?**

நான் நினைத்தது நிறைவேறியிருச்சு. ஏனென்றால் சிறு வயசில நடிகையாக வேண்டும் என்பது என்னோட கனவு.

**பிற மொழி, தமிழ் மொழியில் நடித்த அனுபவம்?**

நான் தமிழ்ப் பொண்ணுதான். தமிழில் நடிப்பது ரொம்ப ஈசி. மற்ற மொழிப் படங்களை உள்வாங்கி நடிப்பது கொஞ்சம் சிரமம்தான்.

**உங்களின் ரோல் மொடல்?**

என்னுடைய அம்மாதான். ஏனென்றால், எனது அம்மா ஒரு தொழில் முனைவோர். அனைத்து விடயங்களிலும் சிறப்பாக வழிநடத்தக் கூடியவர்.

**எந்த இயக்குநரின் படத்தில் நடிக்க விருப்பம்?**

ஷங்கர், மணிரத்னம், ராஜமௌலி என சொல்லிக் கொண்டே போகலாம்.

**நடித்துக் கொண்டிருக்கும் படங்கள்?**

அசோக் செல்வனுடன் ஒரு படம் நடிச்சிருக்கேன். ரிலீஸுக்காக வெயிட்டிங். இரு படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறேன்.

**மாடர்னா இருக்கீங்க... கிராமத்துக் கதை கிடைத்தால்?**

நடிப்பை வெளிப்படுத்தக்கூடிய கேரக்டர் கிடைத்தால் நடிப்பேன்.

**சினிமாவுக்கு வராவிட்டால்**

நடிப்பு எனது கனவு. எப்படியாவது சினிமாவுக்குள் நுழைவதே எனது இலட்சியமாக இருந்தது.

**உடல், மனதை அழகாக வைக்க?**

தியானம் செய்கிறேன். மனசுல நிம்மதி, சந்தோஷம் இருக்கணும். நான் எப்பவுமே சந்தோஷமாக இருக்க முயற்சி பண்ணுவேன்.

# ஹீரோயின் ஆனார் ரக்ஷிதா



**பெரிய திரையிலிருந்து சின்னத்திரைக்கு ஹீரோயின்கள் வந்த காலம் மாறி இப்போது சின்னத்திரையிலிருந்து பெரிய திரைக்கு ஹீரோயின்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். வாணி போஜன், ப்ரியா பவானி சங்கர் ஆகியோர் சமீபத்திய உதாரணங்கள்.**

**இவர்கள் வரிசையில் இப்போது சரவணன் மீனாட்சி புகழ் ரக்ஷிதா மகாலட்சுமியும் ஹீரோயின் ஆகிறார். பிரிவோம் சந்திப்போம் தொடரில் அறிமுகமான இவர் அதன் பிறகு இளவரசி, நாச்சியார், நாம் இருவர் நமக்கு இருவர் ஆகிய தொடர்களில் நடித்தார். தொடர்ந்து ஜீ தமிழ் தொலைக்காட்சியில் மிஸ்டர் அண்ட் மிஸ்சஸ் கில்லாடி, ஜூனியர் சினியர் போன்ற பல ரியாலிட்டி ஷோக்களில் கலந்துகொண்டார்.**

**ஏற்கெனவே பாரிஜாதா என்ற கன்னடப் படத்திலும், உப்புக்கருவாடு என்ற தமிழ்ப் படத்திலும் இரண்டாவது நாயகியாக நடித்தவர், இப்போது கன்னடப்படம் ஒன்றின் மூலம் ஹீரோயின் ஆகிறார்.**

# தென்னிந்திய மொழிகளில் பிசியாகும் வேம்புலி



சமீபத்தில் வெளியான சார்பட்டா பரம்பரை படத்தில் ஆர்யாவுக்கு சரிநிகர் சமானமாக வேம்புலியாக களத்தில் நின்று கவனம் ஈர்த்தவர் ஜான் கொக்கன். வீரம் உள்ளிட்ட சில படங்களில் நடித்திருந்தாலும் சார்பட்டா பரம்பரைதான் அவரை சரியாக அடையாளம் காட்டி இருக்கிறது.

கட்டுமஸ்தான அவரது சிக்ஸ் பேக் உடல் அமைப்புத்தான் அவருக்கு வேம்புலி கேரக்டரைப் பெற்றுத் தந்தது. சார்பட்டா படத்திற்காக 3 மாதங்கள் ஆர்யாவுடன் சண்டைப்பயிற்சி எடுத்துக் கொண்டுதான் நடித்துள்ளார். தற்போது தென்னிந்திய மொழிகளில் பிசியான நடிகராகி வருகிறார். குறிப்பாக வில்லன் கேரக்டர்கள் அதிக அளவில் வருகின்றன.

தற்போது கன்னடத்தில் கே.ஜி.எப். 2ஆம் பாகத்தில் நடித்து வரும் அவர், புனித் ராஜ்குமாருக்கு வில்லனாக ஒரு படத்தில் நடிக்கிறார். இதுதவிர ஒரு தெலுங்குப் படத்திலும், இரண்டு தமிழ்ப் படங்களிலும் நடிக்கிறார். இதற்கான அறிவிப்புகள் விரைவில் வெளியிடப்பட இருக்கின்றன.



பா.ரஞ்சித் உள்ளிட்ட சார்பட்டா பரம்பரை படக்குழுவினரை கமல் சந்தித்து பாராட்டியபோது...




## பிரபுதேவாவின் ‘பொய்க்கால் குதிரை’




சந்தோஷ் பி.ஜெயக்குமார் இயக்கத்தில் பிரபுதேவா நடிக்கும் படத்திற்கு பொய்க்கால் குதிரை எனப் பெயரிட்டுள்ளனர். படத்தின் முதல் போஸ்டர் நேற்று வெளியானது. இப்படத்தில் பிரபுதேவா ஒரு காலில்லாத மாற்றுத்திறனாளியாக நடிக்கிறார். வரலட்சுமி சரத்குமார், ரைசா வில்சன் ஆகியோர் நாயகியராக நடிக்கின்றனர். பல்லூ ஒளிப்பதிவு செய்யும் இப்படத்திற்கு, இமான் இசையமைக்கிறார். படப்பிடிப்பு சென்னையில் தொடங்கி நடந்து வருகிறது. ஹர ஹர மஹாதேவகி, இருட்டு அறையில் முரட்டுக் குத்து, இரண்டாம் குத்து என ஆபாசப் படங்களை இயக்கிய சந்தோஷ் பி.ஜெயக்குமார் இப்போது அதிலிருந்து விலகி இந்த படத்தை ஆக்ஷன் படமாக எடுக்கிறார்.

# விபத்து குறித்து யாஷிகா

தமிழ் சினிமாவில் கவர்ச்சி வேடங்களில் நடித்து வந்தவர் யாஷிகா ஆனந்த். கடந்த சில நாட்களுக்கு முன்பு தனது நண்பர்களுடன் மகாபலிபுரத்திலுள்ள ரிசார்ட்ஸில் ஒரு பார்ட்டியில் கலந்து கொண்டு திரும்பியபோது விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்தார். இந்த விபத்தில் அவரது தோழி பவனி உயிரிழந்தார்.

தற்போது மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பியுள்ள யாஷிகா விபத்து எப்படி நடந்தது என்பது குறித்துப் பேசியுள்ளார். அவர் கூறியிருப்பதாவது:

விபத்து நடந்த அன்று இரவு நாங்கள் 4 பேர் கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள ஒரு ரிசார்ட்டில் இரவுணவு சாப்பிடச் சென்றோம். அங்கிருந்து இரவு 11 மணியளவில் சென்னைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தோம். அப்போதுதான் அந்த விபத்து நிகழ்ந்தது. காரை ஓட்டியது நான்தான். ஆனால், நிச்சயமாக நான் வேகமாக ஓட்டவில்லை. சாலை மிகவும் இருட்டாக இருந்தது. துரதிர்ஷ்டவசமாக சாலையின் நடுவே இருந்த தடுப்புச் சுவரைக் கவனிக்காமல் அதன் மீது மோதிவிட்டேன். மோதிய வேகத்தில் கார் தலைகீழாகக் கவிழ்ந்து மூன்று முறை உருண்டது.

எனக்கு பக்கத்து சீட்டில் பவனி அமர்ந்திருந்தார். அவர் சீட் பெல்ட் அணிந்திருக்கவில்லை. காற்று வாங்குவதற்காக ஜன்னல் கண்ணாடியையும் திறந்து வைத்திருந்தார். எனவே, கார் விபத்துக்குள்ளானபோது அவர் ஜன்னலுக்கு வெளியே சென்று விழுந்தார். அவரது தலையில் பலமாக அடிபட்டது. மற்ற மூவரும் காருக்கு உள்ளேயேதான் இருந்தோம்.

காரின் கதவுகள் லொக் ஆகி விட்டதால் எங்களால் வெளியேற முடியவில்லை. பின்னர் சன் ரூப் கண்ணாடியைத் திறந்து வெளியேறினோம். சில நிமிடங்களிலேயே அங்கு பெரும் கூட்டம் கூடிவிட்டது. என்னால் எழுந்து நிற்கக் கூட முடியவில்லை. என் உடல் முழுவதும் செயலிழந்து விட்டதைப் போல உணர்ந்தேன். நாங்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டோம். நான் குணமடைந்த பின்னரே பவனி இறந்த செய்தி என்னிடம் சொல்லப்பட்டது.

நான் அன்று குடிக்கவில்லை. எந்தவித போதைப் பொருட்களையும் பயன்படுத்தவில்லை. அது ஒரு சிறு கவனச் சிதறலால் ஏற்பட்ட ஒரு துரதிர்ஷ்டவசமான விபத்து. அது எங்கள் வாழ்க்கையையே மாற்றி விட்டது. அதற்கான முழுப் பொறுப்பையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஒரு மிகப்பெரிய குற்ற உணர்ச்சி என்னை ஆட்கொண்டிருக்கிறது. அதோடுதான் நான் இனி என்றென்றும் வாழ வேண்டும். நான் உயிர் பிழைத்திருக்கக் கூடாது என்று விரும்புகிறேன். பவானியும், பவானியின் பெற்றோர்களும் என்னை மன்னிப்பார்கள் என்று நம்புகிறேன். இவ்வாறு அவர் கூறியிருக்கிறார்.



# ஜான்வி கபூர்...



**மறைந்த ஸ்ரீதேவி மற்றும் தயாரிப்பாளர் போனி கபூரின் செல்லமான மூத்த மகள் ஜான்வி கபூர்.**

**அம்மா வழியில் தமிழ்ப் படத்தில் அறிமுகமாவார் என ரசிகர்கள் காத்திருக்க ‘அதெல்லாம் முடியாது, நாங்கதான் முதல் இன்ட்ரோ கொடுப்போம்...’ என பொலிவூட் சினிமாவில் ‘தடக்’ திரைப்படம் மூலம் அறிமுகமானார். காதல், டூயட், பிரிவு, சோகம் என முதல் படத்திலேயே தனக்கென தனி ரசிகர் பட்டாளத்தை அள்ளிக்கொண்டார் ஜான்வி. தொடர்ந்து ‘கோஸ்ட் ஸ்டோரீஸ்’, ‘அங்ரேஸி மீடியம்’, ‘குன்ஜான் சக்ஸேனா’, ‘ரூஹி’ என இவர் நடிப்பில் வெளியாகிவிட்டன.**

**அடுத்து ‘தோஸ்தானா 2’, ‘குட்லக் ஜெர்ரி’ உள்ளிட்ட படங்கள் ரிலீஸுக்குத் தயார். பெல்லி டான்ஸை முறையாகக் கற்றுக்கொண்ட ஜான்வி இன்ஸ்டா, டுவிட்டர் என எங்கும் தன் இடையை வெட்டி நடனமாடி அடிக்கடி ரசிகர்களுக்கு ஹார்ட் பீட் எகிற வைக்கிறார். சமீபத்தில் இவர் வெள்ளை உடையில் ஆடிய ‘தில்பர்’ பெல்லி டான்ஸ் இப்போது வரை வைரலாக உள்ளது.**

**ஜான்வி திரையைத் தவிர எங்கு சென்றாலும் ஷோர்ட்ஸ், ஸ்போர்ட்ஸ் டிரஸ் அல்லது வர்க் அவுட் டிரெஸ் சகிதமாக செல்வதையே வழக்கமாக வைத்திருக்கிறார். அதிலும் மறக்காமல் தன்னை நோக்கி ஒன் ஆகும் கெமராக்களுக்கும் கியூட் ஸ்மைலுடன் போஸ் கொடுக்கவும் மறப்பதில்லை.**

**இது ஒரு பக்கம் எனில் இன்னொரு பக்கம் ஜிம்மில், தான் செய்யும் வர்க் அவுட் வீடியோக்களையும் பகிர்ந்துவிடுவது அவரின் பிரதான வேலை.**

**கார் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அசால்ட்டாக தெருவில் நடந்து சென்று மும்பை மாநகரைப் பரிதவிக்க விடுவதில் அவருக்கு அப்படி ஓர் ஆனந்தம். ஒரு பக்கம் பப்ளிசிட்டிக்காகத்தான் ஜான்வி இதையெல்லாம் செய்கிறார் என விமர்சனம் எழுந்தாலும், அவரும் சரி அவரது ரசிகர்களும் சரி இதையெல்லாம் கண்டுகொள்வதே இல்லை. போனி கபூர் தயாரிப்பில் அஜித் நடிக்கும் ‘வலிமை’ படத்தில் ஒரு கெஸ்ட் ரோல் செய்வார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஜான்வியின் கால்ஷீட் பிசி காரணமாக கோலிவூட் என்ட்ரி இந்த முறையும் மிஸ் அகிவிட்டது.**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7